


# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:292 | 07-05-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

# தமிழக ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார் விஜய்!

## ஆளுநர் அழைக்காததால் பதவியேற்பு விழா தள்ளி போக வாய்ப்பு!

**சென்னை, மே 7:**

தமிழக ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை ஆளுநர் மாளிகையில் சந்தித்து, தவெக தலைவர் விஜய் ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் தவெக தலைவர் விஜய், ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை பிற்பகல் 3.30 மணி அளவில் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அவருடன் செங்கோட்டையன், ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்டோர் உடன் சென்றிருந்தனர்.


விஜய்யை வரவேற்ற ஆளுநர் அர்லேகர், அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இதையடுத்து, விஜய் ஆட்சி அமைக்க உரிமை கோரும் கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்தார்.

பதவியேற்பு விழாவை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நாளை காலை 11.30 மணி அளவில் பிரம்மாண்டமாக நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. முதல்வராக விஜய் நாளை பதவியேற்பார் என்று கூறப்படுகிறது. அவருடன் அமைச்சர்களும் பதவியேற்க உள்ளனர். அமைச்சரவையில் செங்கோட்டையன், ஜேசிடி. பிரபாகர், ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சிடிஆர். நிர்மல்குமார், மரிய வில்சன், ராஜ்மோகன், அருண் ராஜ், சத்தியபாமா, விஜயலட்சுமி, ஸ்ரீநாத் உள்ளிட்டோர் இடம்பெற வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.



சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 உறுப்பினர்களின் ஆதரவு தேவை எனும் நிலையில், காங்கிரஸ், சிபிஐ, சிபிஎம், விசிக ஆகிய கட்சிகளின் ஆதரவை விஜய் கோரி இருந்தார். காங்கிரஸ் கட்சி 5 தொகுதிகளிலும், சிபிஐ, சிபிஎம், விசிக ஆகியவை தலா 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளதால், இக்கட்சிகள் இணைந்தால் பெரும்பான்மையை எளிதில் பெற முடியும்.



### காங்கிரஸ் கட்சி ஆதரவு

விஜய்யின் கோரிக்கையை ஏற்று, தவெகவுக்கு ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி அறிவித்தது. இது தொடர்பாக அக்கட்சியின் தமிழக பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவை வழங்குமாறு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு தவெக தலைவர் விஜய் முறைப்படி கோரிக்கை விடுத்திருந்தார். இதை ஏற்று, தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைப்பதற்கு முழு ஆதரவை வழங்க காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது. எந்தவொரு வகுப்புவாத சக்தியையும் இந்தக் கூட்டணியில் சேர்க்காமல் தமிழக வெற்றி கழகம் விலக்கி வைப்பதை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆதரவு வழங்கப்படுகிறது.

இரு கட்சிகளுக்கும் இடையிலான பரஸ்பர மரியாதை, அவரவர்க்கு உரிய பங்கு, கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இந்தக் கூட்டணி, தற்போதைய அரசாங்கத்தை அமைப்பதற்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி அமைப்புகள், மக்களவை மற்றும் மாநிலங்களவை தேர்தல்களிலும் தொடரும்" என தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராஜேஷ் குமார், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் விஜய்யை பனையூர் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

சிபிஐ, சிபிஎம், விசிக ஆகிய கட்சிகள் தவெக கூட்டணியில் இணைவது குறித்து தங்கள் கட்சியினருடன் ஆலோசித்து தெரிவிப்பதாக கூறியுள்ளனர். அதிமுக தரப்பிலும், விஜய்க்கு ஆதரவு அளிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்ற தவெக, ஆட்சி அமைக்க ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்தித்து நேற்று (மே 6) உரிமை கோரிய நிலையில், ஆதரவு எம்.எல்.ஏக்களின் முழுப் பட்டியல் கொடுக்க வேண்டும் என ஆளுநர் மாளிகை தரப்பில் கோரப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின்றன.

நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் முதல்வர் பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரும் நிலையில், விஜய் திட்டமிட்டபடி முதல்வராகப் பதவியேற்பாரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 107 தொகுதிகளில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்றது. ஆட்சி அமைக்க 118 எம்.எல்.ஏக்களின் ஆதரவு தேவை என்பதால் மற்ற கட்சிகளிடன் தவெக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. தவெக ஆட்சி அமைக்க காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சியில் 5 எம்.எல்.ஏக்கள் உள்ளனர். இவர்கள் விஜய்க்கு ஆதரவு அளித்துள்ளதால், தவெகவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 112 ஆக உயந்துள்ளது.

எனினும், பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க தவெகவுக்கு இன்னும் 6 உறுப்பினர்கள் தேவைப்படுகிறது.

இந்நிலையில், ஆதரவு உறுப்பினர்களின் முழுப் பட்டியலை கொடுக்க வேண்டும் என ஆளுநர் மாளிகை தரப்பில் தவெகவிடம் கோரப்பட்டுள்ளது. இதனால், திட்டமிட்டபடி விஜய் பதவியேற்பாரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மேலும் ஆட்சி அமைக்க ஆளுநர் அழைக்காததால் பதவியேற்பு விழா தள்ளி போக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## இன்றைய பஞ்சாங்கம்

07.05.2026 சித்திரை 24
வியாழக்கிழமை

சூரிய உதயம் 5.55

**திதி:**
இன்று காலை 8.21 வரை பஞ்சமி பின்பு சஷ்டி.

**நட்சத்திரம்:**
இன்று மாலை 4.45 வரை பூராடம் பின்பு உத்திராடம்.

**யோகம் :**
இன்று இரவு 11.56 வரை சாத்தியம் பின்பு சுபம்.

**கரணம்**
இன்று காலை 8.21 வரை தைதுலம் பின்பு இரவு 9.02 வரை கரசை பின்பு வணிசை

**யோகம் :**
இன்று அதிகாலை 5.54 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்

**சந்திராஷ்டமம் :**
இன்று மாலை 4.45 வரை ரோகிணி பின்பு மிருகசீரிடம்.

**நல்ல நேரம்**
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30

**இராகு காலம்**
பிற்பகல் 1.30 – 3.00..

**எமகண்டம்**
காலை 6.00 – 7.30.

**குளிகை**
9.00 – 10.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## தமிழ்நாடு 16வது சட்டப்பேரவை கலைப்பு: ஆளுநர் அறிவிப்பு!



**சென்னை, மே 7:**

சட்டப்பேரவை கலைக்கப்பட்டதற்கான அறிவிப்பை ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வெளியிட்டுள்ளார்.

ஆளுநரின் உத்தரவு மே 5 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளதாக ஆளுநர் மாளிகை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தோல்வி அடைத்ததையடுத்து, திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தனது முதல்வர் பதவியை செவ்வாய்க்கிழமை ராஜிநாமா செய்தார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் திங்கள்கிழமை வெளியானது. இதில் தவெக 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

ஆளுங்கட்சியான திமுக கூட்டணி 73 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதையடுத்து மு.க. ஸ்டாலின் தனது முதல்வர் பதவி மற்றும் அமைச்சரவையின் ராஜிநாமா கடிதத்தை ஆளுநர் ஆர். வி. அர்லேகருக்கு செவ்வாய்க்கிழமை அனுப்பி வைத்தார். மு.க. ஸ்டாலினின் ராஜிநாமா கடிதம் ஏற்கப்பட்டதாக ஆளுநர் மாளிகை தெரிவித்து இருந்தது.

# ஆட்சியை பிடிக்க திமுக-அதிமுக கூட்டணி?

**சென்னை, மே 7:**

தமிழகத்தில் ஆட்சியை பிடிக்க தேவையான மெஜாரிட்டி விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்துக்கு இல்லை. மேலும் விஜய் ஆட்சி அமைக்க அனுமதி கோரியும் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அதிகாரப்பூர்வமாக அழைப்பு விடுக்கவில்லை. இந்நிலையில் தான் திமுக - அதிமுக இணைந்து தமிழகத்தில் ஆட்சியை பிடிக்க உள்ளதாக இணையதளங்களில் தகவல் பரவி வருவதோடு, 'ஒன்றிணைந்த திராவிட கட்சி' என்று லோகோ டிரெண்ட் ஆகி வருகிறது. இது தமிழக அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




தமிழகத்தில் மெஜாரிட்டியுடன் ஆட்சியை பிடிக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு வேண்டும். நடந்து முடிந்த தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக வந்துள்ளது. இதில் விஜய் 2 தொகுதிகளில் வென்றுள்ளார். இதில் ஒரு தொகுதியில் அவர் ராஜினாமா செய்ய வேண்டும்.

இந்நிலையில் தான் மொத்த எம்எல்ஏக்களின் எண்ணிக்கை 234ல் இருந்து 233 ஆக சரியும். அதன்படி மெஜாரிட்டிக்கு 117 எம்எல்ஏக்கள் வேண்டும். தற்போது காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளார். இதன்மூலம் காங்கிரஸ் கட்சியின் 5 எம்எல்ஏக்களின் சப்போர்ட் தவெகவிற்கு கிடைத்துள்ளது. இதன்மூலம் தவெகவின் பலம் 112 ஆகஅதிகரித்துள்ளது. இன்னும் 5 எம்எல்ஏக்கள் தேவையாக உள்ளது.

இந்நிலையில் முதலில் முதல்வராக பதவியேற்றுவிட்டு மெஜாரிட்டியை நிரூபிக்க விஜய் நினைக்கிறார். அதன்படி இன்று அவர் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரினார். ஆனால் ஆளுநர் 117 எம்எல்ஏக்களின் ஆதரவு வேண்டும் என்று கூறியுள்ளார். இதனால் விஜய்யை தற்போது வரை ஆட்சியமைக்க ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அழைக்கவில்லை.

இதற்கிடையே தான் திடீரென்று இணையதளங்களில் ஒரு தகவல் பரவி வருகிறது. அதாவது விஜய்க்கு மெஜாரிட்டி கிடைக்காத நிலையில் பரம எதிரிகளாக உள்ள திமுகவும், அதிமுகவும் சேர்ந்து ஆட்சியமைக்க முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தீயாய் பரவி வருகிறது. திமுகவுக்கு 59 எம்எல்ஏக்கள், அதிமுகவிற்கு 47 எம்எல்ஏக்கள் என்று 106 பேர் உள்ளனர்.

இதுதவிர அதிமுக கூட்டணியில் பாமகவிற்கு 5 எம்எல்ஏக்கள், அமமுவிற்கு ஒரு எம்எல்ஏக்கள் உள்ளனர். இவர்களை சேர்த்தால் மொத்த எம்எல்ஏக்களின் எண்ணிக்கை 112 ஆக உயரும். இதுதவிர திமுக கூட்டணியில் 2 கம்யூனிஸ்ட், விசிகவிடம் 6 எம்எல்ஏக்களும், தேமுதிகவிடம் ஒரு எம்எல்ஏவும் உள்ளது. இவர்களை சேர்த்தால் 119 எம்எல்ஏக்களாகும். இதன்மூலம் மெஜாரிட்டியை நிருபித்து ஆட்சியை பிடிக்க அதிமுக - திமுக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இதுதொடர்பாக பத்திரிகையாளர்கள் பலரும் எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவிட்டு வருகின்றனர். இதற்கிடையே தான், "ஒன்றிணைந்த திராவிடக் கட்சி" என்ற பெயரில் புதிய லோகோ ஒன்று இணையதளங்களில் டிரெண்ட் ஆகி வருகிறது. அதில் திமுகவின் உதயசூரியன் சின்னம் மற்றும் அதிமுகவின் இரட்டை இலை சின்னத்தை இணைத்து 'ஒன்றிணைந்த திராவிடக் கட்சி" என்றும், United Dravidian Party என்றும் எழுதப்பட்ட லோகோ பலராலும் பகிரப்பட்டு வருகிறது. இது தவெகவினரை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.







## திருக்குறள் குறள்-612

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு**



தொழிலாகிய குறையைச் செய்யாமல் கைவிட்டவரை உலகம் கைவிடும், ஆகையால் தொழில் முயற்சி இல்லாதிருத்தலை ஒழிக்க வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



பசி அடங்கிய
பின்பு கிடைக்கும்
உணவும் ....
மனம் வெறுத்த
பின்பு கிடைக்கும்
அன்பும் பயனே
இல்லாதது ...


**உஷா முத்து ராமன்**

## 42-வது நாள் மண்டல பூஜை ஸ்ரீகரியகாளியம்மன் கோவிலில் நைவேத்தியம் ஆருதனை



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், பூந்துறை ஸ்ரீஅங்காளம்மன், ஸ்ரீஅலமேலு மங்கை லட்சுமி சமேத ஸ்ரீதாமோதர பெருமாள், ஸ்ரீ பாகம்பிரியாள் உடனமர் புஷ்பவனேஸ்வரர் கோவில்களில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நேற்று 06.05.2026 புதன்கிழமை செங்கரைப்பாளையம் காடைகுல குடும்ப மக்களால் 42-வது நாள் மண்டல பூஜை நடத்தப்பட்டது. கூடுதலாக செல்லவிநாயகர் கோவிலில் அபிஷேகம், ஆராதனை மற்றும் ஸ்ரீகரியகாளியம்மன் கோவிலில் நைவேத்தியம் ஆருதனை நடத்தப்பட்டது. திரளாகக் கலந்து கொண்ட மண்டலபூஜை 600 நபர்களுக்கு அன்னதானத்துடன் இனிதே நிறைவுற்றது. நன்றி! வணக்கம்! வாழ்க வளமுடன்

## சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு





**பொள்ளாச்சி மே 07:**
ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன்k திருக்கோவிலில் அமைந்திருக்கும் விநாயக பெருமானுக்கு சித்திரை மாத சங்கடஹர சதுர்த்தி முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், அரிசிமாவு, அருகம்புல் பொடி, அபிஷேகப் பொடி, மஞ்சள், சந்தனம், விபூதி, சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் விநாயக பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். திருவில்லிபுத்தூர் வட்டக்கிளை 43வது அமைப்பு தினம்



**திருவல்லிபுத்தூர், மே 07:**
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தமிழக அளவில் அரசு ஊழியர்களின் நலன்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் 1984 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு நேற்றுடன் 42 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளது.

அதன் அடிப்படையில் நேற்று 43 வது அமைப்பு தினம் தமிழ்நாட்டின் அனைத்து வட்டக்கிளைகளிலும் கொடியேற்றுவதன் ஒரு பகுதியாக திருவில்லிபுத்தூர் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் அலுவலகம் முன்பாகவும் திருவல்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம் முன்பாகவும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியேற்று விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வட்டக் கிளை தலைவர் P. பொன்ராஜ் தலைமை தாங்கினார் வட்டக் கிளை செயலாளர் P. திருப்பதி ராஜ் முன்னிலை வகித்தார் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியை வட்டக் கிளை தலைவர் P. பொன்ராஜ் நெடுஞ்சாலைத்துறை அலுவலகம் முன்பாக சங்க கொடி ஏற்றினார்.

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் P. பாலகிருஷ்ணன் ஏற்றி வைத்தார். நகராட்சி முன்பாக சாலை பணியாளர் சங்க கோட்ட செயலாளர் தேவராஜ் கொடியேற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலை துறை அலுவலர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

சாலை பணியாளர் சங்க நிர்வாகிகள் கோபால் ஆறுமுகம் முன்னிலை வகி த்தனர். சங்க அமைப்பு தினத்தை முன்னிட்டு அரசு ஊழியர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

## சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு





**திருவண்ணாமலை, மே 07:**
திருவண்ணாமலை மாவட்டம்கீழ்பென்னாத்தூர் அருள்மிகு ஸ்ரீமீனாட்சி உடனமர் சுந்தரேசுவரர் திருக்கோவிலில் அமைந்திருக்கும் ஸ்ரீவலம்புரி விநாயகருக்கு சித்திரை மாத சங்கடஹர சதுர்த்தி முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், அரிசிமாவு, அருகம்புல் பொடி, அபிஷேகப் பொடி, மஞ்சள், சந்தனம், விபூதி, பன்னீர், கங்கைநீர், தேன், கரும்பு சாறு, புனித கலச நீர் முதலிய பதிமூன்று வகை சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வலம்புரி விநாயகரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சோகத்தூர் நரசிம்மர் கோயில் தேர்த் திருவிழா..!



**வந்தவாசி, மே 07:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சோகத்தூர் ஸ்ரீயோக நரசிம்மர் கோயில் பிரம்மோற்சவ விழாவில் நேற்று தேர்த் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த வைபவத்தில் உற்சவ மூர்த்திகள் தேரில் பவனி வந்தனர்.

முன்னதாக மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. இந்த வைபவத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## "ஈரம் காயாத 'கை'யால் நெரிபட்டு மரணித்தது அரசியல் நெறி" - காங்கிரஸ் மீது ஆ.ராசா சாடல்



**சென்னை, மே 07:**
'ஈரம் காயாத கையால் நெரிபட்டு மரணித்தது அரசியல் நெறி மட்டுமல்ல; அவசியமான 'அடிப்படை நாகரிகமும் தான்' என்று காங்கிரஸை திமுக எம்.பி ஆ.ராசா கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து ஆ.ராசா வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'ஈரம் காயாத 'கை'யால் நெரிபட்டு மரணித்தது 'அரசியல் நெறி' மட்டுமல்ல; அவசியமான 'அடிப்படை நாகரிக'மும் தான். வாழ்க ஜனநாயகம்' எனத் தெரிவித்துள்ளார்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் 108 தொகுதிகளைப் பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவாகியுள்ள தவெகவுக்கு, மேலும் 11 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படுகிறது. எனவே, காங்கிரஸ் கட்சியின் ஆதரவை கோரியிருந்தார். இதனையடுத்து திமுகவுடனான உறவை முறித்துக்கொண்ட காங்கிரஸ், தவெகவுடன் கூட்டணி அமைத்துள்ளது. இதன் காரணமாக காங்கிரஸின் 5 எம்எல்ஏக்களின் ஆதரவு தவெகவுக்கு கிடைத்துள்ளது.


தவெகவுடன் காங்கிரஸ் கூட்டணி அமைத்துள்ளதால், திமுக தரப்பு கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகிறது. இதற்கு தவெகவும் பதிலளித்து வருகிறது.

## சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு



**முசிறி, மே 07:**
திருச்சி மாவட்டம் முசிறி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோவிலில் அமைந்திருக்கும் விநாயக பெருமானுக்கு சித்திரை மாத சங்கடஹர சதுர்த்தி முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், அரிசிமாவு, அருகம்புல் பொடி, அபிஷேகப் பொடி, மஞ்சள், சந்தனம், விபூதி, சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, அருகம்புல் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் விநாயக பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கருடசேவை




பொன்னேரி ஸ்ரீகரி கிருஷ்ணா பெருமாள் திருக்கோயில் பிரம்மோற்சவம் 5ம் நாள் இரவு கருடசேவை.

## கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் இரட்டை இலை சின்னத்தில் வெற்றி



திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் அக்ரி.எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இரட்டை இலை சின்னத்தில் வெற்றி பெற்றார். வெற்றி பெற்ற சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் பெற்றுக் கொண்டார். தமிழ்நாடு பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு



**சென்னை, மே 07:**
சோழிங்கநல்லூர் புதிய குமரன் நகரில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ விஜய கணபதி திருக்கோயிலில் சங்கட சதுர்த்தியை முன்னிட்டு ராமகிருஷ்ணன் ஐயர் அவர்களால் விஜய கணபதிக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, அருகம்புல் மாலைகளால் அலங்கரித்து, ராஜ அலங்காரம் செய்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் விஜய கணபதியை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திமுக கூட்டணியில் தொடர்கிறோம்: பிரேமலதா திட்டவட்டம்

**விருத்தாசலம், மே 7:**

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதியில் நேற்று வெற்றிச் சான்றிதழை தேர்தல் அலுவலர் விஷ்ணு பிரியாவிடம் பெற்றார்.

அதைத்தொடர்ந்த செய்தியாளர்களிடம் பேசிய பிரேமலதா, "நாங்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தொடர்கிறோம். விஜய்க்கு வாழ்த்துகள். அவர், எப்போதும் எங்கள் வீட்டுப் பிள்ளை. கேப்டனால் வளர்ந்தவர்.நாங்கள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியைத் தொடர்கிறோம்" என்றார்.

இதனிடையே அவர் வெளியிட்ட அறிக்கையில், வெற்றிபெற்றோருக்கு வாழ்த்துகள். தோல்விக்காக யாரும் மனம் தளர வேண்டாம். ஒரு மாயை போன்றது 2026 தேர்தல். இந்த தேர்தலில் வெற்றி தோல்வி கணிக்க முடியாத வகையில் அமைந்துள்ளது. இது நிரந்தரமானது கிடையாது. மாற்றம் மட்டுமே மாறாதது. இதனை உணர்ந்து சவால்களை தைரியமாக சந்திப்போம். அதோடு தேர்தல் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பாஜகவைப்போல கூட்டணிக் கட்சிகளை அழித்து எங்களுக்கு பழக்கமில்லை! ஜோதிமணி

**சென்னை, மே 7:**

பாஜகவைப்போல கூட்டணிக் கட்சிகளை அழித்து எங்களுக்கு பழக்கமில்லை என காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் தனது எக்ஸ் பக்கத்தில்,

"காங்கிரஸ் கட்சியைப் பற்றிப் பேச பாஜகவிற்கு எந்த அருகதையும் இல்லை.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அனைத்து கூட்டணி கட்சிகளையும் அழித்துவிட்டு அவர்கள் இடத்தில் ஆட்சியைப் பிடித்துள்ளதை பாஜக நினைவில் கொள்ளட்டும். அஸ்ஸாம் கண பரிஷத், சிரோமணி அகாலி தளம், ஐக்கிய ஜனதா தளம், மதச்சார்பற்ற ஜனதா தளம், ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சி, சிவசேனை, ஹெச்விஎம், அதிமுக உள்பட பாஜக அழித்தொழித்த கட்சிகளின் பட்டியல் வெகு நீளம். பாஜக தமிழ்நாட்டை அழிக்கத் துடிப்பதால்தான் அதைக் காப்பாற்ற வேண்டிய வரலாற்றுக் கடமையை நாங்கள் செய்ய வேண்டியுள்ளது. எங்களுக்கு எந்தக் கூட்டணிக் கட்சிகளையும் அழித்துப் பழக்கமில்லை" என்று பதிவிட்டுள்ளார். தமிழகத்தில் தவெகவுக்கு பெரும்பான்மை கிடைக்காத நிலையில் திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சி ஆதரவு அளிக்கலாம் என்று கூறப்படுகிறது. இதுதொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் எழுந்து வருகின்றன.

## நன்றிகெட்ட காங்கிரஸ்: ஆர்.எஸ். பாரதி ஆவேசம்

**சென்னை, மே 7:**

திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ். பாரதி அளித்த பேட்டி: திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் தற்போது விலகிதவெக உடன்கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது, திமுக எப்படி பார்க்கிறது என்ற கேள்விக்கு, "திமுக தொண்டர்கள் இதனை மகிழ்ச்சியாக வரவேற்கிறார்கள். காங்கிரஸ், எங்கள் கூட்டணியில் இருந்து விலகுவதில் எந்தக் கவலையும் இல்லை" என்றார்.

இது தொடர்பாக ராகுல் காந்தியோ, காங்கிரஸ் தலைமையோ ஏதாவது சமாதானப்படுத்த முயற்சித்தார்களா? என்றகேள்விக்கு, "எங்களுக்கு அதைப்பற்றிகவலையில்லை, தலைக்குமேல் வெள்ளம் போனபின்பு, ஜான் என்ன, முழம் என்ன?. வந்தால் அவர்களோடு, வராவிட்டால் அவர்கள் இல்லாமல், காங்கிரஸ் எதிர்த்தால் அவர்களையும் எதிர்த்து அரசியல்செய்வோம், கட்சியையும்நடத்துவோம்" என்றுபதில் தெரிவித்தார். இது நாடு முழுவதும் இந்தியா கூட்டணியை பலவீனப்படுத்தும் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறதே? நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? என்ற கேள்விக்கு, "இந்தியா கூட்டணியே இல்லை, நாடாளுமன்றத் தேர்தலோடு முடிந்துவிட்டது. நிதீஷ் குமார், மமதா பானர்ஜி என ஒவ்வொருவராக சென்று விட்டார்கள். இருந்தது நாங்கள் மட்டும்தான். அவர்கள்தான் செல்கிறார்கள். இருந்ததற்கு நன்றி, நன்றிகெட்டவர்கள் போகட்டும்" என்று தெரிவித்தார்.

பாஜகவை தடுத்து நிறுத்துவதற்காக தவெகவுடன் செல்வதாக காங்கிரஸ் தரப்பில் கூறப்படுகிறதே என்ற கேள்விக்கு, "இந்தத் திருவிளையாடல்களுக்கெல்லாம் யார் காரணம் என்பது விரைவில் வெளிச்சத்துக்கு வரும், அப்போது இப்படி பேசுகிறவர்கள் தலைகுனிந்து நிற்க வேண்டும்" என்றார்.

## தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி புதிதல்ல: கார்த்தி சிதம்பரம்

**சென்னை, மே 7:**




விஜய் ஆட்சி... மக்களின் முடிவு. விஜய் அழைத்ததால் மதித்து செல்கிறோம்; தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி புதிதல்ல என்று காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களுடன் கூறியதாவது: தவெக தலைமையில் அமையவுள்ள புதிய அரசுக்கு ஆதரவளிக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றுபெற்றுள்ள தவெக தலைமையில் புதிய ஆட்சி அமைய வேண்டுமென தமிழ்நாட்டு மக்கள் முடிவு செய்துள்ளனர்.

தவெகவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் அனைத்து நிலைகளிலும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

தமிழ்நாட்டு மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள் என்றும், அந்த மாற்றம் தவெக தலைமையில் அமைவதோடு ஒரு மதசார்பற்ற கூட்டணியாக திகழ வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். எனவே, ஒருமனதாக, தவெக தலைமையில் அமையவுள்ள அரசுக்கு ஆதரவளிக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் ஒரு மாற்றத்திற்காக வாக்களித்துள்ளனர்; அவர்களின் இந்தத் தீர்ப்பை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். 1967-ஆம் ஆண்டு முதல் மாறி மாறி ஆட்சி செய்து வரும் இரண்டு பிரதான திராவிடக் கட்சிகளிடமிருந்து ஒரு மாற்றத்தையே மக்கள் விரும்பினர். குறிப்பாக இளைஞர்கள், பெண்கள் மிக உறுதியாக வாக்களித்துள்ளனர்.

எனவே, இவை அனைத்தையும் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, மக்கள் வழங்கியுள்ள இந்த ஆணையை மற்றும் தீர்ப்பை நாம் மதித்திட வேண்டும். இந்த ஆணை மற்றும் தீர்ப்பு ஆகியவை ஒரு மாற்றத்தையே வலியுறுத்துகின்றன. அதாவது, அந்த இரண்டு பிரதான திராவிடக் கட்சிகளில் ஒன்றின் தலைமையில் அமையாத ஒரு அரசாங்கத்திற்கான மாற்றத்தையே அவை கோருகின்றன."

இது ஒன்றும் வழக்கத்திற்கு மாறான செயல் அல்ல. தேர்தல்களில் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிடுவதும் வழக்கம். தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, எந்தவொரு அரசியல் கூட்டணிக்கும் முழுமையான பெரும்பான்மை கிடைக்காத சூழல் நிலவினால், ஒன்றுக்கொன்று எதிராகப் போட்டியிட்ட பிற அரசியல் கட்சிகள் ஒன்றிணைவது உண்டு. இது மிகவும் சாதாரணமாக நிகழும் ஒரு நிகழ்வு தான்.

அரசியல் கட்சிகளை அணுகும் முயற்சியில், தவெக தற்போது மிகவும் தீவிரத்துடனும் நேர்மையுடனும் செயல்பட்டு வருவதாக நான் கருதுகிறேன்.

ஒரு மதசார்பற்ற அரசியல் கூட்டணியை உருவாக்க வேண்டும் என்பதில் அவர்கள் மிகவும் தெளிவாக உள்ளனர். அவர்களின் இந்த அணுகுமுறை விரைவில் நல்ல பலனைத் தரும் என்றும் நாம் நம்புகிறேன்.

அவர்களது இந்த அணுகுமுறையின் அடிப்படையிலும், கட்சிக்குள்ளான அனைத்து நிலைகளிலும் முறையான கலந்தாய்வுகளை மேற்கொண்ட பிறகே, நாங்கள் எங்கள் ஆதரவை தவெகவுக்கு வழங்கியுள்ளோம் என்று கார்த்தி சிதம்பரம் கூறினார்.

## தவெக எம்.எல்.ஏ-க்கள் மாமல்லபுரம் சொகுசு விடுதியில் தங்கவைப்பு!

**சென்னை, மே 7:**



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து, 108 தொகுதிகளில் வெற்றி பெற்ற தவெக எம்.எல்.ஏ-க்கள் மாமல்லபுரத்தில் உள்ள ஒரு தனியார் சொகுசு விடுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கட்சித் தலைவர் விஜய் உடனான ஒரு சந்திப்பிற்குப் பின்னரே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு உறுதி செய்யப்படும் பொருட்டு, அந்த விடுதியைச் சுற்றிப் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், கண்காணிப்புப் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது 50-க்கும் மேற்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் மாமல்லபுரம், பூஞ்சேரியில் உள்ள 'ஃபோர் பாயிண்ட்ஸ் ஸ்டார்' சொகுசு விடுதியில் தங்கியுள்ளனர்; மேலும் பல தவெக எம்.எல்.ஏ-க்கள் புதன்கிழமை மாலைக்குள் அங்கு வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து தேர்தலுக்குப் பிந்தைய அரசியல் நகர்வுகள் குறித்த வியூகங்களை வகுக்கும் பணிகளில் அந்த கட்சி ஈடுபட்டு வருகிறது.

தமிழக சட்டப்பேரவைத் தோதல் முடிவுகள் திங்கள்கிழமை வெளியானது. இதில் 108 தொகுதிகளில் வெற்றி பெற்ற தவெக, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த நிலையில், ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை. 108 இடங்களை கைவசம் வைத்துள்ள தவெகவுக்கு கூடுதலாக 10 முதல் 11 இடங்கள் தேவைப்படும் நிலையில், தமிழகத்தில் ஒரு மதச்சார்பற்ற அரசை அமைப்பதற்கு, தவெக தலைவர் விஜய்க்கு ஆதரவளிக்க தமிழக காங்கிரஸ் கட்சி ஒருமனதாக முடிவெடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்ற விஜய் தலைமையிலான 'தவெக' -விற்கு ஆதரவளிக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிப்பதற்காக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே. செல்வப்பெருந்தகை, கட்சி சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர்களுடன் நள்ளிரவில் காணொளி வாயிலாக ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தகவல்களின்படி, நள்ளிரவு வரை நடைபெற்ற அந்த 'காணொளி' கூட்டத்தில், தமிழ்நாட்டில் மாறிவரும் அரசியல் சூழல் குறித்தும், தவெகவுடன் கூட்டணி அமைப்பதன் மூலம் ஏற்படக்கூடிய அரசியல் ரீதியான விளைவுகள் குறித்தும் விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

## சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக வெற்றி: அலுவலகங்களை காலி செய்த முன்னாள் அமைச்சர்கள்

**சென்னை, மே 7:**



சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக வெற்றி பெற்று, நாளை முதல்வராக விஜய் பதவியேற்க உள்ள நிலையில், தலைமைச் செயலகத்தில் தங்கள் அலுவலக அறைகளில் உள்ள பொருட்களை முன்னாள் அமைச்சர்கள் காலி செய்தனர்.

தமிழக சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக ஆட்சியமைக்க உள்ளது. விஜய் நாளை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெறும் நிகழ்வில் முதல்வராக பொறுப்பேற்க உள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில், இன்று ஆளுநர் அர்லேகரை விஜய் சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில், நேற்று தலைமைச் செயலகம் மிகவும் பரபரப்பாக இயங்கியது.

ஒரு பக்கம் தலைமைச் செயலர் சாய்குமார் தலைமையில் பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் குறித்த ஆலோசனை நடைபெற்று வந்தது. மற்றொருபுறம், அமைச்சர்கள் அறைகளை காலி செய்யும் பணிகள் நடைபெற்று வந்தது.

அறைகளில் உள்ள முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி படங்கள், அமைச்சர்கள் பயன்படுத்திய பொருட்கள் என அனைத்தும் காலி செய்யப்பட்டு பெட்டிகளில் அடைத்து அவரவர் இல்லங்களுக்கு அனுப்பப்பட்டன. அலுவலக கோப்புகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அலுவலகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, அறைகள் சுத்தப்படுத்தப்பட்டு வருகின்றன.

சூரிய சக்தி சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க, தமிழ்நாடு அரசு சூரிய சக்தி தொழில்முனைவு பயிற்சிகளையும் வழங்குகிறது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## மு.க. ஸ்டாலினுடன் ரஜினி சந்திப்பு!



**சென்னை, மே 7:**

திமுக தலைவர் மு.க. ஸ்டாலினை நடிகர் ரஜினிகாந்த் நேரில் சந்தித்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்த நிலையில், திமுக 59 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்று தோல்வி அடைந்தது.

இந்த நிலையில், சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள மு.க. ஸ்டாலின் இல்லத்துக்கு இன்று நேரில் சென்ற ரஜினிகாந்த், அவரை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது, "வெற்றிபெறும் நேரத்தில் மட்டுமல்ல, இக்கட்டான நேரத்திலும் உங்களுடன் இருப்பேன்" என்று ரஜினி தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற தவெக தலைவர் விஜய்க்கு ரஜினிகாந்த் வாழ்த்து தெரிவித்து பதிவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## செங்கிப்பட்டி அருகே திடீரென பற்றி எரிந்த கார்!



**திருவாரூர், மே 7:**

திருவாரூர் நன்னிலத்தைச் சேர்ந்த அக்ஷயா காந்த், தந்தைக்கான மருந்து வாங்க நண்பர்களுடன் நேற்று திருச்சி சென்று கொண்டிருந்தபோது செங்கிப்பட்டி அருகே கார் திடீரென தீப்பிடித்தது.

புகை வெளியேறியதை உணர்ந்த மூவரும் உடனே வாகனத்தை நிறுத்தித் தப்பினர். தகவல் அறிந்த திருக்காட்டுப்பள்ளி தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

இந்த சம்பவத்தின் விடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

## சென்னையைக் குளிர்வித்த மழை!

**சென்னை, மே 7:**

சென்னை மற்றும் புறநகர் பகுதியில் பரவலாக பலத்த மழை பெய்ததால், நகர் முழுவதும் குளிர்ச்சியை ஏற்படுத்தியது.

கத்தரி வெய்யில் மே 4-ஆம் தேதி தொடங்கிய நிலையில், கடந்த சில நாள்களாகவே வெய்யில் சுட்டெறித்து வந்தது. பல இடங்களில் வெய்யில் சதம் அடித்தும் வந்தது.

இந்த நிலையில், நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடனும், குளிர்ந்த காற்றும் நிலவி வந்த நிலையில் சட்டென்று வானிலை மாறி மழை மேகங்கள் உருவானதையடுத்து, பலத்த மழை பெய்ய தொடங்கியது.

அம்பத்தூர், பாடி, அன்னாநகர், கிண்டி, பல்லாவரம், சாலிகிராமம், வடபழனி, நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், ராயப்பேட்டை, மயிலாப்பூர், கோபாலபுரம், திருவல்லிக்கேணி, அடையாறு, அம்பத்தூர், தேனாம்பேட்டை, ஆவடி உள்ளிட்ட பகுதிகளில் திடீரென பெய்த மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவியது.

# திருமலையில் 78,998 பேர் தரிசனம்!

**திருமலை, மே 7:**

திருமலை ஏழுமலையானை திங்கள்கிழமை முழுவதும் 78,998 பக்தர்கள் தரிசித்தனர். 28,809 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

கோடை விடுமுறையை ஒட்டி பக்தர்கள் வருகை அதிகரித்துள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை நிலவரப்படி தர்ம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) 8 மணிநேரமும், ரூ.300 விரைவுதரிசனத்திற்கு 3 முதல் 4 மணிநேரம் ஆனது. நேரடி இலவச தரிசன டோக்கன்கள் வழங்குவதை வெள்ளிக்கிழமை முதல் கோடை விடுமுறை முடியும் வரை தேவஸ்தானம் ரத்து செய்துள்ளது. அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணிவரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோர், இரவு 10 மணிவரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். அலிபிரி வழியில் திவ்ய தரிசன டோக்கன்கள் வழங்குவது ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே, திங்கள்கிழமை முழுவதும் ஏழுமலையானை 78, 998 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 28, 809 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.3.74 கோடி வசூலானது. இனி தரிசன டிக்கெட்டுகள் இல்லாமல் ஏழுமலையான் தரிசனத்திற்காக திருமலைக்கு வரும் பக்தர்கள் காத்திருப்பு அறைகளில் காத்திருந்து மட்டுமே தரிசனத்திற்கு செல்ல முடியும். எனவே பக்தர்கள் தங்கள் பயணத்தை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# திருவிடந்தை நித்ய கல்யாண பெருமாள் கோவிலில் கருட சேவை

**மாமல்லபுரம், மே 7:**

மாமல்லபுரம் அடுத்த திருவிடந்தை நித்யகல்யாண பெருமாள் கோவிலில், சித்திரை பிரம்மோற்சவம், கடந்த 1-ந்தேதி துவங்கியது. தினமும் சிறப்பு பூஜைகள், சிறப்பு உற்சவங்கள், சுவாமி வீதியுலா நடைபெறுகிறது. விழாவின் முக்கிய உற்சவமான கருட சேவை நேற்று இரவு நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட கருட வாகனத்தில் நித்யகல்யாண பெருமாள் எழுந்தருளி, வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இந்நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். பிரம்மோற்சவ விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்வான தேரோட்டம் நாளை நடைபெற உள்ளது. இதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 10-ந்தேதி இரவு தெப்ப உற்சவம் நடைபெறுகிறது.

நித்யகல்யாண பெருமாள் கோவில் 108 திவ்ய தேசங்களில், 62-வது திவ்ய தேசமாக விளங்குகிறது. இங்கு ஆதிவராக பெருமாள், தினம் ஒருவர் என ஆண்டு முழுவதும் மணந்த மனைவியரை, அகிலவல்லி தாயாராக ஒன்றிணைத்து, இடது தொடையில் ஏந்தி மூலவராக வீற்றுள்ளார். நித்யகல்யாண பெருமாள், கோமளவல்லி தாயாருடன் உற்சவராக வீற்றுள்ளார்.

# திருப்பதியில் 2.45 லட்சம் பக்தர்கள் தரிசனம்: ரூ.12 கோடி உண்டியல் காணிக்கை

**திருமலை, மே 7:**



கோடை விடுமுறை என்பதால் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் வழக்கத்திற்கும் அதிகமாக பக்தர்களின் கூட்டம் உள்ளது. அதுவும் கடந்த வெள்ளி (தொழிலாளர் தினம்), சனி, ஞாயிறு ஆகிய 3 நாட்களும் அரசு விடுமுறை நாட்கள் என்பதால், கூட்டம் மேலும் அதிகரித்தது.

இதனால் கோயிலுக்கு வெளியே சுமார் 5 கி.மீ. தூரம் வரை பக்தர்கள் வரிசையில் தரிசனத்துக்காக காத்திருந்தனர். கோடை காலத்தில் கூட்டம் அதிகரிக்கும் என்பதால் கடந்த மே 1-ம் தேதி முதல் 2 மாதங்களுக்கு விஐபி பிரேக் தரிசன முறையை தேவஸ்தான நிர்வாகத்தினர் முற்றிலுமாக ரத்து செய்தனர்.

எஸ்எஸ்டி (டோக்கன் உள்ள சர்வ தரிசனம்) 3 மணி நேரத்துக்குள்ளும், ரூ.300 சிறப்பு தரிசனம் இரண்டரை மணி நேரத்துக்குள்ளும் சுவாமியை தரிசித்து விடுகின்றனர்.

சாதாரண நாட்களில் தினமும் 65 முதல் 70 ஆயிரம் பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்வர். ஆனால், தற்போது கடந்த 3 நாட்களில் மட்டுமே 2.45 லட்சம் பக்தர்கள் சுவாமியை தரிசித்து உள்ளனர்.

இதனால் கடந்த 3 நாட்களில் மட்டுமே உண்டியல் மூலம் ரூ.11.95 கோடி காணிக்கை செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த மே 2ம் தேதி அதிகபட்சமாக 91,005 பக்தர்கள் சுவாமியை தரிசித்தனர்.

மே 3ம் தேதி மட்டுமே உண்டியலில் ரூ.5.06 கோடி காணிக்கை செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பழநி அருகே கோயில் திருவிழாவில் பக்தர்களுக்கு ‘கறி விருந்து’

**பழநி, மே 7:**



திண்டுக்கல் மாவட்டம் பழநி அருகே கோம்பைபட்டியில் பெரியதுரை மற்றும் கருப்பணசுவாமி கோயில் திருவிழாவில் பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய 300 ஆடுகளை சமைத்து இன்று (செவ்வாய்கிழமை) 10,000 பேருக்கு ‘கறி விருந்து’ நடைபெற்று வருகிறது.

பழநி அருகேயுள்ள கோம்பைபட்டியில் பெரியதுரை, கருப்பணசுவாமி, செல்வ விநாயகர், தன்னாசியப்பன், பொலக்கருப்பு கோயில் திருவிழா ஆண்டுதோறும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு திருவிழா நேற்று (மே 4) தொடங்கியது.

நேற்று மாலை 6 மணிக்கு தீர்த்தக் கலசம், குதிரை மற்றும் கருப்பணசுவாமி சிலை ஊர்வலமாக கோயிலுக்கு கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து, இரவு 7 மணிக்கு தீர்த்தம் செலுத்துதல் மற்றும் அன்னதானம் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வாக இன்று (மே 5) கருப்பணசுவாமிக்கு கிடா வெட்டுதல் நிகழ்வு நடைபெற்றது.

இதையொட்டி, அதிகாலை 3 மணி முதல் பக்தர்கள் ஆடு, அரிசி, பால் உள்ளிட்டவற்றை காணிக்கையாக செலுத்தினர். மொத்தம் 300 ஆடுகள் பக்தர்களிடம் இருந்து காணிக்கையாகப் பெறப்பட்டன. பின்னர் இவற்றைக் கொண்டு உணவு சமைக்கும் பணி கோயில் வளாகத்திலேயே நடைபெற்று வருகிறது.


சமையலுக்கு தேவையான பொருட்களை வழங்கியதோடு, சமையல் செய்யும் பணியில் பக்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர். காலை 11 மணிக்கு முதல் மெகா ‘கறி விருந்து’ தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதையொட்டி, சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றனர். -ஒ

மொத்தம் 10,000 பக்தர்களுக்கு விருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான, ஏற்பாடுகளை கிராமத்தினர் செய்திருந்தனர்.

# 497 மண்டகப்படிகளில் எழுந்தருளிவிட்டு அழகர்கோவிலை அடைந்தார் கள்ளழகர்

**மதுரை, மே 7:**



கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழாவையொட்டி அழகர்கோவிலில் இருந்து புறப்பட்டு மதுரைக்குச் சென்று திரும்பியபோது கள்ளழகர் 497 மண்டகப்படிகளில் எழுந்தருளி பல லட்சம் பக்தர்களுக்கு தரிசனம் அளித்து விட்டு நேற்று கோயிலை அடைந்தார். அப்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் மலர் தூவி வரவேற்றனர். 21 பெண்கள் பூசணிக்காயில் தீபமேற்றி கள்ளழகருக்கு திருஷ்டி கழித்தனர்.

அழகர்கோவில் கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழா கடந்த ஏப்.27-ம் தேதி தொடங்கியது. மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிக்க சுந்தரராஜப்பெருமாள், கள்ளர் திருக்கோலத்தில் ஏப்.29-ல் மலையிலிருந்து மதுரைக்கு புறப்பட்டார். மே 1-ம் தேதி அதிகாலை 5.48 மணிக்கு பச்சைப் பட்டு உடுத்தி கள்ளழகர் தங்கக் குதிரையில் வைகை ஆற்றில் இறங்கினார். மே 2-ம் தேதி தேனூர் மண்டபத்தில் மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் அளித்தார். மே 4-ம் தேதி தல்லாகுளம் ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்தில் அதிகாலை 2 மணியளவில் பூப்பல்லக்கில் கள்ளழகர் எழுந்தருளி அழகர்மலைக்குத் திரும்பினார்.

அன்றிரவு சுந்தரராஜன்பட்டி மறவர் மண்டபத்தில் கள்ளழகர் பயணத்தால் ஏற்பட்ட உடல் களைப்பை போக்கும் வகையில் அபிஷேகம், ஆராதனை நடந்தது. ஒன்பதாம் நாளான நேற்று (மே 5) காலை 10.40 மணியளவில் கோட்டை வாசல் பகுதியில் நுழைந்தார். அப்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் ‘கோவிந்தா, கோவிந்தா’ என கோஷமிட்டு, கள்ளழகரை மலர் தூவி வரவேற்றனர்.

பின்னர் கருப்பணசாமி கோயிலில் தீபாராதனை முடிந்து கோயிலுக்குள் நுழைந்தபோது 21 பெண்கள் பூசணிக்காயில் கற்பூர தீபமேற்றி கள்ளழகருக்கு திருஷ்டி கழித்தனர்.





வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

# புற்றுநோய்க்கு தீர்வாகும் நெய் மிளகாயின் அதிசய குணங்கள்!



அறுசுவை உணவுகளில் கார உணவுக்கு என்று உணவுப் பிரியர்கள் அதிகம் உண்டு. காரத்திற்கு அடிப்படையாக இருக்கும் பச்சை மிளகாயில் பல வகைகள் இருப்பது தெரியும். சாத்தூர் மிளகாய், ராமநாதபுரம் முண்டு, குடமிளகாய், ஊசி மிளகாய் வரிசையில் ஒன்றுதான் நெய் மிளகாய் எனப்படும் வாசமும் காரமும் அதிகம் கொண்ட மிளகாய் ரகம். இவற்றைப் பயன்படுத்தும்போது லேசாக நெய் மணம் வீசுவதால், இதற்கு நெய் மிளகாய் என்று பெயர் வந்திருக்கலாம்.

மேலும், இது பம்பரம் போல் காட்சித் தருவதால் பம்பர மிளகாய் என்கிற பெயரும் இதற்கு உண்டு. இந்த மிளகாய் ஏற்காடு, ஊட்டி, கொடைக்கானல், குன்னூர், மூணாறு போன்ற மலைப்பிரதேசங்களில் விளைகிறது.

இது கேப்சிகம் சைனென்ஸ் (CAPSICUM CHINENSE) என்ற இனத்தில் இருந்து உருவாக்கப்பட்ட டிரினிடாட் மோருகா ஸ்கார்பியன் (TRINIDAD MORUGA SCORPIAN) என்னும் ரகமாகும். இந்த நெய் மிளகாயின் பூர்வீகம் அமெரிக்காவுக்கு அருகில் உள்ள டிரினிடாட் மற்றும் டொபாகோ தீவுகளின் மொருகா என்னும் மாவட்டத்தில்தான் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதனாலேயே இதற்கு டிரினிடாட் மொருகா ஸ்கார்பியன் எனப் பெயர் சூட்டப்பட்டது. அதன் பிறகு இதன் காரத்தன்மை மற்றும் நெய் மணத்திற்காக உலகம் முழுவதும் பரவியது. மிளகாய்க்கு காரத்தன்மையைக் கொடுப்பது கேப்சாய்சின் (CAPSAICIN) என்னும் வேதிப்பொருளாகும். எந்தத் திசுக்களில் பட்டாலும் எரிச்சல் உணர்வை உருவாக்குகிறது. மிளகாயில் காரமான பகுதி என்பது அதன் விதைகளில்தான் அதிகம் இருக்கிறது. அந்த வகையில் நெய் மிளகாய் காரத்தன்மையில் உலகளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. கார அளவுகள் ஆண்டுக்காண்டு அதிகரித்து வரும் நிலையில் 2012ம் ஆண்டில் நெய் மிளகாய் உலகிலேயே அதிகமான காரம் கொண்ட மிளகாய் என்கிற பட்டத்தைப் பெற்றது.

# புகையிலை மொசைக் வைரஸ் நிகழ்த்தும் தொழில்நுட்ப புரட்சி!

புகையிலை மொசைக் வைரஸ் (TMV) என்பது 1892 இல் டிமிட்ரி இவனோவ்ஸ்கியால் கண்டறியப்பட்ட, தாவரங்களை பாதிக்கும் முதல் வைரஸ் ஆகும். இது புகையிலை, தக்காளி போன்ற தாவரங்களின் இலைகளில் தேமல் போன்ற (MOSAIC) புள்ளிகளை உருவாக்கி, வளர்ச்சியைத் தடுத்து பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் இது வைரலாஜி, நானோ தொழில்நுட்பம் மற்றும் மரபணு பொறியியலில் ஒரு முக்கிய ஆராய்ச்சி மாதிரியாகப் பயன்படுகிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முக்கியத்துவம்:


வைரலாஜியின் அடித்தளம்:

புகையிலை மொசைக் வைரஸ் (TMV) பாக்டீரியாவை விட சிறிய, வடிகட்டக்கூடிய தொற்றுக் காரணியாகும். முதன்முதலில் படிகமாக்கப்பட்ட (CRYSTALLIZED) வைரஸ் இதுவே. இது வைரஸ்களின் அமைப்பை (RNA மற்றும் புரத உறை) புரிந்துகொள்ள உதவியது.

TMV இன்றும் தாவர வைரஸ் ஆராய்ச்சியில் ஒரு முதன்மை மாதிரியாக (MODEL ORGANISM) உள்ளது. இது நவீன உயிரியல் மற்றும் விவசாய தொழில்நுட்பத்தின் பரிணாம வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

நானோ தொழில்நுட்பம்:

TMV என்பது தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும் வைரஸாக இருந்தாலும், நானோ தொழில்நுட்பத்தில் அதன் கட்டமைப்பு பண்புகள் மூலம் பல ஆக்கப்பூர்வமான மருத்துவ மற்றும் உயிரியல் பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. TMVன் தடி வடிவ, நிலையான அமைப்பு உயிரி-நானோ தொழில்நுட்பத்தில் (BIONANOTECHNOLOGY)





நானோ கம்பி (NANOWIRE) மற்றும் உயிரி உணரிகளாக (BIOSENSORS) பயன்படுத்தப்படுகிறது.

இதன் நிலையான கட்டமைப்பு உயிரி-நானோ தொழில்நுட்பத்தில் புதிய கருவிகளை உருவாக்குவதில் பயன்படுத்தப்படுகிறது. மேம்படுத்தப்பட்ட மின்னணு சாதனங்கள் மற்றும் மருத்துவ கண்டறிதலில் TMVன் உயிரியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட கட்டமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

மருந்து விநியோகம்:

புற்றுநோய் போன்ற நோய்களுக்கு மருந்துகளை உடலில் குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு செல்ல வைரஸ் நானோ துகள்கள் (VNPS) பயன்படுத்தப்படுகின்றன.

பேட்டரி தொழில்நுட்பம்:

ஆற்றல் சேமிப்பு சாதனங்களின் (BATTERIES) மேற்பரப்பை அதிகரிக்கவும் அதன் திறனை மேம்படுத்தவும் இந்த வைரஸின் புரதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மரபணு பொறியியல்:

தாவரங்களில் மரபணு வெளிப்பாட்டை (GENE EXPRESSION) ஆராயவும், வைரஸ் எதிர்ப்பு திறன் கொண்ட பயிர் வகைகளை உருவாக்கவும், மரபணு அமைதிப்படுத்துதல் (GENE SILENCING) தொழில்நுட்பத்திலும் இது பயன்படுத்தப் படுகிறது.

மரபணு பொறியியல் மூலம் வெளிநாட்டு எபிடோப்களை (EPITOPES) சுமந்து செல்லும் தடுப்பூசி தயாரிப்பில் பயன்படுகிறது.

TMV தாவர செல்களுக்குள் விரும்பிய மரபணுக்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் தாவரங்களில் நோய் எதிர்ப்பு சக்தி அல்லது சிறந்த தரம் போன்ற புதிய பண்புகளை உருவாக்க முடிகிறது.

இது தாவர புரோட்டோபிளாஸ்ட்களில் (PROTOPLASTS) மரபணு வெளிப்பாட்டை ஆய்வு செய்ய ஒரு சக்திவாய்ந்த கருவியாகும்.

உயிரியல் மேலாண்மை:

TMVக்கு எதிர்ப்புத்திறன் கொண்ட புகையிலை இனங்கள், மரபணு வரைபடமாக்கல் (MAPPING) மூலம் உருவாக்கப்படுகின்றன.

புகையிலை மொசைக் வைரஸ் உயிரியல் தொழில்நுட்பத்தில் குறிப்பாக தாவரங்களில் மரபணுக்களை கடத்துவதற்கான வைரஸ் கடத்திகளாகப் (VIRAL VECTORS) பயன்படுத்தப்படுகிறது. TMV, உயிரியலில் அடிப்படை ஆய்வுகள் முதல் பயன்பாட்டு உயிரி தொழில்நுட்பம் வரை ஒரு முக்கிய ஆராய்ச்சிப் பொருளாக தொடர்ந்து இருந்து வருகிறது.

# ஊருக்கு வாழ்வதில் தோல்வி இல்லை



முகூர்த்தம் விடியற்காலை ஆறு மணிக்கே என்பதால் மலர்கொடி சீக்கிரமா எழுந்து சுடு தண்ணி வச்சி குளிச்சிட்டு ஐந்து மணிக்கே பஸ் ஏறி கல்யாண மண்டபத்தை வந்தடைந்தால், மண்டப வாயிலில் எல்லோரையும் வரவேற்ற சரண்யா ஆச்சர்யத்தோடு,,,

"என்னங்க அக்கா, ரொம்ப சிம்பிளா வந்திருக்கீங்க, எப்போதும் கலக்கலா கலர்புல்லா வருவீங்க, இப்போ என்னாச்சு" என்றாள்

"அதை ஏன்டி சரண் கேக்குற, இந்த ஊர்ல ஒரு நல்ல சேலை கட்ட முடியல, ஒரு கொலுசு போடமுடியல, தலசீவி ஒரு மொழம் மல்லிகைப்பூக்கூட வைக்க முடியல, டிசைனா ஒரு சுடிதார்கூட போட முடியல"

"ஏங்க அக்கா அப்படி சொல்றீங்க, நம்ம இஷ்டம்,நாம மேக்கப் பன்றோம், இதுக்காக நீங்க எதுக்கு சிம்பிளா வர வேண்டும்"
"அடிப்போடி கொஞ்சம் நீட்டா ட்ரெஸ் பன்னினாலே இதுக்கெல்லாம் இது தேவையா, பேரன் பேத்தி எடுத்துட்டு, எப்பிடி மினிக்கிக்கிட்டு போவுது பாருன்னு ஜாடையில பேசுறாளுவோ, இதெல்லாம் கேட்டா எப்படி நீட்டா வர தோணும் சொல்லு"

"அக்கா ஊரு உலகம் ஆயிரம் சொல்லும், அதை காதில் வாங்காதீங்க, நம்ம இஷ்டத்துக்குதான் வாழணும், அக்கம் பக்கம் சொல்றதை கேட்டா வாழ முடியாது, நாம ஊருக்கு வாழல, நமக்காக வாழ்றோம்"

"அப்படி இல்ல சரண்யா, அவங்க என்ன சொல்றது, இவங்க என்ன சொல்றது, என் இஷ்டம் நான் எப்படி வேண்டுமானாலும் இருப்பேன், என்ன வேண்டுமானாலும் செய்வேன், நான் சம்பாதிக்கிறேன், நான் வாழ்கிறேன்னு சொல்றவங்க எல்லாரும் யாருக்கும் பயப்படாமல், மரியாதை கொடுக்காமல் இருப்பதால்தான் வீணா போய் சீரழியுறாங்க, ஊரு உலகத்துல சொல்றதை கேட்பவர்களும், அக்கம் பக்கம் சொல்றதை கேட்பவர்களும், அவங்க என்ன சொல்வாங்களோ, இவங்க என்ன சொல்வாங்களோன்னு பயப்படுறவங்களும், நேர்மையா இருப்பாங்க, வாழ்க்கை நல்லவே இருக்கும், ஊருக்காக வாழ்வதில் ஒருபோதும் தோல்வியில்லை, இதைதான் படிக்காதவன் படத்தில் ஒரு பாடலில் வைரமுத்து அவர்கள் சொல்லி இருக்காங்க, "
"என்ன பாட்டு அக்கா"

"ஒரு கூட்டுக்கிளியாக என்ற பாடலில் பேருக்கு வாழ்வது வாழ்க்கை இல்லை, ஊருக்கு வாழ்வதில் தோல்வி இல்லைன்னு, இதுதான் உண்மையும் கூட"

"அப்படின்னா நீங்க நீட்டா வந்து இருக்கலாமே அக்கா"

"வந்திருக்கலாம்தான்,,, ஆனா,,, ஒரு குறிப்பிட்ட வயசுக்கு மேல் சிம்பிளா இருப்பதுதான் நமக்கும் நம்ம வயசுக்கும் நல்லது, அதான் சிம்பிளாவே வந்தேன் சரண்யா,""ஓ,,,, இதுவும் சூப்பராதான் இருக்கு அக்கா," ன்னு சொல்லும்போதே மண்டபத்திலிருந்து ஒரு குரல் கேட்டது, வச வசன்னு பேசிக்கிட்டு நிக்காம பொண்ண கூட்டிட்டு வாங்க முகூர்த்தத்திற்கு நேரமாச்சி,,,

மணப்பெண்ணை அழைச்சிட்டு வரும் குழுவில் மலர்கொடியும் இருந்தால், பெண்ணின் மேக்கப்பை பொறாமையோடு பார்த்தப்படி.

**நாகை ஆசைத்தம்பி**
**கோவை**

# "அம்மாவின் கடைசிக் கடன்"



மரணப் படுக்கையில் கிடந்த மீனாட்சி மகன் முரளியின் காதருகே சன்னக் குரலில் சொன்னாள், ... நான் ஒரு கடன் பட்டிருக்கேன்... அதை நீதான் கட்டணும்...”

அதுதான் மீனாட்சியின் கடைசி வார்த்தை.

முரளி அதிர்ச்சியில் உறைந்து போனான். அம்மா அவனிடம் எதையும் மறைக்காதவள். ஆனால் இந்தக் கடன்?... எவ்வளவு?... யாரிடம்?.

அம்மாவின் பழைய பெட்டிகளை, சேமித்து வைத்திருந்த பைகளை, துருவிப் பார்த்தான். “கடன்” என்று ஒரு சின்னச் சுவடு கூட கிடைக்கவில்லை.
கடைசியாய், மடிக்கப்பட்ட பழைய காகிதம் மட்டும் கிடைத்தது. அதில்,
“ராமசாமி
பெரியார் தெரு
பழைய ஊர்”
என்ற ஒரு முகவரி எழுதப்பட்டிருந்தது.

முரளியின் மனசு சொன்னது, “இதுதான் அந்தக் கடனோ?...”
அந்த முகவரி நோக்கிப் பறந்தான்.
அங்கே “ராமசாமி” என்று விசாரிக்க, அந்த வீட்டைக் காட்டினான் ஒரு வழிப் போக்கன்.
அந்த வீட்டு வாசலில் நின்ற போது, ஒரு முதியவர் வெளியே வந்தார். "யாரு?” என்று கேட்டார்.
“நான் முரளி... மீனாட்சி அம்மாவின் மகன்...” என்றான்.
அந்தப் பெயர் கேட்டவுடன், முதியவரின் முகம் மாறியது. கண்களில் நீர் துளிர்த்தது.

“இன்னும் என்னை நினைவில் வெச்சிருக்காளா...?” என்றார் மெதுவாக.

முரளிக்கு புரியவில்லை.
"அம்மா உங்க கிட்டேயிருந்து கடன் வாங்கியிருக்காங்க போலிருக்கு..... அதை என்னைக் கட்டச் சொல்லிட்டு போயிட்டாங்க...” என்றான் முரளி.
முதியவர் புன்னகைத்தார்.
"அது பணக் கடன் இல்லைப்பா...”
" அப்புறம்?"

“மீனாட்சி...என் கூடப் பிறந்த தங்கை....
ஒரு சின்ன விஷயத்துக்காக...
பல வருடம் என் கூடப் பேசவே இல்லை.
ஆனா... எப்பவும் சொல்லுவா... ‘நான் அண்ணாவிடம் மன்னிப்பு கேட்கணும்... அதுதான் கடன்...’ன்னு...”

அந்த வார்த்தை முரளியின் உள்ளத்தைக் கிழித்தது.
"அம்மா இறக்கும் முன் சொல்லிய “கடன்” இதுதானா?"
அவன் கண்கள் நிரம்பின.
சற்றும் யோசிக்காமல் அந்தப் முதியவரின் காலில் விழுந்தான்.
“என் அம்மாவுக்காக... நீங்க மன்னிச்சுடுங்க...”
முதியவர் குலுங்கினார்.
அவன் தோளில் கை வைத்து எழுப்பினார்.

“மன்னிக்குறதுக்கு நான் எப்போதே ரெடியா இருந்தேன்... அவ தான் வரல...”

அங்கு, பல வருட மௌனம் உடைந்து,
இரண்டு மனங்கள்,
ஒரு உறவாக மீண்டும் இணைந்தன.

வீடு திரும்பும் வழியில், முரளி வானத்தைப் பார்த்துச் சொன்னான், "அம்மா...
நீ வெச்சிருந்த கடன் பணமில்லை... மன்னிப்பு தான்...
அதை நான் கட்டிட்டேன்...”



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# Boomer to Gen Z

பாகம் 29



**வி.பிரபாவதி**
**மடிப்பாக்கம்.**



மனம் சஞ்சலப்பட்டாலும் கடல் தாண்டி போயாச்சு. செட்டில் ஆயாச்சு. அபிஷேக் செய்தது போல் செஞ்சா என்ன பண்ண முடியும்? ஸ்ராவனியும் மாப்பிள்ளையும் எடுக்கும் முடிவுதான். தான் தலையிட என்ன இருக்கிறது? உலகம் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

வெளியில் போயிருந்த வாசு வந்ததும் அவல் தோசையும் தேங்காய்ச் சட்டினியும் சாப்பிடத் தந்தாள்.
வழக்கம்போல் படுக்கும் முன் கொஞ்சம் மோர் எடுத்து ஜீரகப்பொடி, பெருங்காயம், உப்பு சேர்த்து கொண்டு வந்தாள். வாசு குடித்துவிட்டு ஸ்பூர்த்திக்கு வீடியோ காலில் பேச ஆரம்பித்தான். அவளது பிரயாணங்கள் குறித்துக் கேட்டுக் கொண்டான்.

சென்னையில் இரண்டு நாட்கள் இருந்துவிட்டுப் பிறகு கிராமங்களுக்கு செல்லப் போவதாகச் சொன்னார்கள்.

"கிராமங்களா? எங்க தங்குவா இவாள்ளாம்? வசதி வேண்டாமோ? ஒன்னும் புரிலையே" என்றாள் மாலு.

"அம்மம்மா நாங்க ஒரு மாதம் மட்டுமே தங்க முடியும். அதுவும் ஒவ்வொரு இடமா அலையனும். சிலதெல்லாம் நாங்களே ப்ளான் பண்ணிருக்கோம். இது கொஞ்சம் அவசரமா வர மாதிரிதான். கவலைப் படாதீங்கோ. பார்த்துக்கறோம். இந்த ப்ராஜக்ட் சப்மிட் பண்ணிட்டு கொஞ்சம் டயம் எடுத்துண்டு திரும்பி வந்து தொடர்ந்து பண்ணுவோம். அந்த சமயம் எங்களுக்கு அரசாங்க உதவியும் கிடைக்கும்" என்றாள்.

"அப்டியாடாக் கண்ணம்மா? பெருமையா இருக்கு. சந்தோஷன்டா மா. வாங்கோ வாங்கோ. நேர்ல பேசிக்கலாம். குட் நைட்" என்று போனை கட் பண்ணிவிட்டு படுத்துக் கொண்டாள்.

வாசு முடிவெடுத்து விட்டான். இவர்களுடன் நல்ல ஒரு வசதியான வண்டி ஏற்பாடு செய்து தானும் முடிந்தவரை உடன் செல்வது என முடிவெடுத்தான்.
அதை மாலுவிடம் சொன்னபோது உள்ளூர சந்தோஷித்தாள்.

ஏர்ப்போர்டிற்கு அபிஷேக்கும் வாசுவும் சென்றார்கள். ஸ்பூர்த்தியும் அவள் தோழியும், தோழனும்! இறங்கி வந்தார்கள். ஆளுயர சூட்கேசுகளுடன் அழைத்து வந்தாயிற்று. பக்கா இந்திய உணவு காலையில்.

இட்லி, வடை, பொங்கல், சட்னி சாம்பார் என பரிமாறினாள். மாலுவின் கைம்மணம் எல்லோருக்கும் பிடிக்கும். மூவரும் ஒரு பிடி பிடித்தனர்.

மதியம் சாம்பார், ரசம், மோர்க்குழம்பு, பருப்பு உசிலி என அமர்காகளப் படுத்தினாள். அந்தப் பையன் ஸ்பூர்த்திக்கு ஜூனியராம். ஜார்ஜ் என்று பெயர். அந்தப் பெண் அவனது கசின். வயதில் பெரியவள். ஜூலி அவள் பெயர்.

வெள்ளை வெளேர் என்று பட்டுத் துணிபோல் வழவழவென உடல் வாகு. உருண்டைக் கண்கள். லைட் செம்பட்டை கலரில் முடி. ஆனால் இந்த அரைகுறை உடைதான் நெளிய வைத்தது.

ஓயாமல் பேசுவதும், சிரிப்பதும் வீடே கலகலப்பாக இருந்தது. "தாத்தா இந்த மைலாப்பூர்ல, ட்ரிப்ளிக்கேன்ல எல்லாம் சின்ன சின்ன கோவில்கள் நிறைய இருக்காம். மன்னர்கள் ஆட்சிலக் கட்டிருக்காலாம். கொஞ்ச நேரத்துலப் புறப்படலாம். கார் வந்துடும். அவா ரெண்டு பேரும் கலாக்ஷேத்ரா போகப் போறா. நம்ப பத்மா சுப்ரமண்யம் மேடத்திடம் அனுமதி வாங்கிருக்கோம். அவாளும் வந்து இவளுக்கு நிறைய விஷயங்கள் குறித்து விளக்கம் தருவா"

சொல்லி முடிப்பதற்குள் இரண்டு சொகுசுக் கார்கள் வந்தன. அபிஷேக்கும் ஜார்ஜும், ஜூலியும் ஒரு காரில் ஏறிக்கொண்டார்கள். வாசுவும் ஸ்பூர்த்தியும் ஒரு காரில் ஏறிக் கொண்டார்கள்.

நாட்கள் நகர்ந்தன. நேரத்தை வீணடிக்காமல் மூவரும் கண்ணும் கருத்துமாய் வந்த வேலையில் மூழ்கி இருந்தார்கள். உடனுக்குடன் மேலதிகாரிகளுக்கு அனுப்பிக் கொண்டே இருந்தார்கள். பாராட்டுக்களையும் வாங்கிக் குவித்தார்கள் என்றே சொல்ல வேண்டும்.

எல்லா இடத்திலுமே இவர்களுக்கு உற்சாக வரவேற்பு கிடைத்தது. வயது வித்தியாசமின்றிநிறைய நண்பர்கள் கிடைத்தனர்.

கிராமத்திற்கு சென்றபோது ஹரியும் சித்ராவும் செமையாக கவனித்துக் கொண்டார்கள். மாதவனும் ஸ்பூர்த்தியுடன் நன்றாகப் பேசிப் பழகினான். நிறைய உதவிகள் செய்தான். தொடரும்...

# "ஸ்ரீ ராம நவமியின் சிறப்பு"



இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் ஒன்று ஸ்ரீ இராமநவமி. பகவான் மஹா விஷ்ணு பூலோகத்தில் அதிகமாக அக்கிரமங்கள் நடக்கும் போது தீய செயல்களில் இருந்து பூலோகத்தை காப்பாற்றுவார். வைகுண்டத்தில் வாசம் செய்யும் பகவான் விஷ்ணு தசாவதாரம் எடுத்து கெட்டவர்களை அழித்து நல்லவர்களை காப்பாற்றுகிறார். அதன்படி பகவான் தசாவதாரம் எடுத்து ஒவ்வொரு முறையும் பூமியை காப்பாற்றுகிறார். அதனால் தான் அவருக்கு காக்கும் கடவுள் என்று நாம் அழைக்கிறோம். தசாவதாரத்தில் ஏழாவது அவதாரமான ஸ்ரீ ராமாவதாரம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. இராவணனை அழிப்பதற்காகவே ஸ்ரீ ராமர் ரகு வம்சத்தில் ஜனனம் எடுத்தார். 'ஒரு சொல், ஒரு வில் ,ஒரு இல் 'என்பதனை உலகிற்கு உணர்த்துவதற்காகவே எடுக்கப்பட்ட அவதாரமே ஸ்ரீ ராம அவதாரம் ஆகும். ராமர் சைத்ரமாதம் (பங்குனி/ சித்திரை) புனர்பூசம் நட்சத்திரத்தில், வளர்பிறை நவமி என்று அன்று அவதரித்தார். அதனால் அன்று ஸ்ரீ ராம நவமி என்று கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் விரதம் இருந்து, ராமாயணம் படித்து அல்லது சுந்தரகாண்டம் படித்து, பஜனை செய்து, பெருமாளுக்கு பானகம், நீர் ,மோர், வட பருப்பு (ஊறவைத்த பாசிப்பருப்பு), மற்றும் பழங்கள் போன்றவை நிவேதனம் செய்து வழிபடுவது வழக்கம். ராமர் கோவில்கள் இருக்கும் இடங்களில் சிறப்பு திருமஞ்சனம், ஆராதனைகள் நடைபெறும். ராமர், சீதை ,லட்சுமணர், அனுமாருக்கு பட்டாடை மற்றும் ஆபரணங்கள் சாத்தி உற்சவம் விமர்சையாக நடைபெறுவது வழக்கம். மதுராந்தகத்தில் "ஏரி காத்த ராமர் கோயிலில்" கோதண்ட ராமருக்கு சிறப்பாக தொட்டி திருமஞ்சனம் நடைபெறும். ஸ்ரீ ராம நவமி உற்சவத்தன்று பெரிய பெருமாள் இரவு வெள்ளித்தேரில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். மதுராந்தகத்தை சுற்றியுள்ள பல ஊர்களில் இருந்து வந்து பக்தர்கள், வெள்ளித்தேரில் பெருமாளை தரிசிப்பதற்காக கூட்டம் கூட்டமாக வருவார்கள். அயோத்தி, ராமேஸ்வரம், பத்ராச்சலம் போன்ற இந்தியாவில் உள்ள அனைத்து ராமர் கோயில்களிலும் ஸ்ரீராம நவமி உற்சவம் கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் அன்றைய தினத்தில் கோவிலுக்கு சென்று ஸ்ரீ ராமனை வழிபடுவதால் தங்கள் பிரச்சனைகள் எல்லாம் நீங்கி வாழ்வில் வளம் பெறுவோம் என்று நம்புகிறார்கள். இந்த உற்சவம் ஒவ்வொரு வருடமும் கோயில்களில் கொண்டாடப்படுகிறது.

**எம். எல் .பிரபா**
ஆதம்பாக்கம்.

## தினம் ஒரு தலைவர்கள்

# செண்பகராமன் வரலாறு



செண்பகராமன் என்று அழைக்கப்படும் செண்பகராமன் பிள்ளை (செப்டம்பர் 15, 1891 மே 26, 1934) தமிழகத்தைச் சார்ந்த இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற போராளி ஆவார். இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக படை திரட்டி போர் புரிந்தார். ஹிட்லர், கெயிசர் ஆகியோருடன் நெருங்கிய உறவு கொண்டவர். இந்தியாவிற்கு வெளியே இருந்து கொண்டே பிரித்தானியரை நாட்டிலிருந்து வெளியேற்றப் பாடுபட்டவர். இந்திய தேசியத் தொண்டர் படையை உருவாக்கியவர். இளமைப் பருவம் செண்பகராமன் 1891 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியான புத்தன் சந்தை என்ற ஊரில் பிறந்தார். தந்தை சின்னசாமிப்பிள்ளை; தாயார் நாகம்மாள். சின்னசாமிபிள்ளை திருவாங்கூர் சுதேச அரசாங்க சேவையில் தலைமை கான்ஸ்டபிளாக இருந்தார்.[1] இவர் இளம் வயதிலேயே விளையாட்டிலும் சிலம்பம், வாள்வீச்சு போன்ற கலைகளிலும் சிறந்து விளங்கினார். திருவனந்தபுரம் மன்னர் உயர் நிலைப் பள்ளியில் தம் பள்ளிப் படிப்பைத் தொடங்கினார். பின் ஐரோப்பா சென்ற செண்பகராமன் முதலில் இத்தாலியிலும் பின்னர் சுவிட்சர்லாந்து பல்கலைக் கழகத்திலும் பயின்று பல பட்டங்கள் பெற்றார். ஐரோப்பிய மொழிகள் பலவற்றைக் கற்றுத்தேர்ந்தார். பெர்லின் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றார். விடுதலைப் போரில் ஈடுபாடு இவர் மன்னர் உயர் நிலைப்பள்ளியில் ஆறாம் படிவம் (1960 க்கு முந்தைய பள்ளி இறுதி வகுப்பு) படித்துக் கொண்டிருந்த போது இந்தியாவில் விடுதலைக் கணல் எரியத்தொடங்கிய காலம். செண்பகராமனையும் விடுதலைத்தீ பற்றிக்கொண்டது. அச்சிறிய வயதிலேயே தம்முடன் பயின்ற மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு "ஸ்ரீ பாரத மாதா வாலிபர் சங்கம் " ஏற்படுத்தி 'வந்தே மாதரம்' என உரிமை முழக்கம் இட்டார். அதன் பின்னர் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு 'ஜேய் ஹிந்த்' என்ற முழக்கத்தை எழுப்பினார்.

'ஜெய் ஹிந்த்' எனும் முழக்கத்தை முதலில் முழங்கியவர் செண்பகராமன் பிள்ளையே ஆவார். 1933 ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற மாநாடு ஒன்றிலும் அவர் இம்முழக்கத்தை முழங்கினார். இதைக் கேட்ட நேதாஜி இம்முழக்கத்தை வழிமொழிந்து உலகெங்கும் பரப்பினார். விடுதலைப் போரில் இவர் காட்டிய தீவிரம் காரணமாக ஆங்கில ஆட்சியின் காவல் துறையினர் செண்பகராமனைக் கண்காணிக்கத் தொடங்கினர். ஐரோப்பா பயணம் சர் வால்டர் வில்லியம் என்ற செருமானியர், தம்மை விலங்கியல் மருத்துவர் எனக் கூறிக்கொண்டு, இந்தியாவில் ஆங்கில ஆட்சியைக் கண்காணிக்கும் ஒற்றராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். இவருடன் செண்பக ராமனுக்குத் தொடர்பு ஏற்பட்டது. தன் பெற்றோர் அனுமதியோடு சர் வால்டர் வில்லியம்ஸின் உதவியுடன் யாரும் அறியாமல் செண்பக ராமன் ஐரோப்பா சென்றார். அங்கு இத்தாலி, சுவிட்சர்லாந்து, (செருமன்) பெர்லின் போன்ற பல்கலைக் கழகங்களில் படித்துப் பொறியியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றார். வெளிநாடுகளில் விடுதலை உணர்வு சுவிட்சர்லாந்தில் மாணவராக இருந்த போது இந்திய நாட்டில் ஆங்கிலேயர் கையாண்ட அடக்குமுறைகள் பற்றி பல சொற்பொழிவுகள் ஆற்றினார். டாக்டர் பட்டம் பெற்ற பின்னர் ஐரோப்பாவில் இருந்தபடியே இந்திய விடுதலைப்போரில் தீவிரமாகப் பங்கேற்றார். பெர்லினில் இந்திய சர்வதேசக் குழுவை நிறுவினார். ஐரோப்பிய நாடுகளில் இந்தியாவைக் குறித்து ஆங்கிலேயர் செய்து வந்த பொய்ப்பிரசாரத்தை இக்குழுவின் உதவியுடன் முறியடித்தார். 'புரோ இந்தியா' என்ற இதழைத்தொடங்கி இந்தியர்களின் நிலைகளையும், ஆங்கிலேயரின் இந்தியர்களைப் பற்றிய பொய்யான வதந்திகளையும் வெளிப்படுத்தினார். சீனா, தென்னாப்பிரிக்கா, மியான்மர் முதலான நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து உலக மக்களிடையே விழிப்புணர்வினை ஊட்டி இந்தியாவிற்கு ஆதரவைத் திரட்டினார்.

வெளிவிவகார அமைச்சர் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியினை எதிர்த்து காபூலின் ' ராஜா மஹேந்திர பிரதாப்' அவர்களை அதிபராகவும், 'மவுலானா பர்கத் 'அவர்களை பிரதம மந்திரியாகவும் கொண்டு இந்தியர்கள் தங்களே நடத்துகின்ற போட்டி அரசை 1915- ல் ஆப்கானித்தானில் நிறுவினர். இவ்வரசின் வெளிவிவகாரத் துறை அமைச்சராக செம்பகராமன் பிள்ளை பணியாற்றினார். இத்தகைய புரட்சிகளுக்கு செருமனி சுயநல நோக்கத்துடன் ஆதரவளித்து வந்தது. ஆங்கிலேய அரசு கொடுத்த நெருக்கடியின் காரணமாக ஜப்பான் அரசு இவ்வரசுக்கு கொடுத்த ஆதரவை 1918 ஆம் ஆண்டு திரும்பப் பெற்றதால் இந்தியாவின் தற்காலிக புகலிட அரசு ஆப்கானித்தானிலிருந்து வெளியேற்றப்பட்டது. போர் செயல்பாடுகள் 1914 -ல் உலகப்போர் மூண்ட போது இங்கிலாந்தை எதிர்த்து செர்மனி போரிட்டது. இங்கிலாந்தின் கடற்படையைக் கலங்க வைக்க செருமானியர்கள் நீர்மூழ்கிக் கப்பலைப் பயன்படுத்தினர். 'எம்டன்' என்ற பெயர் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் செண்பகராமன் உதவிப் பொறியாளராகப் பணியாற்றினார். வங்காள விரிகுடாவிற்கு வந்த ஹிட்லரின் செர்மனியக் கடற்படையின் நாசகாரிக் கப்பலான "எம்டன்", ஆங்கில அரசுக்குச் சொந்தமான இரு பெரிய எண்ணெய்க் கிடங்குகளின் மீதும் சென்னைத் துறைமுகத்தின் மீதும், புனித ஜார்ஜ் கோட்டையிலும் (பின்னர் தமிழ்நாடு அரசுச் செயலகமாகவும், தற்போது பாவேந்தர் செம்மொழி ஆய்வு நூலகமாவும் செயல்பட்டு வருகின்றது), திருகோணமலைத் துறைமுகத்தின் மீதும் இக்கப்பல் பீரங்கித் தாக்குதல் நடத்தியது. இதனால் சென்னைக் கோட்டை உயர் நீதிமன்றத்தின் வெளிப்புறச் சுவரின் ஒருபகுதி அடியோடு பெயர்ந்து விழுந்தது. கோட்டையை நோக்கி வீசப்பட்ட குண்டு வெடிக்காமல் மண்ணில் புதைந்தது. அதன் வீரியம் குறைக்கப்பட்டு எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது. இதனை இன்றும் அங்கு காணலாம். ஹிட்லரும் செண்பகராமனும் முதல் லகப்போருக்குப் பின் செருமனியில்நாட்சிக்கட்சி ஹிட்லர் தலைமையில் உருவாகி வளர்ந்தது. ஹிட்லர் செருமனியின் சர்வாதிகாரி ஆனார். ஒரு சமயம் செண்பகராமன் ஹிட்லருடன் உரையாடிக் கொண்டிருந்த போது "இந்தியர்கள் பிரித்தானியருக்கு அடிமையாக இருக்கவே தகுந்தவர்கள். இந்தியாவுக்கு விடுதலைக் கிடைத்தால், நாட்டைத் திறமையாக ஆளும் தகுதி இந்தியருக்கு இருக்கிறதா என்பது சந்தேகமே " என்று இந்தியரைத் தாழ்த்திக் கூறினார். ஹிட்லர் கூறியதைக் கேட்ட நாட்டுப் பற்று மிக்க செண்பக ராமன் கொதித்தெழுந்தார். ஹிட்லருக்கு எதிராகத் திறமையாக வாதாடி, எழுத்து மூலம் ஹிட்லரை மன்னிப்பு கேட்கச் செய்தார்.

இறுதிக் காலம் தங்கள் தலைவரை வாதாடி வென்ற செண்பகராமனை, நாசியர் வெறுத்தனர். எனவே, அவர் கலந்து கொண்ட அரசாங்க விருந்து ஒன்றில் பரிமாறப்பட்ட உணவில் திட்டமிட்டபடி நஞ்சைக் கலந்தனர். அந்த நஞ்சு நாளடைவில் மெல்ல மெல்ல செண்பகராமனை நோயாளியாக்கி படுத்த படுக்கையில் வீழ்த்தியது. தீவிர சிகிச்சைக்குப் பின் சிறிது நாளில் நலம் பெற்ற செண்பகராமனை, நாசிகள் மீண்டும் தாக்கிப் படுகாயப் படுத்தினார்கள். அதுவே அவரை மரணப் படுக்கையில் வீழ்த்தக் காரணமாக அமைந்தது. 1934 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாளன்று செண்பக ராமனின் உயிர் பிரிந்தது செண்பகராமனின் இறுதி விருப்பம் செண்பகராமன் சிலை, காந்திமண்டபம், சென்னை செண்பகராமன் உயிர் பிரியும் முன் " நான் இறந்த பிறகு என் சாம்பலை இந்தியாவிற்கு எடுத்துச் செல்ல வேண்டும். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, சாம்பலின் ஒரு பகுதியை என் தாயாரின் சாம்பலைக் கரைத்த திருவனந்தபுரத்திலுள்ள கரமனை ஆற்றில் கரைக்க வேண்டும். மீதியை நாஞ்சில் நாட்டு வயல்களில் தூவ வேண்டும்" என்று தம் விருப்பத்தை வெளியிட்டார். இவரின் துணைவியார் ஜான்சி தம் கணவரின் சாம்பலைப் பாதுகாத்து வைத்திருந்தார். முப்பத்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின் சுதந்திர இந்தியாவில் 1966 ஆம் ஆண்டு செண்பகராமன் விரும்பியபடியே அவரின் சாம்பல் கரமனை ஆற்றில் கரைக்கப்பட்டு நாஞ்சில் வயல்களில் தூவப்பட்டது.

# ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை குவிக்கும் 'காவிய காதல்' அறிமுக வீடியோ!



உலகெங்கிலும் உள்ள ரசிகர்களை ஈர்க்கும் வகையில் தொடர்ந்து படங்களைத் தயாரித்து வரும் தயாரிப்பாளர் அருண் விஸ்வா தலைமையிலான சாந்தி டாக்கீஸ் நிறுவனம்,'மாவீரன்' மற்றும் '3BHK' ஆகிய படங்களின் வெற்றிக்குப் பிறகு, பாரத் கதாநாயகனாக நடிக்கும் 'புரொடக்ஷன் நம்பர் 4' என்ற புதிய திரைப்படத்தை அறிவித்தது.

படத்தின் மீது எதிர்பார்ப்பு அதிகரித்திருந்த நிலையில், இப்போது அந்த படத்திற்கு 'காவியக் காதல்' எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. நகைச்சுவையோடும், வண்ணமயமாகவும் உருவாகியுள்ள இந்த தலைப்பு அறிவிப்பு வீடியோவுக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.


பாரத் மற்றும் சான்வே மேக்னா ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ள 'காவிய காதல்' திரைப்படத்தை ஹரிஹரசுதன் அழகிரி இயக்கியுள்ளார். சுவாரஸ்யமான ரொமாண்டிக் எண்டர்டெயினர் திரைப்படமாக இது இருக்கும் என படக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இப்படத்தின் தலைப்பு அறிவிப்பு வீடியோவில், முன்னணி நடிகர்களுடன் பால சரவணனும் இடம்பெற்றிருப்பது படத்தின் நகைச்சுவைக்கு உறுதியளிக்கிறது. வண்ணமயமான மற்றும் வசீகரமான காட்சிகள் உற்சாகமான காதல் கதையை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்த இருக்கிறது.

நடிகர் பாரத் கதாநாயகனாகவும், 'குடும்பஸ்தன்' படத்தில் தனது திறமையான நடிப்பால் கவனம் ஈர்த்த சான்வே மேக்னா கதாநாயகியாகவும், நடிகர் பால சரவணன் முக்கிய கதாபாத்திரத்திலும் நடிக்கின்றனர்.

படத்தின் தொழில்நுட்பக் குழுவில் ஒளிப்பதிவாளராக தேனி ஈஸ்வர், கலை இயக்குநராக சிஎஸ் பாலசந்தர், ஆடை வடிவமைப்பாளராக கிருத்திகா சேகர், இசையமைப்பாளராக நிவாஸ் கே பிரசன்னா ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

காதல், நகைச்சுவை நிறைந்த கிளிம்ப்ஸ், முதல் பார்வை இன்றைய தலைமுறை மற்றும் குடும்ப பார்வையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. படத்தின் டீசர், இசை வெளியீடு, டிரெய்லர் மற்றும் உலகளாவிய திரையரங்கு வெளியீடு குறித்த தகவல்கள் விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



96 படத்தில் நடித்து பிரபலம் ஆனவர் கௌரி கிஷன். அவர் சமீபத்தில் LIK படத்தில் சற்று கிளாமர் ஆக தோன்றி இருந்தார்.

தற்போது தாய்லாந்து ட்ரிப் சென்று இருக்கும் கௌரி கிஷன் அங்கு நீச்சல் உடையில் இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார்.

போட்டோக்கள் வைரல் ஆகும் நிலையில், அவரா இப்படி என ரசிகர்கள் ஷாக் ஆகி இருக்கின்றனர்.

# மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தின் புதிய தலைவராக சஷி சேகர் வேம்பதி நியமனம்!



பிரசார் பாரதியின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியான சசி சேகர் வேம்பதி, மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தணிக்கை வாரியத்தின் தலைவராக இருந்த பிரசூன் ஜோஷி, பிரசார் பாரதி வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், வேம்பதிக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மத்திய அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில்,

"பிரசூன் ஜோஷி பிரசார் பாரதியின் தலைவராகப் பதவி உயர்வு பெற்றதைத் தொடர்ந்து, அவர் மத்திய திரைப்படத் தணிக்கை வாரியத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார். இதுவே தற்போதைய இந்த நியமனத்திற்கு வழிவகுத்தது.

# ரத்னகுமாரின் '29' டிரெய்லர் வெளியானது!



மேயாத மான் பட இயக்குநர் ரத்னகுமார் எழுதி, இயக்கியுள்ளப் புதிய படம் 29. இப்படம் நாளை மறுநாள் திரையரங்குகளில் வெளியாக உள்ளது. விது மற்றும் ப்ரீத்தி அஸ்ரானி முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இவர்களுடன் மாஸ்டர் மகேந்திரன், அவினாஷ், ஷெனாஸ் பாத்திமா மற்றும் பிரேம் குமார் ஆகியோர் நடித்துள்ளனர்.

ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். மதேஷ் மணிக்கம் ஒளிப்பதிவு செய்துள்ளார். கார்த்திக் சுப்புராஜின் ஸ்டோன் பெஞ்ச் கிரியேஷன்ஸ் மற்றும் லோகேஷ் கனகராஜின் ஜி ஸ்குவாட் பேனர்கள் இணைந்து இப்படத்தைத் தயாரித்துள்ளன.

இப்படத்தின் டீசர், பாடல்கள், புரோமோ வீடியோக்கள் எல்லாம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்நிலையில் இப்படத்தின் டிரெய்லர் இன்று வெளியாகி உள்ளது.



ஸ்ரீ, தித்திக்குதே போன்ற படங்களில் நடித்தவர் நடிகை ஸ்ருத்திகா. இதன்பின் சினிமாவிலிருந்து விலகிய இவர் பல ஆண்டுகளுக்கு பின் குக் வித் கோமாளி நிகழ்ச்சியில் என்ட்ரி கொடுத்தார். இதில் டைட்டில் வென்று மீண்டும் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார்.

தற்போது Youtube மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிடும் வீடியோ மற்றும் புகைப்படங்கள் மூலம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறார்.

இந்த நிலையில், தற்போது ஸ்டன்னிங் லுக்கில் கிளாமர் போட்டோஷூட் நடத்தி அந்த புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளார் நடிகை ஸ்ருத்திகா. அந்த போட்டோஷூட் புகைப்படங்கள் ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது.

# தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரி உடலுக்கு விஜய் நேரில் அஞ்சலி!



ராஜஸ்தான் மாநிலம் உதய்பூர் அருகே ஒரு திருமண நிகழ்வில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பும்போது, அவர் பயணம் செய்த கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் 100-க்கும் மேற்பட்ட திரைப்படங்களைத் தயாரித்துள்ளார். குறிப்பாக விக்ரமன், கே.எஸ். ரவிக்குமார் போன்ற பல முன்னணி இயக்குநர்களை அறிமுகப்படுத்தியவர்.

இவரின் மறைவு திரையுலகில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், ரசிகர்கள், நடிகர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இன்று அவரது உடல் ராஜஸ்தானில் இருந்து சென்னை மயிலாப்பூரில் உள்ள இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டு அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து நடிகர்கள் பலரும் அவரது உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அந்தவகையில் நடிகர் விஜய் அவரது உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். மேலும் விஜய்யை பார்த்ததும் கதறி அழுத நடிகர் ஜீவாவையும் கட்டியணைத்து ஆறுதல் தெரிவித்தார்.

# தேர்தலுக்கு முன் உங்கள் மீது வைத்த விமர்சனங்களுக்காக வருந்துகிறேன்

தவெக தலைவர் விஜய் நாளை தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்கவுள்ள நிலையில், பிரபல இயக்குனரும், நடிகருமான சேரன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சேரன் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

சந்தித்த முதல் தேர்தலிலேயே மக்களிம் பெரும் ஆதரவை பெற்று 108 தொகுதிகளில் வென்றிருக்கும் விஜய் அவர்களை திரையுலகை சார்ந்தவன் என்ற முறையில் மனமுவந்து வாழ்த்துகிறேன்.

உங்கள் வெற்றியில் எனது மகிழ்ச்சி என்பதே தமிழ்நாட்டில் வீசும் சுதந்திரக்காற்றுதான். எந்த கட்சிகளின் பிடியில் சிக்கி இத்தனை வருடம் தவித்தோமோ அந்த பிடியில் இருந்து விலக்கி என்னையும் மக்களையும் இளைப்பாற வைத்தமைக்கு நன்றி.



அதுவே எங்கள் நோக்கமுமாக இருந்தது என்பதே உண்மை. மக்களின் விருப்பத்தை நிறைவேற்றி வருங்கால தலைமுறைக்கான அவசியங்களை உங்கள் ஆட்சி உருவாக்கித்தரும் என நம்புகிறேன். தேர்தலுக்கு முன் உங்கள் மீது வைத்த விமர்சனங்களுக்காக வருந்துகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வாழ்த்து சொன்ன அனைவருக்கும் நன்றி...

நடிகை த்ரிஷா கிருஷ்ணன் நேற்று (மே 04) தனது 43-ஆவது பிறந்தநாளை கொண்டாடினார். கொண்டாட்டத்திற்கு முன்பு, அவர் திருப்பதி கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார். பிறந்தநாள் கொண்டாடிய நடிகை த்ரிஷாவுக்கு திரையுலகை சேர்ந்த பிரபலங்கள் மற்றும் ரசிகர்கல் வாழ்த்து தெரிவித்தனர். பொங்கி வழிந்த அன்பால் நெகிழ்ந்த திரிஷா, தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரீஸில் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்த இன்ஸ்டா பதிவில் அவர், "பிறந்தநாள் வாழ்த்துகளுக்கு உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி. இந்த அளவற்ற அன்பை கண்டு நான் உண்மையிலேயே நெகிழ்ந்து போகிறேன், நன்றியுணர்வுடன் இருக்கிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

பிறந்தநாளில் திருப்பதி கோவிலில் சாமி தரிசனம் செய்த கையோடு, நடிகை திரிஷா சென்னையில் உள்ள நடிகரும், த.வெ.க. தலைவருமான விஜய் இல்லத்திற்கு சென்று திரும்பிய வீடியோ சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டது.



Happy Birthday
MUHAMMAD IMRAN KHAN

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home (Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
2
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

Seek Strive Succeed
Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
info@violetcollege.in | www.violetcollege.in

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers
Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773

துபாயை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட் (Would Be Global Pvt Ltd) ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756

WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 | +91 96770 88843
info@sevenstarslogistics.com | www.sevenstarslogistics.com

SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

EMI 50% 50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available
BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259

PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில் வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

WANTED
OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106






## நூலகம் ஓர் ஆலயம் அல்ல

நூலகம் ஓர் ஆலயம் அல்ல அல்ல
அதற்கும் மேலான ஓர் சொல் தேடுகின்றேன்

ஆலயத்தில் வேற்று மதத்தவருக்கு அனுமதி இல்லை
நூலகத்தில் எந்த மதத்தவருக்கும் அனுமதி உண்டு

ஆலயத்தில் சாதிச் சண்டைகள் நடந்தது உண்டு
நூலகத்தில் சாதிச் சண்டைகள் நடப்பது இல்லை

ஆலயத்தில் சில சாதியினரை அனுமதிப்பது இல்லை
நூலகத்தில் எல்லாச் சாதியினருக்கும் அனுமதிஉண்டு

ஆலயத்தில் மற்ற ஆலயத்தினர் வந்து இடிப்பது உண்டு
நூலகத்தில் மற்ற நூலகத்தினர் வந்து இடிப்பது இல்லை

ஆலயத்தில் கருவறையில் உயிர்சாதிக்கு மட்டுமே அனுமதி
நூலகத்தில் எந்த சாதியினரும் எங்கும் செல்லாம்

ஆலயத்தில் தரும் பிரசாதம் மதக் குறியீடுகள்
நூலகத்தில் தரும் நூல்கள் அறிவின் குறியீடுகள்

ஆலயத்தில் பூட்டி விட்டு சண்டைகள் நடப்பது உண்டு
நூலகத்தில் பூட்டி விட்டு சண்டைகள் நடப்பது இல்லை

ஆலயத்தில் சிலைகள் நகைகள் கொள்ளை நடப்பதுண்டு
நூலகத்தில் நூல்கள் கொள்ளை என்றும் நடப்பதே இல்லை

ஆலயத்தில் உள்ள கடவுள்கள் நம்மோடு பேசுவது இல்லை
நூலகத்தில் உள்ள நூல்கள் நம்மோடு உறவாடுவது உண்டு

கோயில் தேவாலயம் பள்ளிவாசல் பலசொற்கள் உண்டு
நூலகம் என்ற ஒற்றைச் சொல்லே எங்கும் உண்டு

இந்துக்களின் புனித இடம் ராமேஸ்வரம் என்பார்கள்
இஸ்லாமியர்களின் புனித இடம் நாகூர் தர்கா என்பார்கள்



கிறித்தவர்களின் புனித
இடம் வேளாங்கண்ணி என்பார்கள்
எலோருக்கும் புனிதமான இடம் நூலகம்
என்பேன் நான்

நூலகம் என்பது ஆலயம் அல்ல அல்ல
அதையும் தாண்டிப் புனிதமானது நூலகம்!

கவிஞர் இரா .இரவி

## "அகலக்கால் ஆபத்து"

அளவை மீறி காலை நீட்ட
அழிவுப் பாதைதான்
முன்னே வரும்!

அடங்கா ஆசை உயர்ந்திட
ஆபத்தின் நிழல்
பின்னால் நிற்கும்!

நிலையறியா விரைவு
நொடியில் எழுந்தாலும்
நிலைகுலைந்து வீழும்
அதுவே உண்மை!

பொருள் தேடும் பேராசை
பொங்கிடும் வேளையில்
பொய்யின் நோக்கிப்
பயணம் திரும்பும்!

நேர்மை அஸ்திவாரம்
நிலைகுலைந்து போகும்
நெஞ்சத்தில் அமைதிக்கு
பஞ்சம் வந்துவிடும்!

அகலக்கால் விரித்தவனுக்கு
அஸ்தமனமே நிரந்தரம்!
அளவோடு நின்றவனுக்கு
உதயங்கள் உத்திரவாதம்!

சிறுதுளி சேரப்
பெருங்கடலாகும்,
சிறு முன்னேற்றம் தொடரத்
தொடர சிகரம் நெருங்கி
வரும்!

ஆசைக்கு அளவு வைத்தால்
வாழ்க்கையே
அழகு
அகலக்கால்
நீள்வதுஅபாய
அறிவிப்பு !



முகில்
தினகரன்
கோயமுத்தூர்.

## தேன்தமிழைக்கற்றிடத் தேர்!

நேரிசை வெண்பா!

செந்தமிழே சீர்தமிழே
செம்மொழியே செம்மலரே!
முந்தைத் தமிழரின்
முன்னேற்றம்.. தந்தாயே!
வான்புகழைக்கொண்ட
வளமார் தமிழணங்காம்
தேன்தமிழைக்கற்றிடத்தேர்!

தேவநேயர் சொல்லிட்ட
தேர்ந்த சிறப்புகள்
மேவும் வகையிலே
மேன்மையாய்.. ஆவலாய்ச்
சான்றோரும் ஆன்றோரும்
சந்தனமாய்க்கண்டநல்
தேன்தமிழைக் கற்றிடத் தேர்!

முனைவர்
இராம.வேதநாயகம்.

## மருத்துவச்சிப் பணியே மாண்பு!

நேரிசை வெண்பா!

மகப்பேற்றுக்காலத்தில்
மாண்பாகத் தொண்டு
தகவாகச் செய்வரே!
தண்மை..வகையாக
எக்காலும் தன்னலம்
இல்லாமல் நாட்டிலே
தக்கவாறு செய்வார் தக!

தாய்சேய் நலங்காப்பர்
தக்க மருத்துவச்சி!
நேய உணர்வோடு
நெஞ்சார்ந்தே..ஆய
கலையாக எண்ணிக்
கடமை புரிவர் மலையன்ன
தொண்டன்றோ மாண்பு!

முனைவர்
இராம.வேதநாயகம்!



## இதுவும் கடந்து போகும் !

இன்னலுக்காக வாட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

கவலையில் கரைய வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

சோகத்தில் சோர வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

எழ்மைக்காக வருந்த வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

வறுமைக்காக வாடிட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

தோல்விக்கு துவண்டிட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

விரக்தி வேதனை வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

விடியவில்லை என்று வருந்த வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

ஆதிக்கத்திற்கு அஞ்ச வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

ஆர்பாட்டத்திற்கு மயங்க வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

ஆடம்பரத்திற்கு மிரள வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

வெற்றிக்கு வீர வசனம் வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

புகழ் போதையில் கூத்தாட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

பதவி ஆணவத்தில் ஆட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

நானே பெரியவன் எண்ணம் வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

நிலையற்ற உலகில் எதுவும் நிரந்தரமன்று !
நிதம் அன்பு செலுத்தி வாழ்வாங்கு வாழ் !


கவிஞர் இரா .இரவி

## ஹைக்கூக்கள்

தூவானம் நின்றதும் விழுகிறது/
இலையின் விளிம்பிலிருந்து/
கடைசி நிலவு/

""""""""""

ஆற்றைக் கடந்ததும்/
உலர்ந்து விடுகிறது/ என் நிழல்./
""""""""""



மொட்டை நனைக்கிறது/
மலரை நனைத்த/
மழையின் தூவானம்./
""""""""''''''

நிழலுடன் தடம் புரண்டும்
தொடர்வண்டியை மட்டுமே/
மீட்டெடுக்க முடிந்தது./
""""""""""""""""

இறங்கி மேலேறிய பட்சி/
மயங்கி விழுகிறது/
நீர் அருந்தா நிழல்/
''''''''''''''...

மலைக்கோயில்/
சருகாகி வந்தடைகின்றன/
மேலேறத் தொடங்கிய இலைகள்/
""""""""""

புதைப்பதா? எரிப்பதா/
இறந்த தந்தையை
அலங்கரித்த/ ஆடைகளை?/
""""""""""

இருளுக்குப் பிரியாவிடை அளித்து/
கலோரியை எரித்து வருகிறோம்/
புத்தொளியும் நானும்/
""""""""""""""""

சுற்றும் பம்பரம்/ இலைகளைத்
துளைக்கிறது/ புழு./
""""""""""

கடைசியில் வந்தடைகிறது/
பல முறை வழித்தவறிய/ முதல் மழை./
""""""""""""

உடனழைத்துச் சென்ற இடிமுழக்கம்/
தனியே அனுப்பி வைத்துள்ளது/
மழையை இன்று./
""""""""""

ஆலைச் சங்கின் சத்தம்/
ஊடுருவுவதற்குள் உடைந்து விடுகிறது/
நீர்க்குமிழி./
""""""""""

மின்னல் கூசிய கண்களுடன்/
இருளை இழுத்துச் செல்கிறது/
மின்மினி./



""""""

பேருந்து புறப்படும் வரை/
காத்திருந்து தழுவுகிறது/
கண்களை உறக்கம்./

முனைவர்
வே. புகழேந்தி,
பெங்களூரு



## நுரையீரலைக் காப்போம்!

நேரிசை வெண்பா!

நாள்பட்ட தொற்றாநோய்
நாளும் சுவாசநோய்

ஆள்வினை யாகும்
அழகான.. ஆளும்

நுரையீரல் பாதிக்கும்
நொந்துபோகும்..உள்ளம்

மருத்துவத்தால்
நன்றாகும் மாண்பு!

மூச்சுத் திணறலை
மேமையின்றிஉண்டாக்கும்

போச்சே உயிரே
பொலிவின்றிக்..
கூச்சமாய் ஆக்குமே
ஒவ்வாமை ஆனதால்
ஓர்நாளில் போக்கலாம்
அன்றே புரி!

## மாறிடட்டும்!

(நிலைமண்டில
ஆசிரியப்பா)

மாற்றம் வந்தால்
மாறு மெல்லாம்
ஏற்றங் கூடும்
இனிமை மலரும்!

ஆற்றல் மிகுந்தால்
அறிவும் மிகுந்தால்
போற்ற லாகும்
பொலிவாய்க் கூடும்!

காட்சி மிகுந்தால்
கனிவும் மிகுமே
மாட்சி கிட்டின்
மனமு மினிக்கும்!

சிந்தை யென்றும்
சீர்மை கண்டால்
விந்தை நிகழ்வு
வீறாய்த் திகழும்!

முந்தை யோரின்
மேன்மைப் பாதை
வந்து வந்து
வளமே சேர்க்கும்!


மாற்ற மொன்றே
மாறா தென்றும்
சீற்ற மின்றிச்
சேர்க்க வேண்டும்!

கூற்றம் வரினும்
கும்பிடு போட்டு
ஆற்றொணாத் துயரை
ஆற்ற வேண்டுமே!

முனைவர்
இராம.வேதநாயகம்.

## முழுமை முற்றுப்புள்ளி...!

நூற்றுக்கு நூறு என்பது
உச்சத்தின் உச்சம்
இன்னும் ஏற வேண்டிய உயரம்
இல்லை மிச்சம்...
நித்திலம் வியந்து மனதில்
கொள்ளும் அச்சம்..
முயற்சி முனைப்புக்கு
முகாந்திரம் இல்லை எச்சம்...
ஆகவே நூற்றுக்கு நூறு
என்பது முன்னேற்றத்தின்
முற்றுப்புள்ளி...எதார்த்தத்தின்
மிகைமுரண் புள்ளி...
பூரணம் என்பதும்
பூஜ்ஜியம் என்பதும்
பூமியில் மட்டும் தான்
பேத விரிசல் காட்டும்...
பிரம்ம தளத்தில் நின்றால்
பூரணமே பூஜ்ஜியம்
பூஜ்ஜியமே பூரணம்
ஆன்றோர் அருளிய
அரும் பெரும் தத்துவம்
இது...
அலுக்காது சலிக்காது
அறிவியல் அகலாத
ஆன்மீகத் தேடலில்
ஆழ்ந்து இறங்கினால்
முழுமைக்கு ஏங்கி
முணுமுணுக்கும்
முதிர்ச்சி யில்லா நாட்டம்
நானில நலத்துக்கு ஊறு தரும்
நீங்கா நோயின் தாக்கம்...!
இன்னும் துல்லிய நேர்த்தியில்
துலங்கும் வண்ணம்
தெளிந்து சொன்னால்
துளி குறையில்லாத
தூய முழுமை என்பது
இகத்தின் நெளிவு சுளிவுக்கு
சற்றும் பொருந்தாத
இருபத்து நான்கு கேரட்
தங்கம்...பரிபூரணம் நோக்கிய
பண்பட்ட பயணமே
பூமி இயக்கத் திறனை
பிரதிபலிக்கும் பிம்ப
இலக்கணம்... படைத்து
காத்து அழிக்கும்
பேரியக்கப்பரம்பொருள்
உணர்த்தும் பக்குவம்!



நெல்லை குரலோன்
பொட்டல் புதூர்

உன் வனம் முழுக்க
என் கவனம் !

பறந்து சலிக்கக் கூடும்
வெளியேறத்
தெரியாமல்..
கவிதைகள் பூத்து
நிற்பதால்.

ஆனாலும் எந்தப் பூவில்
நீ மறைந்திருக்கிறாய்
கண்டுபிடிப்பதிலே
பகல் சூரியனும் இரவு நிலாவும்
என்னோடு
துணை நிற்பதால்
என் பொழுதுகளை
ஆனந்தமாய்ப் பொத்தி
வைக்கிறேன் சிறு
கூட்டில்.



ரிஷபன்

# நூல் விமர்சனம்

சு ந் த ர ன் ஆசிரியர் ரிஷபன்







சுந்தரன்.. ஆஞ்சநேயன், ஹனுமான், வாயு புத்திரன் என்ற பெயர்களெல்லாம் காரணப் பெயர்களே.

அன்னை அஞ்சனா தேவி சூட்டிய பெயர் 'சுந்தரன்'. பிறந்த போது அத்தனை அழகுக் குழந்தை அவன்.

இந்திர சபையில் நடனமாது அஞ்சனா தேவி. முனிவர் ஒருவரின் சாபத்தினால் பூமியில் பிறக்கிறாள்.

குரங்கு முகத்துடன் இருக்கும் 'கேசரி' என்பவரை மணக்கிறாள். தனிமையில், அவளுக்காகத் தன் அழகான மனித முகத்துடன் பழகும் கேசரிக்குப் பிறர் பார்க்கையில் குரங்கு முகம்தான்.

மகாதேவனின் ஆணைப்படி, பாயசத்துளியை ஏந்திவந்து அஞ்சனையின் வயிற்றுக்குள் வாயு பகவான் சேர்த்ததோடு (அதன் விரிவை அறிய இந்தப் புத்தகம் வாங்கிப் படிக்க வேண்டும்.) ஒரு இடரிலிருந்து காப்பாற்றியதாலும் வாயுகுமாரன் ஆகிறான் சுந்தரன். வஜ்ராயுதம் தாடையில் தாக்கிய காரணத்தால் தாடை வீங்கியதால் ஹனுமான் என்ற பெயரைப் பெறுகிறான். அஞ்சனையின் புத்திரன் ஆனதால் ஆஞ்சநேயன் //"அது பழமில்லை செல்லமே. சூரியன் " "போம்மா. என் பார்வைக்கு அது பழம்தான்."// சுந்தரனின் வசனத்துக்குள் ரிஷபனின் குழந்தை மனசு விளையாடுகிறது // யார் கண்டது. நான் ஒருவேளை தாய்ப் பாசத்திற்கு ஏங்கி இருக்கலாம். எனக்கென்று தாய் அமையாமல் போயிருக்கலாம். இதோ இப்போது உங்கள் வடிவில் அன்னையின் அரவணைப்பும் பாசமும்..//

அப்படியே சுந்தரனை அள்ளியணைத்து முத்தமிட்டுக்கொஞ்சத் தோன்றும் வரிகள்.. தெய்வாம்சம் என்பது நமக்கே மறக்கும் போது அந்தந்த அவதாரங்களின் தாய்களுக்கு இப்படித்தானே இருக்கும். 'இவர்கள் வாலி அனுப்பியவர்களோ' என சுக்ரீவன் ராம லக்ஷ்மணர்களை முதன்முதலில் பார்க்கையில் சந்தேகப்படும்போது சுந்தரன் அளிக்கும் பதில் சிறப்பாக உள்ளது. //பரம்பொருள் என்கிற ஸ்திதி எங்களுக்கு அலுப்புத்தான் தேவி. ஏதோ ஒரு ரூபத்தில் பாசமோ கொஞ்சலோ வேண்டியிருக்கிறது// மகாதேவன் சக்தியிடம் கூறும் வரிகள் கண்கலங்க வைக்கிறது. // அம்மா நீங்கள்தானே சொன்னீர்கள். உம்மென்று இருக்கக்கூடாது. நான் சிரிக்கிறேனா கோபமா என்று கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை// என்ன ஒரு அபாரக் கற்பனை வளம்! வியக்காமல் இருக்க முடியவில்லை.

அஞ்சனை புத்திரன் ஸ்ரீராமனை தரிசித்த கணம் முதல் சுக்ரீவனுக்கும், லட்சுமணனுக்கும் ஏற்பட்ட திண்டாட்டம் சுவையுடன் சொல்லப்பட்டது. //சுந்தரநதி அதன் சமுத்திரத்தை நெருங்கியது// உருகுகிறது உள்ளம் இந்த வரியில். //தான் பூஜிக்கிற தெய்வம் தன்னையே கொடுத்து விட்டது போல நெஞ்சு விம்மியது சுந்தரனுக்கு.// ஆலிங்கனத்தின் புளகாங்கிதம் அழகு.

சுந்தரன், ராமபிரானுடன் அதி நெருக்கமாக, மிகுந்த பக்தியுடன் சிஷ்ருஷைகள் செய்வதைக் கண்டு லக்ஷ்மணனும், சுக்ரீவனும் சற்றே பொறமை கொள்வது மிக அழகிய இடம். பட்டாபிஷேகத்தன்று சீதா தேவி கொடுத்த மாலையில் உள்ள ஒவ்வொரு முத்தாய் எடுத்துக் கடித்துப் பார்த்து, ராம நாம ருசி இதிலில்லயே என சோகிக்கிறார். அனைவரும் பரிசைக் கொடுத்த அன்னைக்கு அது அவமதிப்பு எனக் கூறுகின்றனர்.

உடனே தன் மார்பைப் பிளந்து காட்ட அங்கு சீதா ராமனின் தரிசனம் அனைவருக்கும் கிட்டி சுந்தரனின் பக்தியைப் பறைசாற்றும் நிலையை அன்னையிடம் விவரிக்கும் இடம் வெகு பவ்யமும் பக்தியும் நிறைந்த உரையாடல்

ஸ்ரீராமர் தன் குரு விஸ்வாமித்திரரின் கட்டளைக்காகவும், சுந்தரன் தன் அன்னையிடம் கொடுத்த வாக்கிற்காகவும் எதிரெதிரே நின்று யுத்தம் செய்யும் கணம் இருக்கிறதே... அப்பப்பா! வால்மீகியும், சுந்தரனும் எதிரெதிரே சந்தித்து இருவரும் எழுதிய ராமாயண கதைகளில், வால்மீகி ராமாயணம் சிறப்படைய.. தான் செதுக்கிய ராமாயணப் பாறைகளைத் தூள் தூளக உடைத்ததும்.. வால்மீகி 'சுந்தர காண்டம்' என்று தனியானதோரு காண்டத்தை உருவாக்க மனம் கொஞ்சம் தேற்றிக் கொண்டது தன்னை. கண்களுக்குள் குளம் தேங்க.. அதைப் படிக்கும் பாக்கியம் வாய்க்கவில்லையே என மனம் ஏங்க..

சிறு வயதில் ஒரு முனிவரின் சாபத்தால் சுந்தரனுக்குத் தன் பலத்தைப் பற்றிய ஞானம் மறந்து போவதும், இன்னொரு முனிவரின் சாபத்தால் தான் பூமியில் பிறக்க நேரிட்டதும், இருவருக்குமே வரமாக மாறியிருப்பதை அஞ்சனை எடுத்தியம்பும் நேரம்.. //"அம்மா அதை நான் சொல்ல வேண்டும். எனக்குக் கிட்டிய பெருவரங்கள்.. தாங்களும் பிரபுவும்.// சுந்தரன் பகர்கிறார். //அவன் உலகில் இருவர் மட்டும் நிச்சயமாய். ஒருவர் அன்னை அஞ்சனா. இன்னொருவர் பிரபு ராமன்.// பல இடங்களில் நிரூபணமாகிறது. சேது பந்தனத்தின் போது ராமர் ஒரு கல்லைத் தன் திருக்கரத்தால் எடுத்து சமுத்திரத்தில் போட, மற்றவர்கள் போட்ட கற்களைப் போல மிதக்காமல் மூழ்கக் காரணம் கேட்க அதற்குச் சுந்தரன் தரும் விளக்கம் எத்தனை பக்தி பூர்வமானது.

ஸ்ரீராமனின் பட்டபிஷேகம் முடிந்து, திரும்பி வந்த பின் அன்னையிடம் விபீஷணன் சரணாகதியிலிருந்து, ஸ்ரீ ராமன் சீதையுடன் தினமும் ஆராதிக்கும் தன் குலதனமான ஸ்ரீரங்கநாதரைத் தூக்கி விபீஷணனிடம் கொடுத்ததை எண்ணிப் பூரித்துச் சொல்கையில், அளவில்லாப் பேரானந்தம் உண்டாகிறது.. அதனால் அன்றோ என்னால் இன்றும் ரங்கனை தரிசிக்க முடிகிறது. மற்ற பணிகளிலோ ராமனை விட்டு விலக வேண்டும். அவர் அலுப்பில் கொட்டாவி விடும்போது சொடக்கு போடும் பணியில் அவர் அருகாமையிலேயே இருக்கும் பாக்யம்.


என்ன ஒரு உன்னத பக்தி! சுந்தரன்..


ஆசிரியர் எழுதிய 'என்னுரை' என்ற பகுதியில் ஏராளமான செய்திகள் சுந்தரனைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

இன்னொரு விஷயம் என்னை மிகவும் கவர்ந்தது என்னவெனில்.. கதா பாத்திரங்கள் சுந்தரனின் பெயர்களை ஆஞ்சநேயன், ஹனுமான் எனக் கூறுகிறார்களே தவிர..

ஆசிரியர் முதலிலிருந்து கடைசிவரை 'சுந்தரன்' என்றே குறிப்பிட்டு முடிக்கின்றார். இப்புத்தகத்தைப் படிக்கும்போது கசிய வைத்து, உருக வைத்து, பிரமிக்க வைத்து, ஏங்க வைத்து, ஆசைப்பட வைத்து, பக்தியை ஊட்ட வைத்துத் தன் சொற் சிலம்பங்களின் நெளிவு சுளிவுகளனைத்தையு ம் அள்ளி வழங்கியதன் மூலம் படிக்கும் நமக்குள் ஏற்படுத்துகிறார் ரிஷபன் ஜி. நெஞ்சை அள்ளிய காவியம். படிக்கப் படிக்க ருசியோ ருசி. திரும்பத் திரும்பப் பலமுறை படித்து அருந்தினேன். பின்னரே இதை எழுதினேன். ஒரு நாவலும் ஆறு ஆன்மிகச் சிறுகதைகளும் (அத்தனையும் மனதை அள்ளும் ரகம்) கொண்ட ஆன்மிகப் புத்தகம் இது.

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்!




## புவி வெப்பமயமாதலைத் தடுப்போம்

காந்தியத்தைக் கடைபிடித்தால் நலம் பயக்கும்
கைத்தொழில் பெருகுதல் வளம் சேர்க்கும்

மின்சார பயன்பாட்டை குறைத்திட வேண்டும்
மனித ஆற்றலை்யே பெருமளவு பண்படுத்திட வேண்டும்

எரிபொருள் சிக்கனம் என்றைக்கும் வேண்டும்
எண்ணெய் வளம் வருங்காலத்திற்கும் வேண்டும்



மரம் வெட்டுதல் தடை செய்திட வேண்டும்
மரம் வளர்த்தல் கடமையாக்கிட வேண்டும்

சுற்றுச்சூழல் மாசு இன்றி காத்திட வேண்டும்
சுகாதாரமான காற்றை சுவாசித்திட வேண்டும்

இயற்கையை இயற்கையாக இருக்க விட வேண்டும்
இயற்கையை இல்லாமலாக்குவதை நிறுத்திட வேண்டும்

செயற்கையை முடிந்தளவு அகற்றிட வேண்டும்
செயல்கள் மனிதனால் நடந்திட வேண்டும்

விவசாய உற்பத்தியை பெருக்கிட வேண்டும்
விசம் கக்கும் தொழில்கள் நிறுத்திட வேண்டும்

இயற்கை உரங்களை பயன்படுத்திட வேண்டும்
இரசாயண உரங்களை தவிர்த்திட வேண்டும்

உடலுக்கும் உலகிற்கும் நலம் மிதிவண்டி
உலகம் செழிக்க குறைப்போம் விசைவண்டி

மகத்தானது மனித ஆற்றல் உணர்ந்திடுவோம்
மாசுக் கட்டுப்பாட்டிற்கு உதவிகள் புரிந்திடுவோம்

வெப்பமயமாதலைத் தடுக்க எல்லோரும் உதவிடுவோம்
வெப்பமாகும் செயல்களை உடன் நிறுத்திடுவோம்

எங்கும் இயந்திரமயமாதலை ஒழித்திட வேண்டும்
எங்கும் மனிதமயமாதலை வளர்த்திட வேண்டும்

நவீனமயமாதல் உடலுக்கு உலகிற்கும் கேடு பயக்கும்
நவீனத்தில் நல்லதை எடுத்து அல்லதை விட்டுவிடுவோம்

எப்போதும் துணிப்பை ஒன்று வைத்திருப்போம்
எங்கும் பிளாஸ்டிக் பை இல்லாது ஒழித்திடுவோம்

மக்காத குப்பையாகி மாசுபடுத்துகின்றது
மண்ணில் நீரை இறங்க விடாமல் தடுக்கின்றது

பாலித்தீன் பயன்பாட்டை உடன் குறைத்திடுவோம்
பாதிப்பு இல்லா உலகம் நாம் அமைத்திடுவோம்

முயன்றால் முடியாது எதுவுமில்லை உலகில்
முயன்றிடுவோம் யாவருமே வெப்பத்தைக் குறைக்க!

- கவிஞர் இரா.இரவி



## குருவி!

பறவைகளில் சிறியது
பரவசம் தருவது குருவி !

சிலப்பதிகாரம்
நற்றிணை குறுந்தொகை
இலக்கியங்களில் இடம்
பிடித்த குருவி !

தன்னுயிருக்கு மேலாக
தன் குஞ்சுகள் உயிர் காக்கும்
குருவி !

இரை ஊட்டி காக்கும்
இனிய குஞ்சுகளை குருவி !

மிக இனிமை
எழுப்பும் ஒலி குருவி !

கூடு கட்டி வாழும்
கூடி வாழும் குருவி !

சிட்டுகளை
நினைவூட்டும் குருவி !

குழந்தைகள் பார்த்தால்
குதூகலம் பெறும் குருவி !

பறப்பது அழகு
நடப்பது அழகு குருவி !

மெல்லிய தேகம்
பறக்கும் வானம் குருவி !
மூன்றெழுத்து முத்தாய்ப்பு
முத்தமிட்டுக் கொள்ளும்
குருவி !

உழைப்பால் உருவாக்கும்
உன்னத கூடு குருவி !

அருகே வாழ்ந்தது
தூரம் சென்றது குருவி !

வண்ண சிறகு
ரசிக்க அழகு குருவி !

உலகமயத்தால்
விவசாயியோடு பாதித்தது
குருவி !

அலைபேசி கோபுரங்களால்
அழிந்து வருகின்றது
குருவி !

கவிஞர் இரா.இரவி!

## விவேகசிந்தாமணி - மயக்க அணியில் ஒரு பாடல் !

ஆறறிவுள்ள பெண்ணும் ஆறறிவில்லாத ஒரு ஜீவனும் இங்கே மயக்கமடைகிறார்கள் ...பார்ப்போம் ....அடடா...இந்தச் சூழல் என்றென்றும் ரசிக்கக்கூடிய ஒன்று !

நாவல் மரங்கள் அடர்ந்து இருந்த சோலை ஒன்றில் பெண்ணொருத்தி உலாவிக்கொண்டிருந்தாள். அற்புதமான சூழல். மணம் நிரம்பிய மலர்களில் நிறைந்த தேனை உண்டு கரிய வண்டுகள் மயங்கி வழியிலே கிடந்தன. அவற்றைக் கண்டதும் அந்த மங்கை நாவற் பழங்கள் என்றெண்ணி ஒன்றைத் தனது அழகிய பெரிய கையில் எடுத்துக் குனிந்தபடி பார்த்தாள். அப்போது அவ்வண்டு மயக்கநிலையில் இருந்து சற்று விடுபட்டு அவளது அழகிய முகத்தை வானத்துச் சந்திரன் அருகில் வந்து விட்டதே என எண்ணிவிட்டது. மேலும் தான் கிடந்த அவளது சிவந்த கையைத் தாமரை மலர் என்று எண்ணி மயங்கி, சந்திரன் வந்தால் தாமரை குவியத் தொடங்கும் எனப் பயந்து குபீர் என எழும்பிப் பறந்துவிட்டது. இதனைக் கண்ட மங்கை “ பறந்தது வண்டோ ?...பழமோ ? எனக்கு புதுமையாக இருக்கிறதே ....என்று சொல்லியவாறு மயங்கித் தவித்தாள்.

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
.....தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான் அதைச் சம்புவின் கனி என்று
.....தடங்கையால் எடுத்து முன் பார்த்தாள்
வான் உறு மதியம் வந்ததென்று எண்ணி
.....மலர்க் கரம் குவியுமென்று அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
.....புதுமையோ இதுவெனப் புகன்றாள்.
( விவேகசிந்தாமணி – 19 )

அடடா...இங்கே இருவித மயக்கங்கள்...தலைவனைப் பிரிந்த தலைவி மயக்கத்தில் நாவல் கனியென நினைத்து கரிய வண்டொன்றை கையில் எடுப்பதும்.....மங்கையின் முகம் குளிர் நிலவென்று நினைத்தும், மங்கையின் உள்ளங்கைகள் தாமரை மலர் என நினைத்தும் அந்த வண்டு இது அந்திசாயும் நேரம்... தாமரை குவிந்துவிடும்...உள்ளே சிக்கித்தவிக்கும் நிலை வரும் என வண்டு மயக்கமுற்று சட்டென்று பறப்பதும்...ஒரே நிகழ்வில் இரண்டு மயக்கங்கள் ....இந்தப் பாடலை எழுதிய கவிஞரின் கற்பனைத்திறன், விவேகம்,...மொழி வளம்...தமிழ் மண்ணின் சுற்றுச் சூழல்....அற்புதம்...அற்புதம்..நெஞ்சமெல்லாம் இனிக்கிறது. இப்படியே ....தமிழ் திரையிசைப் பாடல்களில் வியத்தலையும் மயக்கத்தையும் கொடுத்தவர் கண்ணதாசன் என்றால் மறுக்கமுடியுமா ? தலைவன் நீண்ட நேர காத்திருப்பில் காதலியை சந்தேகக் கணைகள் கொண்டு தாக்கும் போது அதற்கான காரணத்தை காதலி விளக்கும் விதம் இதே சாயல்தான்...வண்டின் மயக்கம் இங்கே....

நீ வருகின்ற வழிமீது யார் உன்னைக் கண்டார்?
உன் வளை கொஞ்சும் கைமீது பரிசென்ன தந்தார்?
உன் மலர்க்கூந்தல் அலைபாய அவர் என்ன சொன்னார்?
உன் வடிவான இதழ்மீது சுவை என்ன தந்தார்?
உன் மலர்க்கூந்தல் அலைபாய அவர் என்ன சொன்னார்?
உன் வடிவான இதழ்மீது சுவை என்ன தந்தார்?
பொன்வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத
நான் வளைகொண்ட கையாலே மெதுவாக மூட
பொன்வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத
நான் வளைகொண்ட கையாலே மெதுவாக மூட
என் கருங்கூந்தல் கலைந்தோடி மேகங்களாக
நான் பயந்தோடி வந்தேன் உன்னிடம் உண்மை கூற
நீ இல்லாமல் யாரோடு உறவாட வந்தேன்?
உன் இளமைக்குத் துணையாக தனியாக வந்தேன்
நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? – என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்

(இருவல்லவர்கள்) இந்தப் பாடலிலும் காதலன் காதலியைக் கண்டு வியத்தலும் மயக்கமும் கொண்டு பாடுவது அற்புதம்....



பேசுவது கிளியா – இல்லை பெண்ணரசி மொழியா
கோவில் கொண்ட சிலையா கொத்து மலர்க் கொடியா (பணத்தோட்டம்) இன்னும் சுவைப்போம் விவேகசிந்தாமணியின் தமிழ்ச்சுவையை...

கா.ந.கல்யாணசுந்தரம்

## உழைப்பே மருந்து

" உழைக்கும் கரங்களே
மனித இனத்தின்
மா பெரும் சொத்து ..."

நாட்டின் முன்னேற்றத்திற்கு
எத்தனை விஞ்ஞான
யுக்திகள் இருந்தாலும்
உழைக்கும் வர்க்கம்
இருந்தால் மட்டுமே
நாடு செழிக்கும் ..."

உழைப்பாளிகளை
கௌரவிக்க உருவான
தொழிலாளர் தினம்
மகத்தானது ..."

கீழ் மட்ட இடம்
முதல் உயர்மட்ட இடம் வரை
உழைக்கும் வர்க்கம்
இருப்பதே வெற்றிகளின்
ரகசியம் ..."

உழைப்பவர்களையும்
உழைப்பாளிகளையும்
நேசிப்போம் ... "

அவர்கள் நித்தமும்
சிந்தும் வியர்வையில்
நாட்டின் வளர்ச்சி
நறுமணம் பெறுகிறது ..."


உழைப்பாளிகளே
அச்சாணி ஏணி காலம்
நேரம் பார்க்காத
நவரத்தினங்கள் ..."

உழைத்து வாழ வேண்டும்



பிறர்
உழைப்பிலால்
வாழ்ந்திடாதே
..."

ஆர். சீதாராமன்
சீர்காழி



## விழுப்புரம் கிராசிங்...

இரவின் மடியில் மரத்தின்
துயிலைக்கலைக்க
எங்கிருந்தோ
பறந்துவருகிறது ஒரு
கருவண்டு!

செடிகொடிகளின் குறட்டை
ஒலியாய் ஒரு நதியின்
நீர்க்குமிழிகள்

தண்டவாளத்தை ஒட்டிய
வயல்களில் மௌனம்.

எல்லாவற்றையும் ஒரு
பேரிரைச்சலுடன் குறுக்கே
தடக்...தடக்.. தடக் என்று
தாண்டிச்செல்கிறது ஒரு
நீண்ட ரயில் வண்டி
ரயிலுக்கு வெளியே நிகழ்ந்த
விழிப்பைப்போல ....

ரயிலுக்கு உள்ளேயும்
நிகழ்ந்திருக்கலாம் ஓர்
அமைதி...ஒரு தனிமை



இரவிலும்
இன்னும்
சிலருக்குக்
கிடைக்காமல்
தொடர்கிறது
கிராசிங்குடன்
தொடரும்
தொடர்வண்டிப் பயணம்
போல இரைச்சல் மிகுந்த
வாழ்க்கை

மீனாட்சி பாண்டியன்
திருவண்ணாமலை

# சமையல் குறிப்புகள்

## கேழ்வரகு குழி பணியாரம் செய்யும் முறை



இன்றைய காலத்தில் பலரும் தானியங்களை உணவில் சேர்த்துக் கொள்வதை மறந்து விடுகிறார்கள். ஒவ்வொரு தானியத்திற்கும் ஒவ்வொரு விதமான சத்துக்கள் இருக்கின்றன. இந்த தானியங்களை நாம் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் நம் உடலுக்கு அந்த சத்துக்கள் வந்து சேரும். அந்த வகையில் எலும்புகளுக்கும், பற்களுக்கும் அதிக அளவில் தேவைப்படக்கூடிய கால்சியம் சத்து நிறைந்த தானியங்களுள் ஒன்றாக திகழ்வதுதான் ராகி என்று கூறக்கூடிய கேழ்வரகு. கேழ்வரகில் பலரும் அடை, கூழ், கழி, சப்பாத்தி போன்ற முறைகளில் செய்து சாப்பிட முயற்சி செய்வார்கள். இருப்பினும் பலருக்கும் கேழ்வரகின் சுவை பிடிக்காமல் இருக்கும். அப்படிப்பட்டவர்களும் கேழ்வரகை விரும்பி சாப்பிடும் வகையில் செய்யக்கூடிய ஒரு குழி பணியாரத்தை பற்றி தான் இந்த சமையல் குறிப்பு குறித்த பகுதியில் நாம் பார்க்க போகிறோம்.

**தேவையான பொருட்கள்**

ரவை 1/2 கப்
கேழ்வரகு மாவு ஒரு கப்
புளிக்காத தயிர் ஒரு கப்
தண்ணீர் 1/2 கப்
எண்ணெய் 2 டேபிள் ஸ்பூன்
கடுகு ஒரு டீஸ்பூன்
சீரகம் ஒரு டீஸ்பூன்
உளுந்து ஒரு டேபிள் ஸ்பூன் கடலைப்பருப்பு ஒரு டேபிள் ஸ்பூன்
பச்சை மிளகாய் 2
வெங்காயம் ஒன்று
பெருங்காயம் 1/4 டீஸ்பூன்
கருவேப்பிலை 2 கொத்து
கொத்தமல்லி பொடியாக நறுக்கியது ஒரு கைப்பிடி அளவு உப்பு தேவையான அளவு

**செய்முறை :**

முதலில் ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ரவை, கேழ்வரகு மாவு, தயிர், தண்ணீர் இவை நான்கையும் ஒன்றாக சேர்த்து நன்றாக கலந்து 20 நிமிடம் மூடி போட்டு மூடி வைத்துக் கொள்ளுங்கள். 20 நிமிடம் கழித்து மிக்ஸியில் இந்த மாவை சேர்த்து ஒரு நிமிடம் மட்டும் அரைத்து எடுத்துக் கொள்ளுங்கள். வேறு தண்ணீர் எதுவும் சேர்க்கக்கூடாது. அரைத்த இந்த மாவை அப்படியே ஒரு பாத்திரத்தில் மாற்றிக்கொள்ளுங்கள். இப்பொழுது அடுப்பில் ஒரு கடாயை வைத்து கடாய் சூடானதும் அதில் எண்ணெயை ஊற்ற வேண்டும். எண்ணெய் நன்றாக காய்ந்ததும் அதில் கடுகு, சீரகத்தை போட்டு கடுகு வெடித்ததும் உளுந்து, கடலை பருப்பையும் சேர்த்து உளுந்து மற்றும் கடலைப்பருப்பின் நிறம் மாறும் வரை வதக்க வேண்டும். - இவற்றின் நிறம் மாறிய பிறகு பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், பொடியாக நறுக்கிய வெங்காயம், கருவேப்பிலை போன்றவற்றையும் போட்டு இதனுடன் பெருங்காயத் தூளையும் சேர்த்து நன்றாக வதக்க வேண்டும். இவை அனைத்தும் நன்றாக வதங்கிய பிறகு அதை அப்படியே எடுத்து நாம் தயார் செய்து வைத்திருக்கும் மாவில் சேர்த்து விட வேண்டும். கடைசியாக பொடியாக நறுக்கிய கொத்தமல்லி தலையையும் மாவில் சேர்த்து தேவையான அளவு உப்பையும் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள். குழிப்பணியார மாவு தயாராகிவிட்டது. இப்பொழுது அடுப்பில் குழிப்பணியார கல்லை வைத்து கல் சூடானதும் அனைத்து குழிகளிலும் எண்ணெய் அல்லது நெய்யை ஊற்றிக் கொள்ளுங்கள்.

அவை காய்ந்ததும் கரண்டியை பயன்படுத்தி மாவை எடுத்து குழியில் ஊற்ற வேண்டும். ஒரு புறம் வெந்ததும் அதை திருப்பிப்போட்டு மறுபுறமும் வேக வைத்து எடுத்தால் சுவையான ஆரோக்கியமான கேழ்வரகு குழிப்பணியாரம் தயாராகி இருக்கும். இதற்கு தொட்டுக் கொள்வதற்கு தேங்காய் சட்னி அருமையாக இருக்கும்.

## சக்கர வள்ளி கிழங்கு குலோப் ஜாமுன் செய்யும் முறை

பலரும் தங்களுடைய இல்லங்களில் பலகார வகைகளை செய்யும் வழக்கத்தை வைத்திருப்பார்கள். அதில் இனிப்பு பலகாரம், காரப்பலகாரம் என்று இரண்டு வகைகளில் செய்வார்கள். இனிப்பு பலகாரங்களில் பலரும் எளிதில் செய்யக்கூடிய ஒரு பலகாரமாக திகழ்வதுதான் குலோப் ஜாமுன். அனைத்து கடைகளிலும் மிகவும் எளிதில் கிடைக்கக்கூடியது மாவை தண்ணீர் ஊற்றி பிணைந்து உருட்டி எண்ணெயில் பொரித்து எடுத்தாலே சுவையான குலோப் ஜாமுன் தயாராகிவிடும். இந்த குலோப் ஜாமுனை சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே விரும்பி சாப்பிடுவார்கள். அப்படிப்பட்ட குலோப்ஜாமுனை ஆரோக்கியமான முறையில் செய்வது எப்படி என்று தான் இந்த சமையல் குறிப்பு குறித்த பகுதியில் நாம் பார்க்க போகிறோம்.

**தேவையான பொருட்கள்**

சர்க்கரைவள்ளி கிழங்கு 1/2 கிலோ
பால் பவுடர் 1/4 கப்
கோதுமை மாவு 2 டேபிள் ஸ்பூன்
நாட்டு சக்கரை 1 1/2 கப்
தண்ணீர் 1 1/2 கப்
ஏலக்காய் 1/4 டீஸ்பூன்



எண்ணெய் பொறிப்பதற்கு தேவையான அளவு

**செய்முறை :**

முதலில் சர்க்கரை வள்ளி கிழங்கின் முனைகளை நறுக்கி சிறு துண்டுகளாக்கி இட்லி சட்டியில் வைத்து இட்லியை வேக வைப்பது போல் பத்து நிமிடம் வேகவைத்து எடுத்துக் கொள்ளுங்கள். சர்க்கரை வள்ளி கிழங்கு ஆறியதும் அதன் தோலை நீக்கி நன்றாக மசித்துக்கொள்ள வேண்டும். மற்றொரு புறத்தில் அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து அதில் நாட்டு சர்க்கரை தண்ணீர் ஊற்றி சர்க்கரை நன்றாக கரையும் வரை அடுப்பில் வைத்திருக்க வேண்டும். நன்றாக கரைந்த பிறகு அதை வடிகட்டி வேறொரு பாத்திரத்தில் மாற்றி அதனுடன் ஏலக்காய் துளை போட்டு தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

## வெயில் நேரத்தில் எதையெல்லாம் சாப்பிடக்கூடாது?.. வாங்க பார்ப்போம்!...

கோடைகாலம் வந்து விட்டாலே வெயில் சுட்டெரிக்கும். கோடைகாலத்தில் சரியான உணவு முறையை கடைப்பிடிப்பது முக்கியம். அது தெரியாமல் நம் விருப்பத்திற்கு சாப்பிட்டால் ஏற்படலாம்..

படுக்குமுன் ஒரு ஸ்பூன் குடித்தால், 7 கிலோ எடை குறையும் தொப்பை மற்றும் தொடை கொழுப்பு வெறும் 3 நாட்களில்



பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கும். அதாவது, பல வகைகளிலும் உடல் நலம் பாதிக்கும். அந்த வகையில் கடுமையான வெயில் நேரங்களில் எதையெல்லாம் சாப்பிடக்கூடாது என்பது பற்றி தெரிந்துகொள்வோம்:

புளிப்பு காரம் அதிகம் சேர்க்கப்படும் புளிக்குழம்பு காரக்குழம்பு வகைகளை தவிர்ப்பது நல்லது.. உடல் சூட்டையும் பித்தத்தையும் அதிகரிக்கும் என்பதால் வெயில் காலத்தில் இதையெல்லாம் தவிர்க்க வேண்டும்.

காரமான உணவுகள் தொடர்ந்து சாப்பிட்டால் உடல் சூட்டால் நீர் கடுப்பு, சிறுநீரில் ரத்தம் வெளியேறுதல் போன்ற பிரச்சனைகள் மறைந்துவிடும்!

வெயிலில் எண்ணெய் பலகாரங்களை தவிர்க்க வேண்டும். அதேபோல், வெயில் நேரத்தில் தேநீர் குடிப்பது பித்தத்தை அதிகப்படுத்தும். அதனால் முடிந்த அளவு வெயில் காலங்களில் இவற்றை தவிர்ப்பது நல்லது..

அதிக காரமான பச்சை மிளகாய், மிளகு மசாலா சேர்த்த உணவுகள் வயிற்றுப் போக்கை ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது.. மேலும் ஆசனவாயில் எரிச்சலையும் ஏற்படுத்தும். அதேபோல், கடைகளில் விற்கும் பரோட்டா போன்ற மைதா உணவுகள் மற்றும் ஃபாஸ்ட்புட் உணவுகளை தவிர்க்க வேண்டும்..


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹1.80
லட்சம்
800 SQFT
1. முன்பணம் ₹ 1,00,000/-
2. 50% பணம் செலுத்தினால் பத்திரப்பதிவு செய்யப்படும்.
3. மாதம் குறைந்தபட்சம் ₹.2500/- முதல் செலுத்தலாம்
4. முழு தொகையும் செலுத்திய பின்பு உரிய நபரிடம் பத்திரம் ஒப்படைக்கப்படும்.
5. பத்திரப்பதிவு
6. பட்டா COPY
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
அரக்கோணம் பாராஞ்சி
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


குன்னத்தோழம்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெனிமக்கு வுரளன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


ADVERTISE
WITH US
7789941009


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families


உ
முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591,9578622711


ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services (Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services (Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply (Skilled & Unskilled Stafffor Industries, Apartments, Offices)
WHY CHOOSE US?
Experienced & Professional Team
24/7 Reliable Support
Affordable & Transparent Pricing
Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1, Moovarasampet Main Road, Madipakkam, Chennai-600091.
+91 93632 98980
ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com


SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are
HIRING
PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS:THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81



Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennal
Real Choice Chennal
Real Choice Chennal


ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


THANIGAI
WANTED
ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work
☑ No Age Limit / No Investment
☑ No Experience/No Qualification
☑ No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com


எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம் 10000sqft)
Ph.9600660997

























**ATTENTION**

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு

**ஆட்கள் தேவை**

ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை

கல்வி தகுதி
10 முதல் any Degree

தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற
அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
**18,000 முதல் 22,000 /-**
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com


































## Special Invitation

to retired seniors housewives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided

For successful business.


Contact Mr. Irudaya Raj
Ph.9486634780








# பல்சுவை களஞ்சியம்




## பயணங்கள் முடிவதில்லை...

பல பயணங்களில் தொகுப்பினை நான் எழுதி வந்தாலும் இந்த கோடையில் பயணம் மேற்கொள்ளும் பலருக்கு பலவிதமான டிப்ஸ் அதாவது உபயோகரமான தகவல்களை சொல்ல விரும்புகிறேன்.

1.கோடை விடுமுறையை ரசிக்கும்படியாக முதலில் மேற்கொள்ளுங்கள் .

2. நாம் பயணம் செய்ய தேவைகளுக்கான பொருட்களை முன்கூட்டியே வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். குறிப்பாக விமானப்பயணம் மேற்கொள்ளும் பொழுது எந்த பொருட்கள் அனுமதிக்கப்படுகிறது அதை மட்டும் கொண்டு செல்லுங்கள் ஏனெனில் அங்கு செக் பண்ணும் பொழுது பல பொருட்களை அவர்கள் தூக்கி எறிந்து விடுவார்கள்.

3.. எந்த இடத்திற்குச் செல்ல வேண்டுமோ அந்த இடத்திற்கான குறிப்புகளையும் அதைப் பார்க்கவேண்டிய முக்கியமான இடங்களையும் அதன் சிறப்புகளையும் முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

4. உள்நாடு, வெளிநாடு தங்கும் இடங்களில் அல்லது விடுதிகளில் பக்கெட் அல்லது வாளி குளிக்கும் இடத்தில் வைக்கும் பழக்கம் தற்காலங்களில் இல்லை. எனவே கையில் ஒரு பாட்டிலோ, மக்கோ(MUG) எடுத்துச் செல்லுதல் நல்லது. ஏனெனில் பெரும்பான இடங்களில் ஷவர் டைப் பாத்ரூம் தான் உள்ளது.

5. அந்தந்த இடங்களின் சிறப்பான பொருட்களை வாங்கும் பொழுது அதனுடைய விவரங்களை தெரிந்து கொண்டு வாங்குதல் நல்லது. ஏனெனில் அத்தகைய பொருட்கள் இப்பொழுது அமேசான் போன்ற தளங்களில் கிடைக்கிறது. அந்தந்த சீதோஷ்ண நிலைக்கேற்றவாறு உடைகளைத் தேர்வு செய்து எடுத்துச் சென்றால் நல்லது. பல இடங்களில் வழிப்பறி கைப்பறி நடக்கும் . அதைக் கவனம் கொள்ளுதல் அவசியம்.




6. பல இடங்களில் புகைப் படங்கள் எடுக்கும் பொழுது அந்த இடத்தினுடைய ஆபத்தான இடமாக இருப்பின் தவிர்த்தல் நல்லது . மேலும் பல புகைப்படம் எடுத்து தருகிறேன் என்று பணம் பறிப்பதும் அல்லது கைபேசியை கவர்ந்து செல்வதும் பல இடங்களில் நடைபெறுகிறது. இது குறித்து கவனம் அவசியம். ஒரு வழிகாட்டி நம்முடன் இருத்தல் நலம் அப்படி இல்லாவிட்டால் ,அதைப் பற்றிய தகவல்கள் தங்கள் கையில் இருத்தல் அவசியம். எந்த இடத்தில் இருந்து நீங்கள் கிளம்புகிறீர்கள் என்பதற்கான ஆதாரங்களும் தங்கள் கைவசம் இருத்தல் வேண்டும் மேலும் பாஸ்போர்ட், விசா போன்ற ரெக்கார்ட்ஸ் எப்போதும் கைப்பையில் இருத்தல் நலம் பயக்கும்.

7. பல இடங்களில் சோப்பு, டவல் தந்தாலும் நாம் எடுத்துச் செல்லுதல் நல்லது . நாம் அவர்கள் தரும் டவலில் ஏதாவது கறை ஏற்பட்டால் அவர்கள் அதற்கான தொகையை வசூல் செய்கிறார்கள்.

8. நம் உடம்புக்கு ஏற்ற உணவுகளை உண்ணுதல் நலம் .அதை விட்டுவிட்டு அந்த உணவை சுவைக்கிறேன் என்ற பெயரில் நம் ஆரோக்கியத்தை சீர்குலைத்தல் நல்லதல்ல.

9. அந்தந்த ஊரின், நாட்டின் கட்டுப்பாடுகளைக் கவனம் கொள்ளுதல் அவசியம்.

10. இறுதியில் ஒவ்வொரு பயணத்திலும் தங்கும் இடத்திலிருந்து கிளம்பும்பொழுது அனைத்துப் பொருட்களையும் எடுத்துக் கொண்டோமா என்று ஒன்று இரண்டு முறை செக் செய்துவிட்டு கிளம்புதல் நலம் பயக்கும்.

அனைவரும் இந்த கோடையை அற்புதமாக பயணம் மேற்கொண்டு அனுபவங்களையும் இனிமையான நினைவுகளையும் பெறுவதற்கான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல்களை பிரசுரிக்க உதவிய தமிழ்நாடு இ பேப்பர் குழுமத்திற்கு மனமார்ந்த நன்றி

## கோயில்களில் செய்யப்படும் பிரசாதம் மற்றும் நிவேதனம்

1..கேரளம், இரிஞ்சாலக்குடாவில் பரதன் ஆலயத்தில், கத்தரிக்காயால் தயாரிக்கப்பட்ட வழுதனங்கா எனும் நைவேத்தியம் செய்யப்படுகிறது. செம்பைவைத்யநாத பாகவதர் இந்தப்பிரசாதம் உண்டு தன் வயிற்று நோய் தீர்ந்ததாக எழுதிய கடிதம் ஆலயத்தில் காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

2..குற்றாலம் குற்றாலநாதரு க்கும் குழல்வாய்மொழி அம்மைக்கும் நாள்தோறும் சுக்கு, மிளகு சேர்த்த கஷாயம் படைக்கப்படுகிறது. அருவியால், அவருக்கு தலைவலியும் ஜலதோஷமும் வராமல் இருக்க இந்த ஐதீகம்.

3..திருநெல்வேலி பூமாதேவி அம்மன் ஆலயத்தில் தமிழ் மாதக் கடைசி வெள்ளியன்று கூட்டாஞ்சோறும் சர்க்கரைப்பொங்கலும் நிவேதனம் செய்வர். துவரம்பருப்பு, அரிசி, காய்கறிகள் எல்லாம் சேர்த்து தேங்காய் அரைத்து விட்டு தயாரிக்கப்படுவதுதான் கூட்டாஞ்சோறு.

4..சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கு கிச்சடி சம்பா சாதமும் சிதம்பரம் கொத்சும் சிறப்பான நிவேதனங்கள்.

5..கொல்லூர் மூகாம்பிகைக்கு இரவு அர்த்தஜாம பூஜையின் போது சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், லவங்கம், சர்க்கரை சேர்த்து தயாரிக்கப்படும் மணமிக்க கஷாயம் பிரசாதமாகத் தரப்படுகிறது.

6..கல்லணை அருகில் உள்ள கோயிலடி என்ற ஸ்தலத்தில் உள்ள அப்பக்குடத்தானுக்கு தினமும் அப்பம் நிவேதனம் செய்யப்படுகிறது.

7..மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் காலையில் ஞானப்பால் பிரசாதமும் இரவில்பள்ளியறையின்போது கமகமக்கும் சுண்டலும் பாலும் நிவேதனம்செய்யப்படுகின்றன.

8..கேரளம், குருவாயூரில் குருவாயூரப்பனுக்கு சுண்டக்காய்ச்சிய பால் பாயசம் பிரசாதமாக படைக்கப்படுகிறது.

9..கேரளம், திருவிழா மகாதேவர் ஆலயத்தில் மூலிகைகளைச் சாறு பிழிந்து பாலுடன் கலந்து ஈசனுக்கு நிவேதனம் செய்து பின் பக்தர்களுக்குப் பிரசாதமாக அளிக்கின்றனர். இந்த பால் வயிற்றுக் கோளாறுகளைத்

10..நெல்லையில் உள்ள புட்டாத்தி அம்மன் ஆலயத்தில் அரிசி, வெல்லம், ஏலக்காய் சேர்த்துத் தயாரிக்கப்படும் புட்டுதான் பிரசாதம்.

11ஸ்ரீ..ஸ்ரீமுஷ்ணம் பூவராக மூர்த்திக்கு தினமும் அபிஷேகத்திற்குப் பிறகு முக்தாபி சூரணம் எனும் மகா பிரசாதம் நிவேதனம் செய்யப்படுகிறது. இந்த பிரசாதம் நோய்களை தீர்க்கும் மருந்தாகக்கருதப்படுகிறது.

12..நவகிரக, சுக்கிர தலமான கஞ்சனூரில் அன்னாபிஷேகத்தின் போது சுரைக்காய் பிரசாதம் படைக்கப்படுகிறது.

13..கேரள மாநிலம் கொட்டாரக்கராவில் விநாயகப் பெருமானுக்கு சுடச்சுட நெய்யப்பம் செய்து



நிவேதித்துக்கொண்டே இருக்கின்றனர். உதயம் முதல் அஸ்தமனம் வரை அப்பம் ஏற்கும் கணபதி இவர்.

14..திருப்பதி வெங்கடாஜலபதிக்கு விதவிதமான பிரசாதங்கள் செய்யப்பட்டாலும் குலசேகரன்படியைத் தாண்டி மண் சட்டியில் நிவேதிக்கப்படுவது தயிர்சாதம் மட்டுமே.

15..திருப்பெருந்துறை எனும் ஆவுடையார் கோயிலில் ஆத்மநாதருக்கு புழுங்கலரிசிச் சோறும் பாகற்காய் கறியுமே பிரசாதம்.

16..திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாளுக்கு தினமும் இரவில் முனியோதரயன் பொங்கல் எனும் அமுது செய்விக்கப்படுகிறது.

17..காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுக்கு சுக்கு, மிளகு, கறிவேப்பிலை மணத்துடன் கூடிய காஞ்சிபுரம் இட்லிதான் முதல் நைவேத்யம்.

18..ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயத்தில் ரங்கநாதருக்கு தேங்காய்த்துருவலும் துலுக்க நாச்சியாருக்கு ரொட்டி, வெண்ணெய், கீரையும் நிவேதனமாகப் படைக்கப்படுகிறது. தினமும் இரவில் அரவணை பிரசாதமும் உண்டு.

19..திருவாரூர் தியாகராஜப் பெருமானுக்கு நெய்யில் பொறிக்கப்பட்ட முறுக்கு தினசரி பிரசாதம்.

# மீம்ஸ்





எந்த விரல் மூலம் விபூதி பூசவேண்டும்

விபூதியை எந்த விரல்களில் பூச வேண்டும், எந்த விரல்களில் பூசக்கூடாது. அவ்வாறு விரல்களின் மூலம் பூசினால் என்ன பலன் என்பதையும் நமது முன்னோர்கள் அழகாக கூறியுள்ளனர்.

விபூதியை எடுக்க சில விரல்களை பயன் படுத்தும் போதும் தீமையும், சில விரல்களை பயன்படுத்தும்போது அதீத நன்மைகளும் ஏற்படும். ஆகவே விபூதியை எடுக்கும்போது, கீழே குறிப்பி ட்டுள்ள வரிகளில் உள்ள முறைகளை பயன்படுத்தி, மிகவும் கவனமாக எடுத்து அணியவேண்டும்.

கட்டை விரல்: கட்டை விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் தீராத வியாதி வரும்.

ஆள் காட்டி விரல்: ஆள் காட்டி விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் பொருட் கள் நாசம்.

நடுவிரல்: நடுவிரலால் விபூதியை தொட்டு இட்டுக்கொண்டால் அணிந்தா ல் நிம்மதியின்மை.

மோதிர விரல்: மோதிர விரலால் விபூதியை தொட்டுக்கொண்டு அணிந்தால் மகிழ்ச்சியான வாழ்க்கை.

சுண்டு விரல்: சுண்டு விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் கிரகதோஷம் ஏற்படும்.

மோதிர விரல் கட்டை விரல்


மோதிர விரலாலும், கட்டை விரலாலும் சேர்த்து விபூதியை எடுத்து மோதிர விர லால் விபூதியை இட்டுக் கொணடால் உலகமே வசப்படம். எடுக்கும் முயற்சி வெற்றி பெரும்.






## விடுகதை

| | |
|---|---|
| நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன் நான் யார்? | மணிக்கூடு |
| மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன? | ஈசல் |
| நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்? | பென்சில் |
| விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன? | தும்பிக்கை |
| வெள்ளத்தில் போகாது, வெந்தணலில் வேகாது. கொள்ளையடிக்க முடியாது, கொடுத்தாலும் குறையாது. அது என்ன? | கல்வி |



# ஜோக்ஸ்

வீட்டுக்கு வந்த விருந்தாளியிடம்

பெண்: இலையை மடிக்க வேண்டாம்.

விருந்தினர்: ஏன் மடிக்க வேண்டான்னு சொல்றீங்க

பெண்: அடுத்து வர்றவங்க சாப்பிடத் தான்.

விருந்தினர்: ஐய்யோ! அவங்க கோவிச்சுக்க மாட்டாங்களா?

பெண்: இப்போ நீங்க கோவிச்சுக்கிட்டீங்களா! என்ன?

விருந்தினர்: ???

------------------------

எதிர்பதம்

Subramaniyan "Saw"my-யின் எதிர்பதம் என்ன?

Subramaniyan "did not" see me

----------------------

"இத்தனை நாளா கண்ட பசங்களோட சுத்திட்டு இருந்த நம்ம பொண்ணு இப்ப பரவாயில்லீங்க"

"எப்படி சொல்ற?"

"பாருங்க! குழந்தைங்க டிரஸ் தைச்சிட்டுருக்கா பார்த்தீங்களா?"

"நாசமா போச்சு, அவள முதல்ல லேடி



டாக்டர்கிட்ட கூட்டிப்போ"

------------------------

காதலன் : "டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா?"

காதலி : "ஆமாம் டியர், எனக்குன்னு ஒருத்தர் பொறக்காமலா இருப்பாங்க?"

காதலி : "ஏன் டியர் நீங்க என்ன மட்டும்தான் லவ் பண்றீங்களா?"

காதலன் : "நிச்சயமா நீதான், ஏன்னா நேத்திக்குதான் லிஸ்ட்ட செக் பண்ணினேன்"

------------------------

மனைவி : "உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல ‘ஐ லவ் யூ’ சொன்னப்ப, நான் திக்கு முக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்"

கணவன் : "பின்ன ஞாபகம் இருக்காதா, அந்த 1 மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே நான் மகிழ்ச்சியா இருந்தேன்"

------------------------

ஆண் : "ஐ லவ் யூ டியர், உனக்காக என் உயிரக்கூட தயாராக இருக்கேன்"

பெண் : எப்ப? எப்ப? ? ? ?....

------------------------

டேட்டிங்போது பேச்சை இப்படி ஆரம்பிக்கலாமே. . .

பையன் : "உனக்கு கீரைப் பிடிக்குமா?"

பெண் : "ஊஹும். . ."

பையன் : உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருக்காங்களா?

பெண் : ஊஹும். . .

பையன் : "சப்போஸ், உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருந்தா அவங்களுக்கு கீரை பிடிக்குமா?"

பெண் : ?!?!?!



# வாங்க சம்பாதிக்கலாம்

## ராணுவ வாகன நிறுவனத்தில் பணி



ராணுவ கவச வாகன நிறுவனத்தில் ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சீனியர் மேனேஜர் (மெடிக்கல்) 3, பார்மசிஸ்ட் 3, நர்சிங் அசிஸ்டென்ட் 3 என மொத்தம் 9 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: எம்.பி.பி.எஸ்., / பி.பார்ம்., / பி.எஸ்சி.,
வயது: 18–30 (17.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
General Manager/HR (CO), Armoured Vehicles Nigam Limited, HVF Road, Avadi, Chennai-600 054
கடைசிநாள்: 12.5.2026
விவரங்களுக்கு: avnl.co.in

## இஸ்ரோ ஆய்வு மையத்தில் சயின்டிஸ்ட் வாய்ப்பு



இஸ்ரோ ஆய்வு மையம் கீழ் செயல்படும் திரவ உந்துசக்தி அமைப்பு மையத்தில் (எல்.பி.எஸ்.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சயின்டிஸ்ட் / இன்ஜினியர் பிரிவில் மொத்தம் 6 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,
வயது: 18 – 28, 18 – 30 (12.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 750 (ரூ. 500 ரீபன்ட்). எஸ்.சி.,/ எஸ்.டி., பிரிவினருக்கு (ரூ. 750 ரீபன்ட்).
கடைசிநாள்: 12.5.2026
விவரங்களுக்கு: lpsc.gov.in

## பத்தாம் வகுப்பு முடித்தவருக்கு ராணுவத்தில் 190 பணியிடங்கள்



இந்திய ராணுவத்தில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

'சிவிலியன் ஸ்விட்ச் போர்டு ஆப்பரேட்டர்' பிரிவில் மொத்தம் 190 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு
வயது: 18–25 (31.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை : இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
The Commandant, Headquarters, 2 Signal Training Centre, Panaji GOA – 403 001
கடைசிநாள்: 31.5.2026
விவரங்களுக்கு: indianarmy.nic.in

## யூனியன் வங்கியில் 1865 அப்ரென்டிஸ் காலியிடங்கள்



பொதுத்துறையை சேர்ந்த யூனியன் வங்கியில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'அப்ரென்டிஸ்' பிரிவில் உ.பி., 335, ஆந்திரா 303, மஹாராஷ்டிரா 196, தெலுங்கானா 164, கர்நாடகா 131, ம.பி., 116, தமிழகம் 95 உட்பட மொத்தம் 1865 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு
வயது: 20–28 (1.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு சான்றிதழ் சரிபார்ப்பு.
ஊதியம்: ரூ. 15,000 – 20,000.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 944. எஸ்.சி.,/ எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 236.
கடைசிநாள்: 19.5.2026
விவரங்களுக்கு: unionbankofindia.bank.in

## ஆராய்ச்சி மையத்தில் வேலை



இந்திய அணுசக்தி துறையின் கீழ் செயல்படும் 'டாடா' ஆராய்ச்சி மையத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இன்ஜினியர் 2, டிரேட்ஸ்மேன் 3, சயின்டிபிக் ஆபிசர் 1, நூலக பயிற்சியாளர் 3, வொர்க் அசிஸ்டென்ட் 2 என மொத்தம் 11 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு / ஐ.டி.ஐ., / டிப்ளமோ / பி.இ.,
வயது: 18 – 28 (16.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 16.5.2026
விவரங்களுக்கு: tifr.res.in

## அழைக்கிறது ரயில் நிறுவனம்




மத்திய ரயில்வே அமைச்சகத்தின் கீழ் செயல்படும் 'ரயில் நில மேம்பாடு ஆணையத்தில்' ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'இன்ஜினியர்' பிரிவில் சிவில் 30, எலக்ட்ரிக்கல் 10 என மொத்தம் 40 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,
வயது: 18–45 (22.5.2026ன் படி)
பணிக்காலம்: ஓராண்டு. பணி நீடிப்புக்கு வாய்ப்பு உள்ளது.
அனுபவம்: தொடர்புடைய பிரிவில் பணி அனுபவம் அவசியம்.
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு
ஊதியம்: மாதம் ரூ. 76 ஆயிரம்
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து rlda.indianrailways.gov.in என்ற இ-மெயிலுக்கு அனுப்ப வேண்டும்.
விண்ணப்பக்கட்டணம்: இல்லை.
கடைசிநாள்: 22.5.2026
விவரங்களுக்கு: rlda.indianrailways.gov.in

# அமெரிக்கா-ஈரான் அமைதி ஒப்பந்த நம்பிக்கையால் சென்செக்ஸ் 941 புள்ளிகளும், நிஃப்டி 298 புள்ளிகள் உயர்வு!




ஈரான் உடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்ததையடுத்து, கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்ட சரிவைத் தொடர்ந்து, பங்குச் சந்தையின் முக்கியக் குறியீடுகளான சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி ஆகியவை மீண்டெழுந்தன. இதனையடுத்து, நிஃப்டி குறியீடு 24,300 புள்ளிகளுக்கு மேல் சென்று வர்த்தகத்தை நிறைவு செய்தது.

வர்த்தக அமர்வில், பங்குச் சந்தையில் முதலீட்டாளர்கள் அவ்வப்போது லாபப் பதிவு மேற்கொண்டனர். இருப்பினும், வர்த்தகத்தின் கடைசி ஒரு மணி நேரத்தில் ஏற்பட்ட தொடர் வாங்குதல் உள்ளிட்டவையால் பங்குச் சந்தையின் மீதான ஆர்வம் கணிசமாக அதிகரித்தது.

வர்த்த முடிவில், சென்செக்ஸ் 940.73 புள்ளிகள் உயர்ந்து 77,958.52 புள்ளிகளாகவும், நிஃப்டி 298.15 புள்ளிகள் உயர்ந்து 24,330.95 புள்ளிகளாக நிலைபெற்றது.

இந்திய ரூபாய், பொறுத்தவரை, முந்தைய வர்த்தக அமர்வில் டாலருக்கு ஒன்றுக்கு ரூ. 95.43 என்ற புதிய குறைந்தபட்ச நிலையை எட்டியிருந்த நிலையில், பிறகான வர்த்தகத்தில், ரூபாய் மதிப்பு வலுவான மீட்சியைக் கண்டது. முந்தைய நாள் நிறைவு விலையான ரூ. 95.29ஐ ஒப்பிடுகையில், இன்று 68 காசுகள் உயர்ந்து ரூ. 94.61 என்ற நிலையில் வர்த்தகத்தை நிறைவு பெற்றது.

சென்செக்ஸில் இன்டர்குளோப் ஏவியேஷன், மஹிந்திரா & மஹிந்திரா, ட்ரெண்ட், பஜாஜ் ஃபைனான்ஸ், பஜாஜ் ஃபின்சர்வ் மற்றும் டெக் மஹிந்திரா உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தும் மறுபுறம் லார்சன் & டூப்ரோ, ஹிந்துஸ்தான் யூனிலீவர், என்டிபிசி மற்றும் பவர் கிரிட் ஆகிய பங்குகள் சரிந்தன.

நிஃப்டி-யில் இன்டர்குளோப் ஏவியேஷன், ட்ரென்ட், டாடா மோட்டார்ஸ் பயணிகள் வாகனங்கள், ஸ்ரீராம் ஃபைனான்ஸ் மற்றும் ஏசியன் பெயிண்ட்ஸ் உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தும் மறுபுறம் ஓஎன்ஜிசி, எல்&டி, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், பவர் கிரிட் கார்ப் மற்றும் என்டிபிசி ஆகிய பங்குகள் சரிந்தன.

மின்சாரம், நுகர்வோர் பொருட்கள் மற்றும் எரிசக்தி ஆகிய துறைகளைத் தவிர, மற்ற அனைத்துத் துறைசார் குறியீடுகளும் உயர்ந்த நிலையில் வர்த்தகத்தை நிறைவு செய்தன. குறிப்பாக, ஆட்டோமொபைல், ஊடகம், தனியார் வங்கிகள், பொதுத்துறை வங்கிகள், ரியல் எஸ்டேட், உலோகம் மற்றும் மருந்துத் துறை சார்ந்த குறியீடுகள் தலா 1 முதல் 2 சதவீதம் வரை உயர்ந்தன.

பங்குகளை பொறுத்தவரை, 4வது காலாண்டு நிகர லாபம் 30% உயர்ந்த நிலையில், ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனத்தின் பங்குகள் 1% உயர்ந்தன. காலாண்டு லாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் பங்குகள் 1% சரிந்தன. 4வது காலாண்டில் வலுவான வருவாய் ஈட்டியதன் அடிப்படையில் கோஃபோர்ஜ் நிறுவனத்தின் பங்குகள் 9% உயர்ந்தன. சிறப்பான நிதி முடிவுகளின் துணையுடன் பூனாவல்லா ஃபின்கார்ப் நிறுவனத்தின் பங்குகள் 4% உயர்ந்தன.

பங்குச் சந்தை தரவுகளின் அடிப்படையில், நேற்று (செவ்வாய்க்கிழமை) அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் ரூ. 3,621.58 கோடி மதிப்பிலான பங்குகளை விற்பனை செய்துள்ளனர்.

பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா, ஆதித்யா பிர்லா கேப்பிடல், டேட்டா பேட்டர்ன்ஸ், செயில், நாட்கோ பார்மா, அதானி கிரீன் எனர்ஜி, வர்தமான் டெக்ஸ்டைல்ஸ், நெஸ்லே இந்தியா, கம்மின்ஸ், லாயிட்ஸ் மெட்டல்ஸ், கிர்லோஸ்கர் ஆயில், ஜே & கே வங்கி, ஹிட்டாச்சி எனர்ஜி உள்ளிட்ட 160க்கும் மேற்பட்ட பங்குகள் மும்பை பங்குச் சந்தையில் 52 வார உச்சத்தை எட்டியது.

கச்சா எண்ணெய் 1.67% சரிந்து பேரலுக்கு ஒன்றுக்கு 108 அமெரிக்க டாலர் என்ற அளவில் வர்த்தகமானது.





இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No



## அதிக அளவில் பெண்கள், தலித்துகள் தேர்வு
## சட்டசபைக்கு செல்லும் 25 சிறுபான்மை எம்.எல்.ஏ.க்கள்



**சென்னை, மே 07:** சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றவர்களில் 25 பேர் சிறுபான்மையினர்கள். இதில் 13 பேர் தமிழக வெற்றிக் கழகத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், மரிய வில்சன், தாகிரா உள்ளிட்ட 13 பேர் அக்கட்சியில் இருந்து எம்.எல்.ஏ.க்கள் ஆகி உள்ளனர்.

கடந்த 2021 சட்டசபை தேர்தலில் சிறுபான்மை சமூகத்தில் இருந்து 15 பேர் மட்டுமே எம்.எல்.ஏ.க்களாக இருந்தனர். தற்போது அவர்களது எண்ணிக்கை மேலும் 10 உயர்ந்து 25 ஆக அதிகரித்துள்ளது. தி.மு.க.வில் இருந்து மனோஜ்பாண்டியன், ஆஸ்டின் தேர்வாகி உள்ளனர். மேலும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கில் இருந்து 2 பேரும், மனித நேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா (நாகப்பட்டினம்), மனித நேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி (சிதம்பரம்) ஆகியோர் உதயசூரியன் சின்னத்தில் நின்று போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

இந்த சட்டசபையில் 9 எம்.எல்.ஏ.க்கள் முஸ்லிம்கள் ஆவார்கள். தமிழக வெற்றிக் கழகத்தில் இருந்து 3 முஸ்லிம்கள் எம்.எல்.ஏ. ஆக தேர்வு செய்யப்பட்டனர். தி.மு.க.வில் இருந்து ஒருவரும், காங்கிரசில் இருந்து ஒருவரும் எம்.எல்.ஏ.வாகி உள்ளனர். அ.தி.மு.க.வில் இருந்து கிறிஸ்தவ சமூகத்தை சேர்ந்த லீமா ரோஸ் (லால்குடி) தேர்வாகி உள்ளார்.

இந்த சட்டசபையில் 25 பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தலித்துகள் அதிகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 49 பேர் எம்.எல்.ஏ.க்களாக தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

தமிழக வெற்றிக் கழகத்தில் இருந்து 8 பொது தொகுதிகளில் தலித் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். இதில் 4 வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். காங்கிரஸ் கட்சியில் இருந்து பொது தொகுதியில் போட்டியிட்ட விசுவநாதன் வெற்றி பெற்றார்.

பிராமணர் சமூகத்தில் இருந்து 2 பேர் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் வெற்றி பெற்றுள்ளனர். மயிலாப்பூர் தொகுதியில் இருந்து வெங்கட்ரமணனும், ஸ்ரீரங்கம் தொகுதியில் இருந்து ரமேசும் தேர்வு பெற்றனர். 10 ஆண்டுகளுக்கு பிறகு பிராமண சமூகத்தினர் எம்.எல்.ஏ.க்களாகி உள்ளனர்.

## கூட்டணி அறிவிப்புக்குப் பின் தவெக தலைவர் விஜய்க்கு காங்கிரஸ் தலைவர்கள் நேரில் வாழ்த்து



**சென்னை, மே 07:** தவெக ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி அறிவித்த நிலையில், அக்கட்சியின் மூத்த தலைவர்கள் இன்று விஜய்யை அவரது பனையூர் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். தவெக - காங்கிரஸ் கூட்டணி அறிவிப்புக்குப் பின் நடந்த இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளராஜேஷ் குமார், பிரவீண் சக்கரவர்த்தி, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் விஜய்யை பனையூர் அலுவலகத்தில் சந்தித்தனர்.

அப்போது, கிரிஷ் சோடங்கர் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள், விஜய்க்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

இதையடுத்து, கிரிஷ் சோடங்கர், செல்வப்பெருந்தகை உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களுக்கு விஜய் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது, தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், மூத்த தலைவர் செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.


முன்னதாக, தவெக ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி அறிவித்தது. அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மதவாதசக்திகளுக்கு ஆதரவாக செயல்படக் கூடாது என்ற நிபந்தனையுடன் ஆதரவு அளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், தமிழகத்தில் திமுக உடனான காங்கிரஸ் கூட்டணி முடிவுக்கு வந்துள்ளது. நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும்கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது. அக்கட்சி 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. எனினும், இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள விஜய், அதில் ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே, தவெகவின் பலம் 107 ஆக குறையும்.

சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை எனும் நிலையில், தவெகவுக்கு கூடுதலாக 11 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை.

தற்போது காங்கிரஸ் தரப்பிலிருந்து 5 எம்எல்ஏக்கள் ஆதரவு கிடைத்துள்ள நிலையில், இன்னும் 6 எம்எல்ஏக்கள் தேவைப்படுகின்றனர். இந்தச் சூழலில் அடுத்த ஆதரவு விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகளா என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது கவனிக்கத்தக்கது.

## வேலூர் மாவட்டத்திற்கு மே 15ம் தேதி உள்ளூர் விடுமுறை: மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு




**வேலூர், மே 07:** வேலூர் மாவட்டத்துக்கு மே 15ம் தேதி உள்ளூர் விடுமுறை என மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி அறிவித்தார். பிரசித்திபெற்ற குடியாத்தம் கெங்கை அம்மன் கோயில் சிரசு திருவிழாவை முன்னிட்டு மே 15ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் நடிகர் ரஜினிகாந்த் சந்திப்பு!



**சென்னை, மே 07:** திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை நடிகர் ரஜினிகாந்த் நேரில் சந்தித்து பேசி இருக்கிறார். வெற்றி பெறும் நேரத்தில் மட்டுமல்ல இக்கட்டான சூழ்நிலையிலும் கூட நான் உங்களுடன் இருப்பேன் என நடிகர் ரஜினிகாந்த் ஸ்டாலினிடம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில், மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க கூட்டணி தோல்வியடைந்து ஆட்சியை இழந்தது. இத்தேர்தலில் தி.மு.க கூட்டணி 72 இடங்களைப் பெற்று பின்னடைவைச் சந்தித்ததுடன், பல முக்கிய அமைச்சர்களும் தோல்வியைத் தழுவினர். இதனிடையே திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சி வெளியேறியுள்ளது. மேலும் தமிழகத்தில் தவெக ஆட்சி அமைப்பதற்கு நிபந்தனையுடன் ஆதரவு அளிப்பதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தேர்தல் முடிவுகள் வெளியானது முதல் கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஸ்டாலினைச் சந்தித்து வரும் நிலையில், நேற்று சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் நடிகர் ரஜினிகாந்த் அவரை நேரில் சந்தித்துப் பேசினார். ஸ்டாலின் குடும்பத்தினருக்கு மிகவும் நெருக்கமானவரான ரஜினிகாந்த், இந்த இக்கட்டான தருணத்தில் அவருக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் செயல்பட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது ரஜினிகாந்த் ஸ்டாலினிடம் பேசுகையில், "வெற்றி பெறும் நேரத்தில் மட்டுமல்ல, இக்கட்டான சூழலிலும் நான் உங்களுடன் இருப்பேன்" என்று கூறி இருக்கிறார்.

## தேசிய கல்விக் கொள்கையை முன்மொழியும் ‘பி.எம் ஸ்ரீ’ திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு அரசுக்கு மத்திய அரசு கடிதம்



**புதுடெல்லி, மே 07:** மத்திய அரசின் பி.எம் ஸ்ரீதிட்டத்தைசெயல்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு மீண்டும் கடிதம் எழுதியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளை மேம்படுத்தவும், அதற்கான நிதியைப் பெறவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தங்கள் ஏதுமின்றி கையெழுத்திடுமாறு மத்திய கல்வி அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

2020-ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கையை முழுமையாக அமல்படுத்துவதை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு தமிழ்நாடு தலைமைச் செயலாளருக்கு மத்திய அரசு கடிதம் அனுப்பியுள்ளது.

இத்திட்டத்தில் இணையாத காரணத்தால், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் உள்ள சுமார் ரூ.2,152 கோடி வரையிலான கல்வி நிதியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இத்திட்டம் மும்மொழிக் கொள்கையை உள்ளடக்கி இருந்ததால் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு எதிர்த்து வந்தது.

தற்போது புதிய அரசு அமையவுள்ளதால் தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள் இத்திட்டத்தை அமல்படுத்தும் என மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## 3 மாநில முதல்வர்கள் களமிறங்கியும் வானதி சீனிவாசன் 3-ம் இடத்துக்கு சென்ற கதை!



**கோவை, மே 07:** கோவை மாவட்டத்தின் 10 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 6-ல் தவெகவும், 3-ல் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சியும், ஒரேயொரு தொகுதியில் அதிமுகவும் வென்றன.

கோவை வடக்கு தொகுதியில் 29 பேர் போட்டியிட்ட நிலையில், தெற்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த பாஜக மகளிரணி தேசியத் தலைவரான வானதி சீனிவாசன் தவெக அலையில் சிக்கி 3-ம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.

திமுக வேட்பாளர் செந்தமிழ் செல்வன் 2-ம் இடம் பிடித்தார். வானதி சீனிவாசன் ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மாவை அழைத்து வந்து, மனுதாக்கலுடன் பிரச்சாரத்தை பிரம்மாண்டமாக தொடங்கினார்.

கோவை வடக்கு தொகுதி வானதி சீனிவாசனுக்கா அல்லது அண்ணாமலைக்கா என்ற விவாதங்கள் பாஜகவுக்குள் எழுந்த நிலையில், இரு தரப்பிலும் கடும் விமர்சனங்களை சமூக வலைதளத்தில் பதிவிட்டனர்.

கட்சித் தலைமையின் முடிவை மதிப்பதாக கூறி வானதி சீனிவாசனுக்கு பிரச்சாரத்தை தொடங்கினார் அண்ணாமலை. தொடர்ந்து வானதி சீனிவாசனுக்கு உடல்நலக்குறைவு ஏற்படவே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தார்.

டெல்லி முதல்வர் ரேகா குப்தா கோவைக்கு வந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டார். தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பிடித்துள்ள ஆந்திர முதல்வரான சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோர் உள்ளரங்க பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

மகன்கள் மற்றும் கணவர் என சகல தரப்பிலும் பிரச்சாரத்தில் ஈடுபட்டும் இந்த தேர்தலில் அவர் வெற்றிபெறவில்லை. 42,778 வாக்குகள் பெற்று 3-ம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.

இதே தொகுதியில் விஜய் ரசிகராக இருந்து கட்சியில் வாய்ப்பு பெற்ற சம்பத்குமார் 21,992 வாக்குகள் வித்தியாசத்தில் திமுகவின் செந்தமிழ் செல்வனை வீழ்த்தினார்.

பாஜகவினர் கூறும்போது, “வானதி சீனிவாசன் கடந்த ஓராண்டாகவே வடக்கு தொகுதியை கண்காணித்து வேலை செய்து வந்த நிலையிலும் இந்த தோல்வி ஏற்பட்டுள்ளது.

அரசியலுக்கு புதுவரவான விஜய் அலை அடித்ததுதான் வானதி வெற்றிபெறாததற்கு காரணமே தவிர, உள்கட்சி பிரச்சினை எதுவும் கிடையாது. அனைவரும் ஒருங்கிணைந்து வேலை செய்தனர்” என்றனர்.

## அக்காள் கணவருடன் கள்ள தொடர்பு– பெற்ற குழந்தையை வீசி கொன்ற நர்சு கைது

**நாகர்கோவில், மே 07:** நாகர்கோவில் தேரைக் கால்புதூர், எஸ்.பி.காலனி பகுதியில் ஒரு வீட்டின் அருகே பச்சிளம் குழந்தை பிணம் கிடப்பதாக சுசீந்திரம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

அதன்பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், குழந்தை உடலைக் கைப்பற்றி விசாரணை நடத்தினர். இதில், அந்த குழந்தை பிறந்து சில மணி நேரமே ஆனது தெரியவந்தது.

இது தொடர்பாக அந்தப் பகுதியில் வசிப்பவர்களிடம் நடத்திய தீவிர விசாரணையில், அதே பகுதியை சேர்ந்த ஒரு இளம்பெண் மீது போலீசாருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

தனியார் மருத்துவமனையில் நர்சாக பணியாற்றி வரும் அவரிடம் போலீசார் விசாரணை நடத்திய போது அவர் தான் பச்சிளம் குழந்தையை வீதியில் வீசியவர் என தெரிய வந்தது.

தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் திடுக்கிடும் உண்மைகள் வெளிவந்தன. அதன்விவரம் வருமாறு:-

பிறந்த குழந்தையை வீசிய பெண்ணின் சகோதரிக்கு திருமணமாகியும் குழந்தை இல்லை.

இந்த நிலையில் அவரது கணவர் மதன்குமார் (வயது 43) அடிக்கடி மாமனார் வீட்டிற்கு வந்த போது மனைவியின் தங்கையான நர்சுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இது கள்ளக்காதலாக மாறியது. இந்த உறவினால் நர்சு கர்ப்பமடைந்துள்ளார்.

இதனை தனது குடும்பத்தினருக்கு தெரியாமல் ரகசியமாக மறைத்து வந்துள்ளார்.

## தி.மு.க உடன் கூட்டணியை உடைத்து த.வெ.க வோடு இணைந்த காங்கிரஸ் வெளிப்படையாக பேசிய கனிமொழி



**சென்னை, மே 07:** 1971ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்ற கழகத்தோடு ஒன்றாக இணைந்து பல தேர்தல்களை சந்தித்து வந்த காங்கிரஸ் கட்சி, தற்போது தமிழகத்தில் புதியதாக பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க உள்ள தமிழக வெற்றி கழகத்தோடு இணைந்துள்ள செய்தி அரசியல் வட்டாரத்தில் புயலை கிளப்பியுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, “அவர்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ, அதை தேர்வு செய்வது அவர்களின் உரிமை” என்று கூறியுள்ளார்.


“ நாங்கள் ஒன்றாக இணைந்து பல தேர்தல்களில் வென்றுள்ளோம். தற்போது நடைபெற்றுள்ள தேர்தலில் ஆட்சியை இழந்துள்ளோம். இதுகுறித்து வேறு எதுவும் சொல்வதற்கில்லை, இருந்தபோதிலும் நாங்கள் போராட்டத்தைதொடர்ந்து முன்னெடுப்போம்” .

கடந்த 2024ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட த.வெ.க, மதச் சார்பற்ற கட்சியாக தங்களை முன்னிலைப்படுத்து வரும் நிலையில், இதுகுறித்து பதிலளித்த அவர், “ஒரே சித்தாந்தத்தைகொண்ட கட்சிகள் தமிழகத்தில் இருப்பது, எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது” .




## “கூட்டணியில் இருந்து பிரியும் திமுகவும் காங்கிரஸும் தடித்த வார்த்தைகளை தவிர்க்க வேண்டும்”

**ஜோதிமணி எம்.பி**



**சென்னை, மே 07:** ”காங்கிரஸ் கட்சிக்கு ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, நாம் பரஸ்பரம் மரியாதையோடு கூட்டணியில் இருந்து பிரிவதுதான் நல்லது. இரு புறமும் தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்” என காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “நீண்ட காலம் காங்கிரஸ் கட்சி திமுக கூட்டணியில் பயணித்திருக்கிறது. ஒரு கூட்டணியில் இருக்கும்போது ஏற்ற, இறக்கங்கள் இருக்கத்தான் செய்யும். நானே பொதுவெளியில் முரண்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது தமிழ்நாட்டின் நலன் மற்றும் எதிர்காலம் கருதி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒருமனதாக தவெகவுடன் கூட்டணி சேர்வது என்ற முடிவை எடுத்துள்ளது.

அரசியலில் கூட்டணிகள் சேர்வதும், பிரிவதும் இயல்பானதுதான். திமுக கூட 2014-ல் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பிற்கு ஒரு வாரம் முன்பு நீண்ட கால கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சியை வெளியேற்றியிருக்கிறது. நாங்கள் திடீரென தனித்துப் போட்டியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டோம். அதற்காக நாங்கள் திமுகவை காட்டமாக விமர்சிக்கவில்லை. அது ஒரு அரசியல் நிலைப்பாடு என்றே புரிந்துகொண்டோம்.

இப்பொழுது காங்கிரஸ் கட்சிக்கு ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, நாம் பரஸ்பரம் மரியாதையோடு கூட்டணியில் இருந்து பிரிவதுதான் நல்லது. இருபுறமும் தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

குறிப்பாக, திமுக தேர்தலில் தோல்வியடைந்திருக்கிற சூழ்நிலையில், அதுவும் முதல்வர் மு.க.ஸ்டாலினே தோல்வியடைந்திருக்கிற நிலையில் ,நேற்று வரை கூட்டணியில் இருந்துவிட்டு அது குறித்து மிகுந்த காட்டமாக விமர்சிப்பது அரசியல் நாகரிகமோ, காங்கிரஸ் கட்சியின் கலாச்சாரமோ அல்ல.

காங்கிரஸ் கட்சியும் தொடர்ச்சியாக மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களில் தோல்வி அடைந்திருக்கிறோம். அதற்கு தேசிய அளவில் பல்வேறு காரணங்கள் உள்ளன. அதற்காக யாரும் கூட்டணி வைக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்தால் இந்திய அளவில் காங்கிரஸ் கட்சி இந்தியா கூட்டணியை நடத்த முடியாது.

அதேபோல ராகுல் காந்திக்கு நாங்கள் யாரிடம் இருந்தும் நற்சான்றிதழை எதிர்பார்க்கவில்லை. இந்த நாட்டில் பாஜகவின் பாசிச ஆட்சியை ஆட்சியை சமரசமற்று எதிர்த்து வீழ்த்தக் கூடிய வல்லமை உள்ள ஒரே தலைவர் அவர்தான் என்பதை நாடறியும். அவரை அவதூறு செய்வது யாராக இருந்தாலும் அதை நாங்கள் ஏற்கவோ பார்த்துக் கொண்டிருக்கவோ மாட்டோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அரசியலில் ஏற்கெனவே இருந்த கூட்டணிகள் பிரிவதும், புதிய கூட்டணிகள் உருவாவதும் இயல்பானதுதான் என்கிற அரசியல் புரிதலோடு தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும் பாதுகாக்கும் பயணத்தில் முன்னகர்வோம்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தவெக ஆட்சி அமைக்க ஆதரவு கோரி விஜய் கடிதம் – விசிக ‘பாசிட்டிவ்’ ரியாக்‌ஷன்



**புதுச்சேரி, மே 07:** “தவெகவுக்கு ஆதரவு கேட்டு விசிகவுக்கு கடிதம் வந்துள்ளது. மதசார்பற்ற கட்சிகள் ஆதரவுடன் ஆட்சியமைக்க விஜய் உறுதியாக இருக்கிறார்” என்று விசிக பொதுச் செயலர் ரவிக்குமார் தெரிவித்தார்.

புதுச்சேரியில் மத்திய அரசின் மும்மொழி கொள்கைக்கு எதிராகவும், இந்தி திணிப்பை கண்டித்தும்விடுதலைசிறுத்தைகள் கட்சியினர் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். அண்ணா சிலை அருகே நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு புதுச்சேரி விசிக முதன்மை செயலர் அரிமாத் தமிழன் தலைமை வகித்தார்.

கட்சியின் பொதுச் செயலரும், எம்.பியுமான ரவிக்குமார் கண்டன உரையாற்றினார்.அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “இந்தியை கட்டாயம் படிக்க புதுச்சேரி மக்களிடம் திணித்துள்ளனர். மும்மொழி கொள்கையை நாங்கள் ஏற்பதில்லை. இரு மொழி கொள்கையே சரியானது.

பாஜக கூட்டணி அமைத்த பிறகு அவர்கள் அழுத்தத்துக்கு ரங்கசாமி பணிந்து, நம் மக்களின் மொழி உரிமையை விட்டு கொடுத்துள்ளார். மும்மொழி கொள்கையை அவர் ஏற்கும்போதே விசிக சுட்டிக்காட்டி கண்டித்தது.

மும்மொழி கொள்கையில் மூன்றாவது மொழியாக பிரெஞ்சு இருக்கும் என்பதால் அமைதியாக இருந்தோம். மும்மொழி கொள்கை என்பதே இந்தி திணிப்பின் தந்திரம் என்பது புதுச்சேரியில் பாஜக நிருபித்துள்ளது. இதனால்தான் தமிழகத்தில் மும்மொழி கொள்கையை ஏற்கமாட்டோம் என இதுவரை திமுக அரசு உறுதியாக இருந்தது.

புதுச்சேரி அரசு அரசாணையை திரும்ப பெறவேண்டும். பிரெஞ்சு படிக்க ஏற்பாடு செய்து, இந்தி திணிக்கும் முயற்சிக்கு அரசு உடந்தையாக இருக்கக் கூடாது. இந்தி திணித்தால் ஏற்கமாட்டோம். மிகப் பெரிய மொழி போராட்டமாக மாறும்.

காங்கிரஸ், இடதுசாரிகள், விடுதலைச் சிறுத்தைகள் ஆகியவற்றின் ஆதரவை விஜய் தலைமையிலான தவெக கேட்டுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிலைப்பாட்டை டெல்லியில் தெளிவுப்படுத்தியுள்ளனர்.

விசிக தலைவர் திருமாவளவனுக்கும், இந்த ஆதரவு கேட்டு கடிதம் வந்துள்ளது. இது தொடர்பாக எங்கள் தலைவர் உரிய விளக்கம் அளிப்பார். இதுவரை தவெக மதசார்பற்ற கட்சிகள் ஆதரவுடன் ஆட்சி அமைக்க உறுதியாக இருக்கிறது. அதனால்தான் காங்கிரஸ், இடதுசாரிகள், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆதரவை கோரியுள்ளனர்’ என்றார்.

# சுற்றுலா: 46 கிலோ மீட்டர் தூரத்துக்கு 5 மணி நேரமா எந்த ரயில் தெரியுமா?



பரபரப்பான இந்த அவசர உலகில் பயண நேரத்தை குறைப்பதில் ரயில்கள் மிகவும் முக்கிய பங்காற்றுகின்றன. பயண நேரத்தை குறைப்பதற்காக வந்தே பாரத் மற்றும் விமான பயணங்களை பொதுமக்கள் விரும்பி மேற்கொள்கின்றனர். ஆனால் 46 கிலோ மீட்டர் தூரத்தை 5 மணி நேரம் கடந்து செல்லும் ஊட்டி மலை ரயில் சேவை குறித்து இப்பதிவில் காண்போம்.

ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு ஆயிரக் கணக்கான மக்களை கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்காற்றும் எக்ஸ்பிரஸ் ரயில்கள் பொதுவாக 130 முதல் 150 KM வேகம் வரை இயங்கக் கூடியதாக இருக்கின்றன போக்குவரத்தின் புரட்சியாக புல்லட் ரயில்கள் பார்க்கப்படுகின்றன. ஆனால் மிக மெதுவாக தமிழ்நாட்டில் இயங்கும் ஊட்டி மலை ரயிலில் பயணிக்க வெளிநாட்டு பயணிகளும் அதீத ஆர்வம் காட்டுகின்றனர். யுனெஸ்கோவின் உலக அந்தஸ்து பெற்ற ஊட்டி - மேட்டுப்பாளையம் இடையே இயங்கும் ஊட்டி மலை ரயிலில் பயணிப்பது மிகவும் சுகமான அனுபவமாக இருக்கும்.

ஊட்டியில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் ஊட்டி மலை ரயிலில் ஒரு மணி நேரத்திற்கு சுமார் 9 கிலோமீட்டர் தூரம் மலைகளையும் இயற்கை வளங்களையும் ரசித்தபடி பயணம் செய்யலாம் அதனால் 46 கிலோமீட்டர் தூரத்தை இந்த ஊட்டி மலை ரயில் 5 மணி நேரம் செல்கிறது. இந்திய நாட்டில் இயக்கப்படும் அதிவேக ரயில்களை விட 16 மடங்கு குறைவான வேகத்தில் செல்லும் இந்த ரயில் மேட்டுப்பாளையத்தில் இருந்து முக்கிய ரயில் நிறுத்தங்களாக கெல்லர், குன்னூர், வெலிங்டன், லவ்டேல் ,ஃபெர்ன்ஹில் போன்ற அழகிய மலை வாசஸ்தலங்கள் வாயிலாக நின்று செல்கிறது.

1854 ஆம் ஆண்டு ஊட்டி மலை ரயிலுக்கான முதற் கட்ட பணி தொடங்கினாலும் மலை பாதையை உருவாக்குவதில் பல பிரச்னைகள் வந்ததால் 1891 ஆம் ஆண்டு இந்த பணி உருவாக்கப்பட்டு 1908 ஆம் ஆண்டு நிறைவடைந்தது. 1 மீட்டர் கேஜ் பாதையில், 16க்கும் மேற்பட்ட சுரங்கங்கள், 250 பாலங்கள், 200க்கும் மேற்பட்ட கூர்மையான வளைவுகளையும் கொண்டதால் இந்த யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்ற மலை ரயில் மெதுவாகவும், கவனமாகவும் இயக்கப்படுகிறது.

இயற்கை அழகை கண்டு ரசித்தபடியும் இறங்கி பார்க்கும் படியும் இந்த ரயில் பயணம் உள்ளதால் சுற்றுலாப் பயணிகளின் ஏகோபித்த வரவேற்பை இன்றளவும் பெற்றுள்ளது . மரத்தினால் ஆங்கிலேயர்காலத்தில்இந்தரயில் பெட்டிகள் செய்யப்பட்டிருந்தது .முதல் வகுப்பில் 72 பயணிகளும் இரண்டாம் வகுப்பில் 100 பயணிகளும் இந்த ரயிலில் பயணிக்கமுடியும்.

4 கோச்சுகள் 2016 ஆம் ஆண்டு முதல் இந்த ரயிலில் இணைக்கப்பட்டுள்ளது. ரயில்வே துறையின் ஐஆர்சிடிசி தளத்தில் இந்த ரயிலுக்காக புக்கிங் செய்யலாம். சுற்றுலா பயணிகள் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு இயற்கை எழில் சூழ்ந்த இடங்களை கண்டு ரசித்தாலும் இந்த மலை ரயிலில் பயணம் செய்யாமல் அவர்களது சுற்றுலா முடிவடைவதில்லை. இந்த ஊர்ந்து செல்லும் மலை ரயிலில் செல்லும் அனுபவத்தை வார்த்தைகளால் வர்ணிக்கவே முடியாது சுரங்கம் போன்ற பகுதிகளில் இருட்டில் செல்லும் இந்த மலை ரயிலின் அனுபவத்தை கண்டுதான் ரசிக்க வேண்டும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### நிலக்கரி நிறுவனத்தில் வேலை வேண்டுமா..?

தென்கிழக்கு நிலக்கரி வயல்கள் நிறுவனம் என்பது நாட்டின் மிகப்பெரிய நிலக்கரி உற்பத்தி நிறுவனம். 1985 இல் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் கோல் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஒரு மினரத்னா துணை நிறுவனம். தற்போது, இந்த நிறுவனத்தில் நிரப்பப்பட1,055 மைனிங் சிதார், துணை சர்வேயர், அசிஸ்டெண்ட் போர்மேன் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு பொறியியல் துறையில் சம்மந்தப்பட்ட பிரிவில் டிப்ளமோ, டிகிரி முடித்தவர்களிடம் இருந்து மே 14 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு அறிவிப்பு எண்.: SECL/HR/MP/Recruitment/2026/166

பணி: Mining Sirdar T&S Grade-C

பணி: Dy. Surveyor T&S Grade C (Mining)

பணி: Assistant Foreman (Electrical) Grade C

தகுதி: பொறியியல் துறையில் சம்மந்தப்பட்ட பிரிவில் டிப்ளமோ, பி.இ அல்லது பி.டெக் முடித்திருக்க வேண்டும்.

வயது வரம்பு: 8.4.2026 தேதியின்படி 18 முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளின்படி எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 5 ஆண்டுகள், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகள், மாற்றுத்திறனாளி பிரிவினருக்கு 10 ஆண்டுகள் வயதுவரம்பில் தளர்வும் வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: கணினி அடிப்படையிலான தேர்வு, நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்சி, எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளி பிரிவினர் தவிர, இதர அனைத்து பிரிவினர் ரூ.1,180 செலுத்த வேண்டும். கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: https://secl-cil.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 14.5.2026

## காமராஜரைப் போல மு.க.ஸ்டாலினும்... பிரகாஷ் ராஜ் கருத்து!

**சென்னை, மே 7:**

திமுக சார்பில் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் தோல்வியடைந்தது அரசியல் அரங்கில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, நடிகர் பிரகாஷ் ராஜ் தனது எக்ஸ் தளப் பதிவில் ஸ்டாலின் தோற்றது பற்றி தனது வருத்தங்களைத் தெரிவித்துள்ளார். அதில், "வணக்கம் தமிழ்நாடு. காமராஜர் தோற்றார். மு. க. ஸ்டாலின் தோற்றிருக்கிறார். சமூகம் ரசிகர் மயமாகி இருக்கிறது. அரசியல் மயமாகவில்லை என்பது நிரூபணமாகிறது. அரசியல் விழிப்புணர்வு செய்பவர்களின் பணி என்பது எப்போதும் எதிர்க்கட்சி பணிதான். தொடர்ந்து பயணிப்போம். வெற்றி பெற்றவர்களின் மக்கள் பணி சிறக்க வாழ்த்துகள்" எனப் பதிவிட்டுள்ளார்.

திமுக ஆதரவாகத் தொடர்ந்து பேசி வந்த பிரகாஷ் ராஜ் விஜய்யின் ஜனநாயகன் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## பிளஸ் 2 தேர்வு முடிவுகள் தாமதமாக வாய்ப்பு?

**சென்னை, மே 7:**

தமிழகத்தில் புதிய ஆட்சி அமைவது உள்ளிட்ட அரசியல் சூழல்களால் பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியீடு தள்ளிப்போக வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் பிளஸ் 2 பொதுத்தேர்வு கடந்த மார்ச் 2 முதல் மார்ச் 26 வரை நடைபெற்றது. இத்தேர்வை 8 லட்சத்து 27,475 மாணவ, மாணவிகள் எழுதினர். இவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஏப்.6 முதல் ஏப்.20 வரை நடைபெற்றது. தொடர்ந்து தேர்வு முடிவுகளை வெளியிடுவதற்கான பணிகளை தேர்வுத்துறை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இதனால் பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் திட்டமிட்டபடி மே 8-ஆம் தேதி வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்தநிலையில் தேர்வு முடிவுகள் வெளியீடு, புதிய அரசு அமைவது உள்ளிட்ட காரணங்களால் தள்ளிப்போக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது: பிளஸ் 2 விடைத்தாள் மதிப்பீடு முடிந்ததையடுத்து மாணவர்களின் மதிப்பெண்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து மதிப்பெண் பகுப்பாய்வு உள்ளிட்ட இறுதிக்கட்டப் பணிகளும் ஏறத்தாழ நிறைவு பெற்றுள்ளன. எனினும், தேர்வு முடிவுகளை வெளியிட அரசின் ஒப்புதலைப் பெற வேண்டியுள்ளதால் திட்டமிட்டபடி மே 8-ஆம் தேதி பிளஸ் 2 முடிவுகளை வெளியிடுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. அடுத்த சில நாள்களுக்குள் தமிழகத்தில் புதிய அரசு அமைந்ததும், உரிய ஒப்புதல் பெற்று தேர்வு முடிவுகளை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அவர்கள் தெரிவித்தனர். இதற்கிடையே, தமிழகத்தில் 2026-2027-ஆம் கல்வியாண்டில் பொறியியல் படிப்புகளுக்கான இணையவழி விண்ணப்பப்பதிவு கடந்த மே 3 முதல் தொடங்கி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## 101 தொகுதிகளில் வைப்புத் தொகையை இழந்த அதிமுக!

**சென்னை, மே 7:**



தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் 169 தொகுதிகளில் போட்டியிட்ட அதிமுக 47 தொகுதிகளில் வெற்றி பெற்றது. மீதமுள்ள 122-இல் பெரும்பாலான தொகுதிகளில் மூன்றாம் இடத்துக்கு அதிமுக தள்ளப்பட்டுள்ளது.

அதிலும், 101 அதிமுக வேட்பாளர்கள் குறிப்பாக முன்னாள் அமைச்சர்கள் பதிவான மொத்த வாக்குகளில் 6-இல் ஒரு பங்கு வாக்கு பெறாததால் வைப்புத் தொகையை இழந்துள்ளனர்.

சென்னையில் அதிமுக முன்னாள் அமைச்சர்களான ராயபுரத்தில் போட்டியிட்ட ஜெயக்குமார், அண்ணா நகரில் போட்டியிட்ட கோகுல இந்திரா, ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்ட வளர்மதி, மாதாவரத்தில் போட்டியிட்ட மூர்த்தி ஆகியோர் வைப்புத் தொகையை இழந்துள்ளனர்.

அதேபோல், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதியை எதிர்த்துப் போட்டியிட்ட ஆதிராஜாராம், திருச்சி கிழக்கில் தவெக தலைவர் விஜய்யை எதிர்த்துப் போட்டியிட்ட ஜி.ராஜசேகரன் மற்றும் மதுரை கிழக்கு, கம்பம் உள்ளிட்ட 101 தொகுதிகளில் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர்கள் வைப்புத் தொகையை இழந்துள்ளனர்.

இதற்கு முன்பு கடந்த 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் 7 இடங்களில் அதிமுக வைப்புத் தொகையை இழந்தது குறிப்பிடத்தக்கது.

## தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவளிப்பது எங்கள் முதுகில் குத்தும் செயல்: திமுக

**சென்னை, மே 7:**

தவெகவுக்கு ஆதரவு அளிப்பது என காங்கிரஸ் எடுத்துள்ள முடிவு, திமுகவின் முதுகில் குத்தும் செயல் என்று அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் சரவணன் அண்ணாதுரை விமர்சித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள சரவணன் அண்ணாதுரை, "தவெகவுக்கு ஆதரவு அளிப்பது என்ற முடிவை காங்கிரஸ் கட்சி எடுத்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் இந்த நிலைப்பாடு மிகவும் குறுகிய பார்வை கொண்டது; தொலைநோக்குப் பார்வை அற்றது. இப்படி ஒரு முடிவை எடுப்பதற்காக அவர்கள் வருந்த நேரிடும்.

2029 நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்த தேர்தலில் பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்றிவிட முடியும் என நாங்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால், காங்கிரஸ் இப்போது எடுத்துள்ள இந்த முடிவு காரணமாக, அவர்கள் ஒரு நிலையற்ற கூட்டணி கட்சியாக மாறிவிட்டார்கள். காங்கிரஸ் கட்சியை நம்ப முடியாது என்ற ஒரு கருத்து நாடு முழுவதும் பரவியுள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு நாள்தான் ஆகிறது. அதற்குள் காங்கிரஸ் தவெகவுக்கு ஆதரவு அளிக்க முடிவு செய்திருப்பது, முதுகில் குத்தும் செயல். பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் ஆகியவற்றுக்கு இடம் கொடுக்க விரும்பவில்லை என்றும் எனவே இந்த முடிவை எடுப்பதாகவும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இந்த முடிவை காங்கிரஸ் கட்சி முழு மனதுடன் எடுத்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் இந்த முடிவு (இண்டியா) கூட்டணியில் உள்ள பிற கட்சிகளிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும். மக்கள் அளித்த தீர்ப்புக்கு எதிராக அவர்கள் செயல்படுகிறார்கள் என்றால், அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ், உத்தவ் தாக்கரே உள்ளிட்ட தலைவர்களின் மனதில் இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? நாங்கள் ஒருபோதும் காங்கிரஸ் கட்சியை ஏமாற்றியதில்லை.

2016-ம் ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கணிசமான வெற்றியை அக்கட்சி பெற்றது. அப்போது, பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் தரப்பினர், ராகுல் காந்தியை கேவலமாக விமர்சித்தனர். அந்த சூழலில், எங்கள் தலைவர் மு.க. ஸ்டாலின், ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தினார். அது ஒரு துணிச்சலான நடவடிக்கையாக அமைந்தது. அங்கிருந்துதான் 2024 தேர்தலில் ராகுல் காந்தியின் செல்வாக்கு உயர்ந்தது. இவை அனைத்தும் திமுகவின் கடின உழைப்பாலும் அது செலவிட்ட வளங்களாலுமே சாத்தியமானது. அதனால்தான், அவர்களால் இப்போது ஐந்து தொகுதிகளில் வெற்றி பெற முடிந்தது.

தவெக பெரும்பான்மை இலக்கை எட்ட 11 இடங்கள் தேவைப்படுகின்றன. 47 இடங்களைக் கொண்டுள்ள அதிமுக நிபந்தனையற்ற ஆதரவை வழங்க தயராக இருக்கிறது. நீங்கள் விஜய்யாக இருந்தால் யாருடைய பேச்சைக் கேட்பீர்கள்? ஐந்து இடங்களைக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியையா அல்லது 47 இடங்களைக் கொண்டுள்ள அதிமுகவையா? காங்கிரஸ் கட்சி மிகத் தவறான ஒரு முடிவை எடுத்துவிட்டதாக நான் கருதுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

## திமுகவுடனான கூட்டணி தேர்தலுக்கானது; முடிந்துவிட்டது! காங்கிரஸ்

**சென்னை, மே 7:**



திமுகவுடனான கூட்டணி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கூட்டணி மட்டுமே என்று காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் புதன்கிழமை தெரிவித்தார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த மாணிக்கம் தாகூர் தெரிவித்தாவது:

"தவெகவுடன் ஆட்சி அமைப்பது குறித்து நேற்றிரவு அனைத்து எம்பி, எம்எல்ஏக்கள் மற்றும் மூத்த நிர்வாகிகள் ஆலோசனை செய்து முடிவெடுத்துள்ளோம். காங்கிரஸின் முடிவை இன்னும் சற்று நேரத்தில் கட்சிப் பொதுச் செயலாளர் கிரிஷ் சோடங்கர் அறிவிப்பார்.

தமிழ்நாட்டில் பாஜகவும் ஆர்எஸ்எஸும் நுழைந்துவிடக் கூடாது என்பதே காங்கிரஸின் நிலைப்பாடு. விஜய் மதவாத அரசியலுக்கு எதிராக உள்ளார். திமுகவுடனான கூட்டணி 2026 பேரவைத் தேர்தலுக்காக அமைக்கப்பட்டது. அந்த தேர்தல் முடிந்துவிட்டது" எனத் தெரிவித்துள்ளார்.

## மே 8-இல் 19 மாவட்டங்களுக்கு பலத்த மழை எச்சரிக்கை!

**சென்னை, மே 7:**

தமிழகத்தில் ஒருசில இடங்களில் மே 11 வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், வரும் 8-ஆம் தேதி 19 மாவட்டங்களுக்கு பலத்த மழைக்கான மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வானிலை மையம் சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு: தெற்கு மத்தியப் பிரதேசத்தின் மையப்பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரை விதர்பா, மரத்வாடா, உள் கர்நாடகம், தமிழ்நாடு வழியாக வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக புதன்கிழமை (மே 6) முதல் மே 11 வரை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை நகரின் ஒருசில பகுதிகளில் புதன்கிழமை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் புதன்கிழமை(மே 6) இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். தொடர்ந்து, கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், ஈரோடு, தேனி, தென்காசி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வியாழக்கிழமை (மே 7) இடி மின்னல், பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும்.

மஞ்சள் எச்சரிக்கை: மேலும், நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை (மே 8) இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். எனவே, அந்த மாவட்டங்களுக்கு 3 நாள்களும் 'மஞ்சள்' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கூட்டணி அறிவிப்புக்குப் பின் தவெக தலைவர் விஜய்க்கு காங்கிரஸ் தலைவர்கள் நேரில் வாழ்த்து

**சென்னை, மே 7:**

தவெக ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி அறிவித்த நிலையில், அக்கட்சியின் மூத்த தலைவர்கள் இன்று விஜய்யை அவரது பனையூர் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். தவெக - காங்கிரஸ் கூட்டணி அறிவிப்புக்குப் பின் நடந்த இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராஜேஷ் குமார், பிரவீண் சக்கரவர்த்தி, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் விஜய்யை பனையூர் அலுவலகத்தில் சந்தித்தனர்.

அப்போது, கிரிஷ் சோடங்கர் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள், விஜய்க்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

இதையடுத்து, கிரிஷ் சோடங்கர், செல்வப்பெருந்தகை உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களுக்கு விஜய் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது, தவெக பொதுச்செயலாளர் ஆனந்த், மூத்த தலைவர் செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

முன்னதாக, தவெக ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி அறிவித்தது. அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மதவாத சக்திகளுக்கு ஆதரவாக செயல்படக் கூடாது என்ற நிபந்தனையுடன் ஆதரவு அளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழகத்தில் திமுக உடனான காங்கிரஸ் கூட்டணி முடிவுக்கு வந்துள்ளது. நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது. அக்கட்சி 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. எனினும், இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள விஜய், அதில் ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே, தவெகவின் பலம் 107 ஆக குறையும். சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை எனும் நிலையில், தவெகவுக்கு கூடுதலாக 11 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை. தற்போது காங்கிரஸ் தரப்பிலிருந்து 5 எம்எல்ஏக்கள் ஆதரவு கிடைத்துள்ள நிலையில், இன்னும் 6 எம்எல்ஏக்கள் தேவைப்படுகின்றனர். இந்தச் சூழலில் அடுத்த ஆதரவு விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகளா என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது கவனிக்கத்தக்கது.

## க்ரைம் கார்னர்

### சிறுமிக்கு பாலியல் தொல்லை! தவெக நிர்வாகி 'பாம்பு' தினேஷ் கைது!

**திருச்சி, மே 7:**



சென்னையில் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தவெக நிர்வாகி பாம்பு தினேஷை காவல்துறையினர் கைது செய்தனர்.

சென்னை காசிமேடு பகுதியில் தேர்தல் வாக்குப் பதிவு நாளான ஏப்ரல் 23 ஆம் தேதி வீட்டுக்கு வெளியே 10 வயது சிறுமி விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது சிறுமியை மிரட்டி தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று பாம்பு தினேஷ் என்பவர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார். இதுதொடர்பாக சிறுமியின் பெற்றோர் ராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். அதனடிப்படையில் விசாரணை மேற்கொண்ட காவல்துறையினர் பாம்பு தினேஷ் மீது போக்சோ வழக்கு பதிந்து நேற்றிரவு கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கைது செய்யப்பட்ட தினேஷ் தவெகவின் 43 வது வார்டு வட்டச் செயலாளர் என்பதும், அக்கட்சிக்காக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### சென்னை விமான நிலையத்தில் ரூ.2 கோடி மதிப்புள்ள உயர்ரக கஞ்சா பறிமுதல்: 2 இளைஞர்கள் கைது




**சென்னை, மே 7:**

சென்னை விமான நிலையத்தில் ரூ.2 கோடி மதிப்புள்ள உயர்ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. தாய்லாந்தில் இருந்து கஞ்சாவை கடத்தி வந்த 2 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து தாய் ஏர்வேஸ் பயணிகள் விமானம் சென்னைக்கு நேற்று வந்தது. அந்த விமானத்தில் வந்த பயணிகளையும், அவர்களின் உடைமைகளையும் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, கேரள மாநிலத்தைச் சேர்ந்த 28 வயது ஆண் பயணி மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. சுற்றுலா விசாவில் தாய்லாந்து சென்று வந்த அவரது உடைமைகளை சோதனை செய்த போது, ரூ.1 கோடி மதிப்புள்ள 900 கிராம் உயர்ரக பதப்படுத்தப்பட்ட ஹைட்ரோபோனிக் கஞ்சா மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்தனர். இதையடுத்து, கஞ்சாவை பறிமுதல் செய்த அதிகாரிகள் அவரை கைது செய்து விசாரணை நடத்தினர். அவர் கொடுத்த தகவலின்படி, தாய்லாந்தில் இருந்து சென்னை வந்து கொண்டிருந்த லயன் ஏர்வேஸ் விமானத்தில் இருக்கும் பயணிகளை தீவிர சோதனை செய்ய முடிவு செய்தனர்.

அந்த விமானம் சென்னை வந்ததும், பயணிகளையும், அவர்களின் உடைமைகளையும் அதிகாரிகள் சோதனை செய்தபோது, சுற்றுலா விசாவில் தாய்லாந்து சென்று வந்த கேரள மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர் ரூ.1 கோடி மதிப்புள்ள 900 கிராம் உயர்ரக பதப்படுத்தப்பட்ட ஹைட்ரோபோனிக் கஞ்சா இருந்ததை கண்டுபிடித்தனர்.

இதையடுத்து, கஞ்சாவை பறிமுதல் செய்த அதிகாரிகள், அவரையும் கைது செய்தனர். விசாரணையில் இருவரும் கடத்தல் குருவிகளாக செயல்பட்டது தெரியவந்தது.

## விளையாட்டு செய்திகள்

### ஐசிசி டி20 தரவரிசையில் இந்தியா முதலிடத்தில் நீடிப்பு

**துபாய், மே 7:**

ஐசிசி டி20 தரவரிசையில் இந்திய கிரிக்கெட் அணி நம்பர் ஒன் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

சர்வதேச டி 20 அணிகள் தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் 3 முறை சாம்பியனான இந்திய அணி முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற டி 20 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றிருந்தது. இதன் மூலம் டி20 உலகக் கோப்பை வரலாற்றில் சாம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்ட முதல் அணி என்ற சாதனையை இந்தியா படைத்திருந்தது.

அத்துடன், மூன்றாவது முறையாகக் கோப்பையை வென்ற முதல் அணி என்ற சாதனையையும் இந்தியா படைத்தது. சமீபத்திய டி20 அணிகளின் தரவரிசையானது, மே 2025 முதல் விளையாடப்பட்ட அனைத்துப் போட்டிகளையும் 100 சதவீதமாகவும், அதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளில் விளையாடப்பட்ட போட்டிகளை 50 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த வகையில் நடப்பு சாம்பியனான இந்திய அணி 275 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறது. இங்கிலாந்து அணி 262 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும், ஆஸ்திரேலியா 258 புள்ளிகளுடன் 3-வது இடத்திலும் உள்ளன. நியூஸிலாந்து (247), தென் ஆப்பிரிக்கா (244), பாகிஸ்தான் (240), மேற்கு இந்தியத் தீவுகள் (233), வங்கதேசம் (225), இலங்கை (221), ஆப்கானிஸ்தான் (220) ஆகிய அணிகள் முறையே 4 முதல் 10-வது இடங்களில் உள்ளன.

### உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்த இந்திய வீரர்கள்

**அல்மட்டி, மே 7:**

உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி (ஷாட்கன்) கஜகஸ்தானில் நடந்து வருகிறது. இதில் ஆண்களுக்கான ஸ்கீட் பிரிவின் தகுதி சுற்று 2 வது நாளாக நேற்று நடந்தது. இதில் இந்திய வீரர்கள் யாரும் முதல் 8 இடங்களுக்குள் முன்னேறாததால் இறுதிபோட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தனர். தகுதி சுற்று முடிவில் மைராஜ் அகமது கான் ன் 18வது இடமும், ஆனந்த்ஜீத் சிங் நருகா 38வது இடமும், குர்ஜோத் சிங் கங்குர்ரா 54வது இடமும் பெற்று ஏமாற்றமளித்தனர் .

இதில் ரேங்கிங் புள்ளிக்காக பங்கேற்ற இந்திய வீரர்கள் பவ்தேக் சிங் கில் 19வது இடமும், அபய் சிங் செகோன்71வது இடமும் பெற்றனர். இதன் பெண்கள் பிரிவில் இந்திய வீராங்கனைகள் ரைசா தில்லான் 17வது இடமும், பரிநாஸ் தலிவால் 32வது இடமும், கனேமத் செகோன் 33வது இடமும் பெற்று சொதப்பினர்.

### பெண்கள் ஆசிய கோப்பை கால்பந்து: இந்தியா தோல்வி

**சென்னை, மே 7:**

12 அணிகள் இடையிலான 17 வயதுக் குட்பட்டோருக்கான பெண்கள் ஆசிய கோப்பை கால்பந்து போட்டி சீனாவின் சுசோவ் நகரில் நடந்து வரு கிறது. இதில் இந்தியா நேற்று தனது 2வது லீக்கில் (பி பிரிவு) ஜப்பானுடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் 0-3 என்ற கோல் கணக்கில் இந்திய அணி 2வது தோல்வியை தழுவியது. கடைசி லீக்கில் லெபனைன நாளை மறுதினம் சந்திக்கிறது.

# அமைச்சர்களை முடிவு செய்ய சேலம் அப்பா பைத்தியம் சாமி ஜீவசமாதிக்கு புறப்பட்ட முதல்வர் ரங்கசாமி

**புதுச்சேரி, மே 7:**

பதவியேற்பு தினத்தை முன்னிட்டு, அமைச்சர்களை முடிவு செய்ய முதல்வர் ரங்கசாமி சேலம் அப்பா பைத்தியம் சாமி ஜீவசமாதிக்கு புறப்பட்டார்.



புதுவை முதல்வர் ரங்கசாமி தீவிரமான முருக பக்தர். ஆன்மிகவாதியான இவர், ஜோதிட அடிப்படையில் முடிவுகளை எடுப்பார். தனது ஆன்மிக குருவாக அப்பா பைத்தியம் சாமிகளை ஏற்றுள்ளார். அவருக்காக கோரிமேட்டில் தனது வீட்டின் வளாகத்திலேயே திருக்கோயில் கட்டியுள்ளார். சனிக்கிழமை தோறும் இக்கோயிலில் பூஜை செய்து அன்னதானம் வழங்கப்படுகிறது.

வழக்கமாக தேர்தல் காலங்களில் முதல்வர் ரங்கசாமி சேலத்திலுள்ள ஸ்ரீ சற்குரு அப்பா பைத்தியம் சாமிகளின் ஜீவ சமாதிக்கு சென்று வழிபடுவார். அங்குதான் வேட்பாளர்கள், கூட்டணி, வேட்பு மனு தாக்கல் தேதி முடிவு செய்தார். அதேபோல் திருச்செந்தூர் முருகன் கோயில், மதுரை மீனாட்சி கோயிலுக்கும் சென்று வழிபட்டார். தேர்தலுக்கு முன்பு சென்று முடிவுகளை எடுத்து தற்போது தேர்தலில் வென்று 5-வது முறையாக முதல்வராகிறார். அவருடன் பேச மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா ஆகியோர் புதுச்சேரி வந்து நேரம் கேட்டுள்ள நிலையில் இன்று காலை முதல்வர் ரங்கசாமி ஆன்மிக பயணம் புறப்பட்டார். அவருடன் என்.ஆர்.காங்கிரஸ் எம்எல்ஏக்கள், நிர்வாகிகளும் புறப்பட்டனர். இதுதொடர்பாக என்ஆர் காங்கிரஸ் தரப்பில் கேட்டதற்கு, "சேலம் அப்பா பைத்திய சாமி ஜீவசமாதி சென்று வணங்குகிறார்.

அங்குள்ள அப்பா பைத்தியம் சாமிக்கு பிடித்தமான மேரி பிஸ்கெட், ஜாங்கிரி ஆகியவற்றை படைத்து வழிபடுவார். அங்கு பதவியேற்பு நாள், நேரம் கணிக்கிறார். அமைச்சர்களையும் முடிவு செய்யும் முக்கிய முடிவுகளை எடுக்கிறார்.

தொடர்ந்து பொள்ளாச்சி வேட்டைக்காரபுத்தூர் சென்று அழுக்கு சித்தரையும் வழிபடுகிறார். இதன்பிறகு புதுச்சேரி திரும்புகிறார். அடுத்து திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கும் செல்லவும் வாய்ப்புள்ளது." என்றனர்.

# கொளத்தூரில் ஸ்டாலின் தோல்விக்கு சேகர்பாபு தான் காரணம்: முன்னாள் எம்எல்ஏ பரந்தாமன் குற்றச்சாட்டு

**சென்னை, மே 7:**

கொளத்தூரில் மு.க.ஸ்டாலின் தோல்விக்கு சேகர் பாபு தான் காரணம் என திமுக முன்னாள் எம்எல்ஏ பரந்தாமன் குற்றம் சாட்டியுள்ளார். சட்டப்பேரவை தேர்தலில் கொளத்தூரில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் எதிர்த்து போட்டியிட்ட தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபுவிடம், 8,795 வாக்குகள் வித்தியாசத்தில் மு.க.ஸ்டாலின் தோல்வியை தழுவியது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



இந்நிலையில், "தலைவர் தோல்விக்கு காரணமானவர் எப்படி கொஞ்சமும் வெட்கம், பயம், கூச்சம் எதுவும் இல்லாமல் தலைவர் முன்பு வந்து முகத்தை காட்டி நிற்கிறார்" என்று திமுக முன்னாள் எம்எல்ஏ பரந்தாமன், சேகர் பாபுவை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்ட பதிவில், "எனக்கு இரவு முழுவதும் உறக்கமில்லை. என் கண்களை மூடினாலும் மு.க.ஸ்டாலின் முகமே வந்து கொண்டு இருக்கிறது. தேர்தல் அரசியலில் வெற்றி தோல்வி என்பது இயற்கை. இவை இரண்டின் உச்சத்தையும் பார்த்த இயக்கம் திமுக.

ஆனால், தமிழகம் முழுவதும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட தலைவரின் தொகுதியை கவனிக்கத் தவறியவர் மீது தயவு தாட்சன்யம் இன்றி தலைமை நடவடிக்கை எடுத்தால் தான் உண்மையான திமுக தொண்டன் நிம்மதியாய் இருப்பான்.

தலைவர் தோல்விக்கு காரணமானவர் எப்படி கொஞ்சமும் வெட்கம், பயம், அச்சம், கூச்சம் எதுவும் இல்லாமல் தலைவர் முன்பு வந்து முகத்தைக் காட்டி நிற்கிறார்? நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னது இதைத்தானா சேகர்பாபு அவர்களே?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 2021 தேர்தலில் எழும்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பரந்தாமன், இந்த முறை வேட்பாளராக நிறுத்தப் படவில்லை. இதற்கு காரணம் சேகர்பாபு தான் என்று பேச்சு நிலவி வந்தது. தற்போது, தேர்தல் முடிவுகள் வெளிவந்த நிலையில், சேகர் பாபுவை நேரடியாகவே முன்னாள் எம்எல்ஏ பரந்தாமன் தாக்கி பேசியிருப்பது, திமுக வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக செயலாற்றுவோம்: சீமான் உறுதி

**சென்னை, மே 7:**

பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாம் தமிழர் கட்சி செயலாற்றும் என்று அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

அண்மையில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு வாக்களித்த அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றிபெற்ற அனைத்து சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், பொறுப்பேற்கவுள்ள விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக புதிய அரசுக்கும் என்னுடைய வாழ்த்துகள்.



தமிழகம் எனும் தாய் நிலத்தின் நலனுக்காகவும், உயர்வுக்காகவும் தொடர்ச்சியாக களப்பணியாற்றி, மண்ணுக்கும், மக்களுக்குமான ஆக்கப்பூர்வ மாற்று அரசியலை பொறுப்புள்ள எதிர்க்கட்சியாய் நின்று நாம் தமிழர் கட்சி செயலாற்றும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தோல்வி குறித்து கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் 2021-ம் ஆண்டு கட்சி நிர்வாகிகள், வேட்பாளர்களுடன் கண் கலங்கியபடி பேசிய பழைய காணொளி பதிவு தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி பரவி வருகிறது.

"நான் வென்று சட்டப்பேரவைக்குள் செல்லவேண்டும் என்று எனக்கு விருப்பமில்லை. நாட்டை வெல்லாமல், ஒரு சில சீட்டுகளை வெல்வதில் ஒன்றும் ஆக போவதில்லை.

ஆனாலும் வென்று உள்ளே போயிருக்கலாம். மக்களின் குரலாக ஒலித்திருக்கலாம்.

இது நம் தோல்வி அல்ல. மக்களின் தோல்வி." என்று அதில் சீமான் பேசியிருப்பது தற்போது நெட்டிசன்களிடையே பேசும் பொருளாகி இருக்கிறது.

## வணிகச் செய்திகள்

### கச்சா எண்ணெய் விலை உயர்வு! இந்திய ரூபாயின் மதிப்பு கடும் வீழ்ச்சி!



**நியூயார்க், மே 7:**

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 95.04 ஆக கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையேயான போர், கச்சா எண்ணெய் விலை உயர்வு, உலகப் பொருளாதாரம் உள்ளிட்ட காரணங்களால் இந்திய ரூபாயின் மதிப்பு அவ்வப்போது வீழ்ச்சியடைந்து வருகிறது.

இந்நிலையில் இன்று(புதன்கிழமை) வர்த்தக நேர தொடக்கத்தில் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 95.04 ஆக சரிந்துள்ளது.

நேற்று இந்திய ரூபாயின் மதிப்பு 95.43 என்ற அளவில் சரிந்த நிலையில் இன்று 24 பைசா உயர்ந்து 95.04 ஆக உள்ளது. கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய் 108 டாலராக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் 85% எரிசக்தி, பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் இந்திய முதலீடுகள் அதிகரிப்பு!



புதுடெல்லி, மே 7:

அமெரிக்காவின் மேரிலாண்டில் திங்கள்கிழமை நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்ற அமெரிக்க வர்த்தக அமைச்சக அதிகாரி பிராண்டன் ரெமிங்டன் இதுகுறித்து கூறியதாவது: இந்தியாவிலிருந்து அதிக முதலீடுகளை அமெரிக்கா வரவேற்கிறது. தற்போதைய தரவுகளின்படி, இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு வரும் அந்நிய நேரடி முதலீடு ரூ. 1.6 லட்சம் கோடியை (16.4 பில்லியன் டாலர்) கடந்துள்ளது. இந்த முதலீடு சுமார் 70,800 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. இது தவிர, அமெரிக்காவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் ரூ. 3,140 கோடி (330 மில்லியன் டாலர்) அளவுக்கு இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன. ரூ.14,273 கோடி மதிப்பில் இந்திய நிறுவனங்கள் ஏற்றுமதி செய்கின்றன என்றார்.

அதுபோல, கடந்த 2023-இல் இந்திய தொழிலக கூட்டமைப்பு (சிஐஐ) வெளியிட்ட 'அமெரிக்க மண்ணில் இந்திய வேர்கள்' என்ற அறிக்கையில், 'அமெரிக்காவில் இந்திய அந்நிய நேரடி முதலீடு ரூ.3.8 லட்சம் கோடி (40 பில்லியன் டாலர்) என்ற அளவில் உள்ளதாகவும், இது 4.25 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக வழிவகுத்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. அதுபோல அமெரிக்க ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களில் இந்திய நிறுவனங்கள் ரூ. 9,516 கோடி முதலீடு செய்துள்ளதாகவும், நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு திட்டங்களுக்காக ரூ. 1,855 கோடி பங்களிப்பு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த வாரம், அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் உள்ள 'ஆர்கனோந் அண்ட் கோ' நிறுவனத்தை ரூ. 1.1 லட்சம் கோடி (12 பில்லியன் டாலர்) மதிப்பில் கையகப்படுத்தியுள்ளதாக இந்தியாவின் சன் ஃபார்மசூட்டிக்கல் நிறுவனம் அறிவித்தது. அதுபோல, 12-க்கும் அதிகமான இந்திய நிறுவனங்கள் அமெரிக்காவில் புதிய முதலீடுகளை தற்போதைய மேரிலாண்ட் முதலீட்டாளர் மாநாட்டில் அறிவித்துள்ளன.

## கடன் தள்ளுபடி வாக்குறுதிகளை நம்ப வேண்டாம்: ரிசர்வ் வங்கி எச்சரிக்கை

புதுடெல்லி, மே 7:

கடன் தள்ளுபடி செய்வதாக கூறி பொதுமக்களை ஏமாற்றும் தவறான பிரசாரங்கள் குறித்து இந்திய ரிசர்வ் வங்கி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. வங்கிகள் அல்லது வங்கி சாரா நிதி நிறுவனங்களில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை என்று கூறி மோசடி அமைப்புகள் மக்களை நம்ப வைக்கின்றன.

கடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகக் கூறி, அங்கீகாரம் இல்லாத கடன் தள்ளுபடி சான்றிதழ்களை வழங்கி கட்டணம் வசூலிக்கின்றனர். சேவை கட்டணம் அல்லது சட்டக் கட்டணம் என்ற பெயரில் கடன் வாங்கியவர்களிடமிருந்து பணத்தைப் பறிக்கின்றனர். கடன் தள்ளுபடி பெற்றுத் தருவதாகக் கூறும் நபர்களையோ அல்லது அங்கீகரிக்கப்படாத அமைப்புகளையோ தொடர்பு கொள்ள வேண்டாம் என ரிசர்வ் வங்கி எச்சரித்துள்ளது.

## வர்த்தக ஒத்துழைப்பு: இந்தியா - ஜமைக்கா ஒப்பந்தம்

கிங்ஸ்டன், மே 7:


இந்தியா மற்றும் ஜமைக்கா நாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. ஜமைக்கா நாட்டுக்கு 9 நாள் பயணமாகச் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் காமினா ஜே.ஸ்மித்தை திங்கள்கிழமை சந்தித்து விரிவாகப் பேசினார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் ஜெய்சங்கர் கூறியதாவது: டிஜிட்டல் பரிமாற்றம், கலாச்சாரம், விளையாட்டு மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை ஆகிய துறைகளில் சமீபத்தில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கரீபியன் நாடுகளுக்கான வர்த்தக நுழைவாயிலாக ஜமைக்கா திகழ்கிறது. இந்நாட்டின் கிட்சன் நகரில் இந்திய உதவியுடன் ஊரக வாழ்வாதாரத் திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட ஜமைக்காவிற்கு மனிதாபிமான அடிப்படையில் 30 டயாலிசிஸ் இயந்திரங்கள், 40 மீன்பிடிப் படகுகள் மற்றும் 200 ஜிபிஎஸ் கருவிகளை இந்தியா வழங்கி வருகிறது. மேலும், ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் 2028-29 கால கட்டத்திற்கு இந்தியா தற்காலிக உறுப்பினராக ஜமைக்கா அளிக்கும் ஆதரவை வரவேற்கிறோம். இவ்வாறு அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

## ரூ.23,437 கோடி மதிப்பில் மூன்று ரயில்வே திட்டங்கள்



புதுடெல்லி, மே 7:

பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில், ரயில்வே அமைச்சகத்தின் ரூ.23,437 கோடி மதிப்பிலான மூன்று முக்கியத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களில் உள்ள 19 மாவட்டங்களை உள்ளடக்கிய இந்தத் திட்டங்கள் மூலம், இந்திய ரயில்வேயின் தற்போதைய வழித்தடங்களுடன் கூடுதலாக சுமார் 901 கி.மீ. தொலைவு இணைக்கப்பட உள்ளது.

இந்த திட்டத்தின்படி, நாக்தா மதுரா, குண்டக்கல் வாடி, புர்ஹ்வால் சீதாப்பூர் ஆகிய வழித்தடங்களில் 3-வது மற்றும் 4-வது ரயில் பாதைகள் அமைக்கப்பட உள்ளன.

ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், "அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட வழித் தடங்களில் இந்தப் புதிய பாதைகள் அமைக்கப்படுவதால், முக்கிய நகரங்களுக்கு இடையேயான ரயில் இயக்கம் சீராகும். பிராந்திய மக்களின் வேலை வாய்ப்பு, சுய தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும்" என்றார்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 34-ல் இருந்து (தலைமை நீதிபதி உட்பட) 38 ஆக உயர்த்தும் திட்டத்துக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## வங்கிகளில் கேட்பாரற்ற முதலீடுகளைத் தேட வலைதள வசதி: உச்சநீதிமன்றத்தில் ரிசர்வ் வங்கி தகவல்

புதுடெல்லி, மே 7:

வங்கிகளில் பணம் வைப்பு செய்தவர்கள் இறந்துவிடும் நிலையில் அவரின் வாரிசுதாரர்கள் அந்த முதலீடுகள் குறித்த தகவல்களை அறிவதற்கான நடைமுறையை உரு வாக்க வலியுறுத்தி பத்திரிகையாளர் சுசேதா தலால் என்பவர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது இந்தத் தகவலை ரிசர்வ் வங்கி தெரிவித்தது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா, விஜய் பிஷ்னோய் ஆகியோர் அடங்கிய அமர்வில் இந்த மனு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது ரிசர்வ் வங்கி தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், 'பல்வேறு வங்கிகளில் கோரப்படாமல் உள்ள முதலீடுகள் குறித்த விவரங்களை அறிய 'யுடிஜிஏஎம்' என்ற வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 44 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இந்த வலைதளத்தில், வங்கி முதலீடுகள் குறித்த தரவுகளைத் தேடியுள்ளனர்' என்றார்.

இதைக் கேட்ட மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் பிரசாந்த் பூஷண், 'பல்வேறு வங்கிகளில் முதலீடு செய்தவர் இறந்துவிடும் நிலையில், அவரின் வாரிசுதாரர்கள் அந்த முதலீடுகள் குறித்த தகவல்களை எப்படி பெறுவது என்பதுதான் மனுவில் எழுப்பப்பட்டுள்ள முக்கிய கேள்வி. மேலும், வாடிக்கையாளர்கள் தேட வசதியாக அனைத்து வங்கிகளும் கோரப்படாத முதலீடுகள் குறித்த தரவுகளை 'யுடிஜிஏஎம்' என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது. ஆனால், தபால்நிலையங்கள் மற்றும் காப்பீடு நிறுவனங்களிலும் கோரப்படாத முதலீடுகளை எப்படி அறிய முடியும்? இந்தத் தரவுகளை ஒருங்கிணைக்க எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. எனவே, அனைத்து விதமான முதலீடுகள் குறித்த தரவுகளையும் முதலீட்டாளரின் வாரிசுதாரர்களும் அடையாளம் காணும் வகையில் நடைமுறை வகுக்கப்பட வேண்டும்' என்றார். இதற்குப் பதிலளித்த மத்திய அரசு தரப்பு வழக்குரைஞர், 'இதுதொடர்பாக விரிவான பதில் மனு தயார் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் தாக்கல் செய்யப்படும்' என்றார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், 'இதுதொடர்பான விரிவான விவரங்களுடன் ஒரு வாரத்துக்குள் மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்' என்று உத்தரவிட்டு, விசாரணையை வரும் 19-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம்: இந்தியா முதலிடம்

புதுடெல்லி, மே 7:

உலகிலேயே வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் பணம் அனுப்பப்படும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

கடந்த 2024-ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து பிற நாடுகளுக்கு பணிக்குச் சென்ற நபர்கள் ரூ.12.8 லட்சம் கோடியை (137 பில்லியன் டாலர்கள்) தாய்நாட்டுக்கு அனுப்பியுள்ளதாக புலம்பெயர்ந்தோருக்கான ஐ.நா. அமைப்பு தெரிவித்தது.

மேலும் ரூ.9.4 லட்சம் கோடிக்கு மேல் (100 பில்லியன் டாலர்) வெளிநாட்டில் இருந்து பணம் பெற்ற ஒரே நாடாகவும் இந்தியா திகழ்கிறது எனவும் அந்த அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இந்தியா, மெக்ஸிகோ, பிலிப்பின்ஸ் மற்றும் பிரான்ஸ் ஆகிய 4 நாடுகள் 2024-ஆம் ஆண்டில் வெளிநாட்டில் இருந்து அதிகளவில் பணம் பெறும் நாடுகளின் பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பிடித்துள்ளன.

குறிப்பாக இந்தியா, கடந்த 2010-ஆம் ஆண்டு முதல் வெளிநாடுகளில் இருந்து அதிகப் பணம் பெறும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்து வருகிறது. 2010-இல் இதன் மதிப்பு ரூ.5 லட்சம் கோடி, 2015-இல் ரூ.6.4 லட்சம் கோடி, 2020-இல் ரூ.7.8 லட்சம் கோடியாகவும் இருந்த நிலையில் 2024-இல் ரூ.12.8 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. தெற்காசிய பிராந்திய த்தில் அதிக வளர்ச்சி: இந்தியா, வங்கதேசம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு வெளிநாடுகளில் இருந்து அதிகளவில் பணம் அனுப்பப்படுவதால் 2024-ஆம் ஆண்டில் தெற்காசிய பிராந்தியத்தில் இதன் வளர்ச்சி 11.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2024-ஆம் ஆண்டு பிற நாடுகளுக்கு அதிகப் பணம் அனுப்பும் பட்டியலில் ரூ.9.4 லட்சம் கோடியுடன் உலகளவில் முதல் நாடாக அமெரிக்கா விளங்குகிறது. அடுத்தடுத்த இடங்களில் சவூதி அரேபியா (ரூ.4.3 லட்சம் கோடி), ஸ்விட்சர்லாந்து (ரூ.3.7 லட்சம் கோடி), ஜெர்மனி (ரூ.2.2 லட்சம் கோடி) உள்ளன. வெளிநாட்டில் 6.20 லட்சம் மாணவர்கள்: 2022-ஆம் ஆண்டில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் சீனாவில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்றனர். இந்தப் பட்டியலில் 6.20 லட்சம் மாணவர்களுடன் இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளது. அடுத்தடுத்த இடங்களில் உஸ்பெகிஸ்தான் (1.50 லட்சம் மாணவர்கள்), வியத்நாம் (1.34 லட்சம் மாணவர்கள்), ஜெர்மனி (1.26 லட்சம் மாணவர்கள்) உள்ளன.

## பதவி விலக மறுப்பு - அடம்பிடிக்கும் மம்தா பானர்ஜி

கொல்கத்தா, மே 7:

கொல்கத்தாவில் மம்தா பானர்ஜி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

நான் தோல்வி அடையவில்லை. எனவே நான் ராஜ்பவனுக்கு செல்லப்போவது இல்லை. நான் எனது ராஜினாமா கடிதத்தை சமர்பிக்க மாட்டேன். தேர்தல் ஆணைய உதவியோடு வாக்கு எந்திரங்களில் முறைகேடு நடந்துள்ளது. வாக்கு எண்ணும் மையத்தில் நான் தாக்கப்பட்டேன். நீதிமன்றம் கூட எங்களுக்கு நீதி வழங்க தவறிவிட்டது. என் வாழ்நாளில் இவ்வளவு மோசமான தேர்தலை பார்த்ததே இல்லை. வாக்காளர் பட்டியலில் இருந்து 90 லட்சம் பேரை நீக்கினர். நீதிமன்றம் சென்ற பிறகு 32 லட்சம் பேரை சேர்க்கப்பட்டனர்.

சோனியா காந்தி, ராகுல், ஹேமந்த் சோரன், அரவிந்த் கேஜரிவால், உத்தவ் தாக்கரே, அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ் ஆகியோர் என்னைத் தொடர்புகொண்டு பேசினர். இந்தியா கூட்டணியைச் சேர்ந்த தலைவர்கள் அனைவரும் என்னுடன் துணை நிற்பதாகக் கூறியுள்ளனர். எங்களுடைய ஒற்றுமை அடுத்தடுத்த நாள்களில் மேலும் வலுவடையும் என நினைக்கிறேன். அகிலேஷ் யாதவ் இன்று இங்கு வருவதாகக் கூறினார். ஆனால், நான்தான் மறுத்துவிட்டேன். நாளை வருவதாகக் கூறியுள்ளார். மேற்கு வங்கத்திற்கு அகிலேஷ் நாளை வருவார். இவ்வாறு அவர் கூறினார்.

## பீகார்: தண்டவாளங்களை கடக்க முயன்ற போது ரெயில் மோதி பெண்கள் 2 பேர் பலி



பாட்னா, மே 7:

பீகார் மாநிலம் கயா மாவட்டத்தின் மான்பூர் பகுதியை சேர்ந்த நந்த்லால் சிங்கின் மனைவியான 62 வயது இந்தர் தேவி, மற்றும் தனது மருமகளான 45 வயது சங்கீதா தேவியை ரெயில் நிலையத்தில் வழியனுப்பி வைப்பதற்காக, இந்தர் தேவி பக்தியார்பூர் ரெயில் நிலையத்திற்கு வந்திருந்தார்.

நடை மேம்பாலத்தை பயன்படுத்துவதற்கு பதிலாக, குறுக்கு வழியில் தண்டவாளத்தை கடந்து செல்ல முயன்றனர். இந்த நிலையில் அதே ரெயில் நிலையத்திற்கு வந்த ஒரு நபர் அவர்களுக்கு தண்டவாளத்தை கடக்க உதவுவது சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது. அந்த நபர் கடைசி வினாடியில் பிளாட்பாரத்தில் ஏறி தப்பினார். ஆனால், டெல்லியில் இருந்து மால்டா டவுன் நோக்கி அதிவேகமாக வந்து கொண்டிருந்த பராக்கா எக்ஸ்பிரஸ் ரெயில், தண்டவாளத்தை கடக்க முயன்ற அந்த இரு பெண்கள் மீதும் மோதியது. விபத்து நடந்த உடனேயே ரெயில்வே பாதுகாப்புப் படை மற்றும் ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சோகமான சம்பவம் அந்த ரெயில் நிலையத்தில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியது.

## மம்தா பானர்ஜி தோல்விக்கு இதுதான் காரணம்: சித்தராமையா

பெங்களூரு, மே 7:

மேற்கு வங்காளத்தில் 3 முறை முதல்-மந்திரியாக பதவி வகித்த மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் சமீபத்திய தேர்தலில் தோல்வியை தழுவியுள்ளது.

இதுபற்றி கர்நாடகாவின் முதல்-மந்திரி சித்தராமையா செய்தியாளர்களிடம் இன்று பேசும்போது, 15 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர் மம்தா பானர்ஜி. ஆனால் ஆட்சிக்கு எதிரான மக்களின் மனநிலை இந்த தேர்தலில் பெரும் பங்காற்றியிருக்கும் என நான் உணருகிறேன் என்றார். மேற்கு வங்காளத்தில் தேர்தல் ஆணையம் மேற்கொண்ட சிறப்பு தீவிர சீர்திருத்த பணியால், வாக்காளர் பட்டியலில் இருந்து 91 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்டன. இதுவும் கூட அவருடைய தோல்விக்கு ஒரு காரணியாக இருக்க கூடும் என்று கூறினார். கேரளாவில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்று உள்ளது. இதுபற்றி குறிப்பிட்ட சித்தராமையா, இது ஆச்சரியம் அளிக்கும் முடிவு. நாங்கள் கேரளாவில் அதிகம் எதிர்பார்த்தோம். எதிர்பார்த்ததற்கும் மேலாக எங்களுக்கு கிடைத்துள்ளது என்று கூறினார். மேற்கு வங்காளத்தின் பதவிக்காலம் மே 7-ந்தேதியுடன் முடிவடைய உள்ள சூழலில், மாநிலத்தில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29-ந்தேதி 2-ம் கட்ட தேர்தலும் நடத்தப்பட்டது. வரலாறு காணாத வகையில் 2 கட்ட தேர்தலிலும் 90 சதவீதத்திற்கும் கூடுதலாக வாக்குகள் பதிவாகின.

## மேற்கு வங்கம்: 9 மாவட்டங்களில் ஓரிடத்தில்கூட வெல்லாத திரிணமூல்



புதுடெல்லி, மே 7:

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 23 மாவட்டங்களில் 9-இல் ஓரிடத்தில்கூட திரிணமூல் காங்கிரஸ் வெற்றி பெறவில்லை.

294 உறுப்பினர்களைக் கொண்ட மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு இரு கட்டங்களாகத் தேர்தல் நடத்தப்பட்டு, கடந்த திங்கள்கிழமை வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. ஒரு தொகுதியில் தேர்தல் ரத்து செய்யப்பட்டதால், 293 தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அசுர பலத்துடன் பாஜக: பெரும்பான்மைக்கு 147 இடங்கள் தேவை என்ற நிலையில், 207 இடங்களுடன் பாஜக அமோக வெற்றி பெற்று, ஆட்சியைக் கைப்பற்றியது. இது மூன்றில் இரு பங்குக்கும் அதிக பெரும்பான்மையாகும். கடந்த முறை பாஜக 77 இடங்களில்தான் வென்றிருந்தது.

கடந்த தேர்தலில் 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கைப்பற்றியிருந்த திரிணமூல் காங்கிரஸுக்கு இம்முறை 80 தொகுதிகளே கிடைத்தன. கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி, பவானிபூர் தொகுதியில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாஜகவின் சுவேந்து அதிகாரியிடம் 15,000-க்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

இந்த மாபெரும் வெற்றியின் மூலம் 15 ஆண்டுகால திரிணமூல் காங்கிரஸ் ஆட்சிக்கு முடிவுரை எழுதி, ஆட்சியை தன்வசமாக்கியுள்ளது பாஜக. நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த மாநிலமான மேற்கு வங்கத்தில் முதல் முறையாக பாஜக ஆட்சியமைக்கிறது.

9 மாவட்டங்களில் ஓரிடம்கூட இல்லை: மேற்கு வங்க தேர்தல் பிரசாரத்தில் பேசிய பிரதமர் மோடி, பல மாவட்டங்களில் திரிணமூல் காங்கிரஸுக்கு ஓரிடம்கூட கிடைக்காது என்று கூறியிருந்தார். அவர் கூறியதைப் போலவே, மொத்தமுள்ள 23 மாவட்டங்களில் 9-இல் திரிணமூல் காங்கிரஸ் கணக்கைத் தொடங்கவில்லை. இந்த 9 மாவட்டங்களிலும் 63 தொகுதிகள் உள்ளன.

மாநிலத்தின் வட பகுதியில் 54 தொகுதிகளில் 40-இல் பாஜக வெற்றி பெற்றுள்ளது.

இங்கு 14 இடங்கள் மட்டுமே திரிணமூல் காங்கிரஸுக்கு கிடைத்தன. சிறுபான்மையினர் அதிகம் வாழும் முர்ஷிதாபாத், மால்டா, உத்தர தினஜ்பூர் உள்பட சிறுபான்மையினர் அதிகம் வாழும் மாவட்டங்களில் உள்ள 43 தொகுதிகளில் பாஜகவின் பலம் 8-இல் இருந்து 19-ஆக அதிகரித்துள்ளது. அதேநேரம், திரிணமூல் காங்கிரஸின் பலம் 35-இல் இருந்து 22-ஆக சரிந்துள்ளது.

ஹுமாயுன் கபீரின் ஆம் ஜனதா உன்னயன் கட்சி உள்பட சிறிய கட்சிகள் வாக்குகளைப் பிரித்ததால், பாஜகவுக்கு சாதகமானதாக அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

# யுஏஇ துறைமுகம் மீது ஈரான் தாக்குதல்: 3 இந்தியர்கள் படுகாயம் - பிரதமர் மோடி கண்டனம்



**துபாய், மே 7:**

ஐக்கிய அரபு அமீரகத்தின் (யுஏஇ) புஜைரா துறைமுகத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதில் 3 இந்தியர்கள் படுகாயம் அடைந்தனர். இதற்கு பிரதமர் நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஈரான் இடையே கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல்போர் நடைபெற்றது. தற்போது இருதரப்பு இடையே போர் நிறுத்தம் அமலில் உள்ளது. எனினும் ஹார்முஸ் ஜலசந்தியைஈரானும் அமெரிக்காவும் முடக்கி வைத்து உள்ளன. இந்த சூழலில் அமெரிக்காவின் நட்பு நாடான ஐக்கிய அரபு அமீரகத்தின் புஜைரா துறைமுகத்தின் மீது ஈரான் ராணுவம் நேற்று முன்தினம் 15 ஏவுகணைகளை வீசியது. மேலும் ட்ரோன்கள் மூலமும் தாக்குதல் நடத்தியது. இதில் துறைமுக பகுதியில் பணியாற்றிய 3 இந்தியர்கள் படுகாயம் அடைந்தனர்.

இதுகுறித்து அமீரக ராணுவ வட்டாரங்கள் கூறும்போது, "ஈரான் வீசிய ஏவுகணைகளில் பெரும்பாலானவற்றை நடுவானில் அழித்துவிட்டோம். ஆனால் சில ஏவுகணைகள் எண்ணெய் கிடங்குகளில் விழுந்து தீப்பற்றியது. 3 தொழிலாளர்கள் காயமடைந்தனர். அவர்களுக்கு மருத்துவமனையில் உயர்தர சிகிச்சை அளிக்கப்படுகிறது'' என்று தெரிவித்தன. இதுதொடர்பாக பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: ஐக்கிய அரபு அமீரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 3 இந்தியர்கள் காயமடைந்து உள்ளனர். உள்கட்டமைப்புகள், பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுவதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த நேரத்தில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு இந்தியா துணை நிற்கும்.

ராஜ்ஜியரீதியிலும் பேச்சுவார்த்தை மூலமும் அமைதியை ஏற்படுத்த இந்தியா ஆதரவு அளிக்கும். உலகத்தின் எரிசக்தி தேவை, பிராந்திய அமைதியை கருத்தில் கொண்டு ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற கடல்வழி போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஈரான் ராணுவ வட்டாரங்கள் கூறும்போது, "அமெரிக்க ராணுவத்தின் ஏற்பாட்டின்பேரில் ஐக்கிய அரபு அமீரகதுணையுடன் ஹார்முஸ் ஜலசந்தியில் சில சரக்கு கப்பல்கள் கடந்து சென்று உள்ளன. இதன்காரணமாக ஐக்கிய அமீரக துறைமுகத்தின் மீது ஏவுகணை தாக்குதலை நடத்தினோம். அமெரிக்கா அத்துமீறினால் தகுந்த பதிலடி கொடுப்போம். என்று தெரிவித்தன

## ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸுக்கு விமானங்கள் வாங்கியதில் ஊழல்: ராஜபட்சவுக்கு சம்மன்

**சிறிலங்கா, மே 7:**

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு 2014-2017 காலகட்டத்தில் விமானங்கள் வாங்கப்பட்டதில் நடைபெற்ற ஊழல் தொடர்பாக, அந்நாட்டின் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபட்ச வரும் 12-ஆம் தேதி விசாரணைக்கு ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் முக்கியக் குற்றவாளியான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முன்னாள் சிஇஓ கபில சந்திரசேனை, ராஜபட்ச ரூ. 6 கோடி (இலங்கை மதிப்பில்) லஞ்சம் பெற்றதை ஒப்புக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

கபில சந்திரசேனைக்கு செவ்வாய்க்கிழமை ஜாமீன் வழங்கப்பட்ட நிலையில், கடுமையான அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே அவரிடம் இந்த வாக்குமூலம் பெறப்பட்டதாக அவரின் வழக்குரைஞர்கள் நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளனர்.

## ரஷியா - உக்ரைன் 'போட்டி' போர் நிறுத்தம்

**மாஸ்கோ, மே 7:**

2-ஆம் உலகப் போரில் ஜெர்மனியை வீழ்த்தியதன் 81-ஆவது வெற்றி தினத்தைக் கொண்டாடும் வகையில் ரஷியா, உக்ரைன் ஆகிய இரு நாடுகளும் வெவ்வேறு 2 நாள்களில் தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளன.

வெற்றி தினத்தைக் கொண்டாடத்தையொட்டி, ரஷியா சார்பில் 8, 9 ஆகிய தேதிகளில் 2 நாள்கள் போர் நிறுத்தத்தை அந்நாட்டு அதிபர் புதின் அறிவித்தார்.

ரஷியாவின் இந்தப் போர்நிறுத்தத்தை 'ஏமாற்று வேலை' என்று விமர்சித்த உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதலே எங்கள் தரப்பு 2 நாள்களுக்கு போர்நிறுத்தம் அமலுக்கு வரும் என்று தெரிவித்தார். ரஷியாவின் வெற்றி தினக் கொண்டாட்டத்தில் அந்நாட்டுத் தலைநகர் மாஸ்கோவில் ஆண்டுதோறும் நடைபெறும் பிரம்மாண்ட ராணுவ அணிவகுப்பில், இந்த முறை ராணுவத் தளவாடங்கள் காட்சிப்படுத்தப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதைச் சுட்டிக்காட்டி விமர்சித்த ஸெலென்ஸ்கி, 'உக்ரைன் ட்ரோன் தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக, ரஷியாவால் இந்த ஆண்டு அணிவகுப்பில் ராணுவ தளவாடங்களைக் கொண்டுவர முடியவில்லை. இது அவர்களின் பலவீனத்தைக் காட்டுகிறது' என்றார்.

அதேநேரம், வெற்றி தின கொண்டாட்டங்களுக்கு இடையூறு விளைவிக்க உக்ரைன் முயன்றால், அந்நாட்டு தலைநகர் கீவ் மீது கடும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்படும் என ரஷியா எச்சரித்துள்ளது.

5 பேர் உயிரிழப்பு: இந்தப் போர்நிறுத்த அறிவிப்புகளுக்கு இடையேயும் உக்ரைனின் எரிசக்தி நிலையங்கள் மீது ரஷியா நடத்திய ட்ரோன் தாக்குதல்களில் 5 பேர் உயிரிழந்தனர். ரஷியாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களைக் குறிவைத்து உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதல்களை ரஷிய பாதுகாப்புப் படை முறியடித்தது. கடந்த காலங்களில் ஈஸ்டர் பண்டிகையின்போது அறிவிக்கப்பட்ட தற்காலிக போர்நிறுத்தங்கள் இரு தரப்பாலும் மீறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் பட்டாசு ஆலை வெடிவிபத்து: 26 பேர் பலி


**பெய்ஜிங், மே 7:**

சீனாவின் ஹுனான் மாகாணத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 26 பேர் உயிரிழந்தனர்; 61 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால், உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

ஹுனான் மாகாணத்தின் லியுயாங் நகரில் உள்ள ஹுவாஷெங் பட்டாசு நிறுவனத்தில் இந்த விபத்து நிகழ்ந்தது. இதன் விளைவாக வெடிப்புச் சத்தத்தால் பல கி.மீ. தொலைவுக்கு கட்டடங்கள் அதிர்ந்து சேதமடைந்தன.

விபத்து குறித்த தகவலறிந்ததும், சுமார் 1,500 தீயணைப்பு வீரர்கள், மீட்புப் படையினர் மற்றும் மருத்துவக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். இடிபாடுகளில் சிக்கியவர்களைத் தேடும் பணியில் 18 ட்ரோன்கள், 3 மீட்பு ரோபோக்கள் ஈடுபடுத்தப்பட்டன. துணைப் பிரதமர் ஜாங் குயோகிங் நேரில் சென்று மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டார். விபத்து நடந்த ஆலைக்கு அருகிலேயே 2 வெடிமருந்து கிடங்குகள் உள்ளதால், மேலும் விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்க அந்தச் சுற்றுவட்டார மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு, அப்பகுதி தடை மண்டலமாக அறிவிக்கப்பட்டது. பட்டாசு ஆலைகள் மூடல்: விபத்து நடந்த ஹுவாஷெங் நிறுவனப் பொறுப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, லியுயாங் மற்றும் அதன் அருகேயுள்ள சாங்ஷா நகரில் உள்ள அனைத்து பட்டாசு ஆலைகளையும் உடனடியாக மூட அரசு உத்தரவிட்டுள்ளது.

# 2 இந்திய செய்தியாளர்களுக்கு புலிட்சர் பரிசு





**நியூயார்க், மே 7:**

இந்திய செய்தியாளர்கள் ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா ஆகியோருக்கு புலிட்சர் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செய்தியாளர் ஜோசப் புலிட்சர் நினைவாக, அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகம் சார்பில் ஆண்டுதோறும் புலிட்சர் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி இதழியல், இலக்கியம், உள்ளிட்ட துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நேற்று முன்தினம் புலிட்சர் விருது அறிவிக்கப்பட்டது. இதில் இந்திய செய்தியாளர்கள் ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா ஆகியோர் உள்ளனர்.

டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பாக, "டிராப்டு" என்ற பெயரில் முன்னணி ஊடகத்தில் விழிப்புணர்வு கார்ட்டூன் தொடர் வெளியானது. இந்த படைப்புக்காக ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா மற்றும் ஜப்பானை சேர்ந்த நடாலி ஒபிகோ பியர்சனுக்கு புலிட்சர் விருது அறிவிக்கப்பட்டு உள்ளது. மகாராஷ்டிர தலைநகர் மும்பையை சேர்ந்த ஆனந்த் ஆர்கே, இந்திய கடற்படை மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்காக புதுமையான கலை படைப்புகளை உருவாக்கி கொடுத்திருக்கிறார்.

டெல்லியை சேர்ந்த செய்தியாளர் சுபர்ணா சர்மா, அல் ஜெசீரா, பிபிசி, இந்து குழுமத்தின் பிரன்ட்லைன் இதழ் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களில் செய்திகள், கட்டுரைகளை எழுதியுள்ளார். ஜப்பானை சேர்ந்த நடாலி ஒபிகோ பியர்சன் பிரதமர் மோடியின் அரசியல் வளர்ச்சி குறித்து அவர் எழுதிய செய்திகள், கட்டுரைகள் உலக அளவில் பெரும் கவனத்தை ஈர்த்தன.

# போர் நிறுத்தம்! ஈரான் - அமெரிக்கா இடையே விரைவில் ஒப்பந்தம்!



**வாஷிங்டன், மே 7:**

ஈரான் - அமெரிக்கா இடையே போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் - அமெரிக்கா இடையே போர் தொடங்கி இரண்டு மாதங்களைக் கடந்திருக்கும் நிலையில், கடந்த ஏப். 8 முதல் சுமார் ஒரு மாதமாக போர்நிறுத்தம் அமலில் இருக்கிறது.

இருப்பினும், ஈரானின் ஹோர்முஸ் நீரிணை முடக்கம் மற்றும் அமெரிக்காவின் ஈரானுக்கு எதிரான கடல்வழி முற்றுகை மட்டும் தொடர்ந்து வருகிறது.

இதனிடையே, போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், அணுசக்தி தொடர்பான விரிவான பேச்சுவார்த்தை நடத்தவும் ஈரானுடன் ஒரு பக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வெள்ளை மாளிகை இறுதி செய்துள்ளதாக ஆக்ஸியோஸ் செய்தி நிறுவனம் புதன்கிழமை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அடுத்த 48 மணி நேரத்தில் ஈரானிடம் அமெரிக்கா பதிலை எதிர்நோக்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் தொடங்கியதில் இருந்து இதுவரை இல்லாத வகையில் ஒப்பந்தம் கையெழுத்தாவது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒரு பக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஈரான் அணு ஆயுத செறிவூட்டலுக்குத் தற்காலிகத் தடை விதிப்பது, அமெரிக்காவால் முடக்கப்பட்டுள்ள பில்லியன் கணக்கான நிதியை ஈரானுக்கு விடுவிப்பது, ஹோர்முஸ் நீரிணையில் கட்டுப்பாடுகளை விலக்குவது உள்ளிட்ட 14 அம்சங்கள் அடங்கியிருப்பதாக ஆக்ஸியோஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கத் தூதர்கள் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோருக்கும் ஈரானிய மூத்த அதிகாரிகளுக்கு இடையே நேரடியாகவும் மத்தியஸ்தர்கள் மூலமாகவும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த ஒப்பந்தத்தின்படி, 30 நாள்களுக்குள் ஹோர்முஸ் நீரிணை போக்குவரத்துக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும், அமெரிக்காவின் கடற்படை முற்றுகையும் படிப்படியாக நீக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாகிஸ்தானின் கராச்சியில் வீசும் வெப்ப அலை: 10 பேர் உயிரிழப்பு

**இஸ்லாமாபாத், மே 7:**

கடந்த 2018-க்குப் பிறகு மிக அதிகபட்சமாக, நகரில் கடந்த திங்கள்கிழமை வெப்பநிலை 111 டிகிரி ஃபாரன்ஹிட்டைத் தாண்டி பதிவானது. நகரின் பல்வேறு பகுதிகளில் இருந்து திங்கள்கிழமை மட்டும் 5 சடலங்கள் மீட்கப்பட்டன. 'ஹீட் ஸ்ட்ரோக்' பாதிப்புடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த மேலும் 5 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். வரும் நாள்களிலும் வெப்ப அலை நீடிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில், கராச்சியில் நிலவும் மின்வெட்டுப்பிரச்னையும் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ளது.

## சத்: ராணுவ நிலை மீது பயங்கரவாதிகள் தாக்குதல்; 23 வீரர்கள் பலி



**ஜேமினா, மே 7:**

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சத் நாட்டில் போகோ ஹரம் என்ற கிளர்ச்சியாளர்கள் குழு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அவ்வப்போது ஊருக்குள் புகுந்து மக்கள் மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பி செல்லும்.

அண்டை நாடுகளிலும் அவர்கள் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சூழலில், லேக் சத் பகுதியில் இருந்த ராணுவ நிலை மீது போகோ ஹரம் குழுவினர் நேற்று பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதில், ராணுவ வீரர்கள் 23 பேர் பலியாகி உள்ளனர். தவிர, தாக்குதலில் 26 வீரர்கள் காயமடைந்து உள்ளனர் என தகவல் தெரிவிக்கின்றது. எனினும், பதிலுக்கு வீரர்களும் தாக்குதல் நடத்தினர். இது கோழைத்தன தாக்குதல் என ஜனாதிபதி மகமத் இத்ரித் டெபி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்து உள்ளார். கடந்த 15 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான மக்களை போகோ ஹரம் குழுவினர் படுகொலை செய்துள்ளனர். இவர்களின் பிடியில் இருந்து தப்புவதற்காக, லட்சக்கணக்கானோர் வேறு இடங்களுக்கு புலம் பெயர்ந்து சென்று விட்டனர் என ஐ.நா. அமைப்பு தெரிவித்து உள்ளது.

## ஈரானின் பிடியில் உலகளாவிய பொருளாதாரம் சிக்கியுள்ளது: அமெரிக்கா

**வாஷிங்டன் டி.சி. மே 7:**

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி நடத்திய தாக்குதலில் அந்நாட்டில், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பலியானார்கள். இந்த தாக்குதல், ஏறக்குறைய 40 நாட்களாக நீடித்து வந்த நிலையில், ஏப்ரல் 8-ந்தேதி 2 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதனால், பதற்றம் சற்று தணிந்தது. எனினும் ஈரான், அமெரிக்கா இடையே நிரந்தர போர் நிறுத்தத்திற்காக பாகிஸ்தான் நாட்டில் வைத்து, 21 மணிநேரம் நீடித்த அமைதி பேச்சுவார்த்தையில் உடன்பாடு எதுவும் முடிவாகவில்லை. இந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என அமெரிக்கா தெரிவித்தது.

இதனை தொடர்ந்து, ஈரானிய துறைமுகங்களை முற்றுகையிடுவதுடன், நீடித்த பொருளாதார நெருக்கடி நீடிக்கும் என அமெரிக்கா தெரிவித்தது. இதனால், மேற்காசிய பகுதியில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது. எனினும் போர் நிறுத்த நீட்டிப்புக்கான அறிவிப்பை டிரம்ப் வெளியிட்டார். அதனால், ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே போர் பதற்றம் தணிந்துள்ளது. இந்த சூழலில், அமெரிக்காவின் ஆயுத படைகளின் தலைமை தளபதி டேன் கெய்ன், அமெரிக்க போர் துறைக்கான மந்திரி பீட் ஹெக்சேத் உடன் செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தினார்.

அப்போது அவர் ஈரானை கடுமையாக சாடினார். கடந்த 7 வாரங்களாக ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில், வர்த்தக கப்பல்களை தாக்கியும், தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்படுத்தியும் வருகிறது என்று கூறினார். வர்த்தக போக்குவரத்து செயல்பாடுகளை தடுத்து நிறுத்தி, உலக பொருளாதார பாதிப்பை ஈரான் ஏற்படுத்தி வருகிறது என்றார்.

உலகளாவிய விநியோக சங்கிலியை ஈரான் ஆயுதம் போன்று பயன்படுத்தி வருகிறது. பணய கைதி போன்று, உலகளாவிய பொருளாதாரம் ஈரானின் பிடியில் சிக்கியுள்ளது என கூறியுள்ளார்.

# கிழக்கு பசிபிக் பகுதியில் படகு மீது அமெரிக்க ராணுவம் திடீர் தாக்குதல் .. 3 பேர் உயிரிழப்பு

**வாஷிங்டன், மே 7:**

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக அமெரிக்க அதிபர் டிரம்ப் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். குறிப்பாக பென்டானில்போதைப்பொருளை ஒரு பேரழிவு ஆயுதமாக டிரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது. பென்டானிலை ஒரு சாதாரண போதைப்பொருளாகப் பார்க்காமல், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான ரசாயன ஆயுதமாக டிரம்ப் அரசு வகைப்படுத்தி கடுமையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

கரீபியன் மற்றும் பசிபிக் பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான போதைப்பொருள் படகுகள் மீது அமெரிக்க ராணுவம் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் போதைப்பொருள்



கடத்தல் கும்பலைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு, கரீபியன் கடற்பகுதியில் போதைப்பொருள் கடத்தியதாக சந்தேகிக்கப்படும் ஒரு படகு மீது அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில் 2 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று கிழக்கு பசிபிக் கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்த ஒரு படகு மீது அமெரிக்க ராணுவம் திடீர் தாக்குதல் நடத்தியது. இதில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

இதுபற்றி அமெரிக்க ராணுவத்தின் தெற்கு கட்டளைப்பிரிவு எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது. அதில், "கிழக்கு பசிபிக் பகுதியில் அறியப்பட்ட போதைப்பொருள் கடத்தல் பாதை வழியாகச் சென்று கொண்டிருந்த படகு மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அந்த படகில் போதைப்பொருள் கடத்தப்பட்டதை உளவுத்துறை உறுதிப்படுத்தியது. இந்த நடவடிக்கையின்போது மூன்று ஆண் போதைப்பொருள் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். அமெரிக்க ராணுவ படைகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை" என்று கூறப்பட்டுள்ளது.

*On May 5, at the direction of #SOUTHCOM commander Gen. Francis L. Donovan, Joint Task Force Southern Spear conducted a lethal kinetic strike on a vessel operated by Designated Terrorist Organizations. Intelligence confirmed the vessel was transiting along known narco-trafficking... pic. twitter.com/CmK9HVK0oG*

*— U.S. Southern Command (@Southcom) May 6, 2026*

தாக்குதல் நடவடிக்கை தொடர்பான ஒரு வீடியோவையும் அமெரிக்க ராணுவம் வெளியிட்டுள்ளது. அதில், ஒரு படகு வேகமாக செல்வதையும், பின்னர் ஏற்பட்ட ஒரு பெரிய குண்டுவெடிப்பில் அந்தப் படகு தீப்பிடித்து எரிவதையும் காண முடிகிறது. லத்தீன் அமெரிக்க கடல் பகுதிகளில், போதைப்பொருள் கடத்துவதாக கருதப்படும் படகுகள் மற்றும் கப்பல்களை தகர்க்கும் இந்த நடவடிக்கையானது கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இருந்து தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த தாக்குதல்களில் இதுவரை 191 பேர் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார் விஜய்!






# ஆட்சியை பிடிக்க திமுக-அதிமுக கூட்டணி?

# நாளை 19 மாவட்டங்களுக்கு பலத்த மழை எச்சரிக்கை!

# பிளஸ் 2 தேர்வு முடிவுகள் தாமதமாக வாய்ப்பு?

# யுஎஇ துறைமுகம் மீது ஈரான் தாக்குதல்: 3 இந்தியர்கள் படுகாயம் - பிரதமர் மோடி கண்டனம்

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 07.05.2026 வியாழக்கிழமை இலவச இ–பேப்பர்